# நற்பலன்கள் தரும் கொங்குவாக்கும் மரபுக் கோயில்களும்


தொகுப்பு அன்பர்

**குருஜி R.I.D. சிவா**



வெளியிடுவோர்

**துரைமுருகர் சிவா மரபு சித்தாந்த தியான சபை**

பழனி - திண்டுக்கல் மெயின் ரோடு,
கணக்கன்பட்டி அருகில், பழனி,
திண்டுக்கல் மாவட்டம் - 624 613,
தமிழ்நாடு.
www.templedivinesuccess.com



| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | சூன் 2004 |
| இரண்டாம் பதிப்பு | : | நவம்பர் 2013 |
| விலை | : | ரூ. **60/-** |
| பக்கங்கள் | : | 176 |


ஆன்மிக முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய சிறந்த ஆன்மிக புத்தகங்கள், ஆன்மிக சொற்பொழிவு சி.டி.க்கள் கிடைக்குமிடம்

1. **துரைமுருகர் சிவா மரபு சித்தாந்த தியான சபை**
   பழனி - திண்டுக்கல் மெயின் ரோடு,
   கணக்கன்பட்டி அருகில், பழனி,
   திண்டுக்கல் மாவட்டம் - 624 613. செல் : 97506 82449

2 **துரைமுருகர் சிவா மரபு சித்தாந்த தியான சபை**
   தாம்பரம் - வாலாஜாபாத் மெயின் ரோடு,
   நத்தாநல்லூர், வாலாஜாபாத் தாலுகா,
   காஞ்சிபுரம் மாவட்டம் - 631 605. செல் : 91508 97055


| | | |
|---|---|---|
| ஒளியச்சு / புத்தக வடிவமைப்பு | : | எம்.கே. லேசர்<br>இராயப்பேட்டை, சென்னை-14.<br>போன் : 044-65373406 |
| அச்சாக்கம் | : | சரவண் பிரிண்டர்ஸ்<br>ராயப்பேட்டை, சென்னை - 14.<br>செல் : 98415 57311 |
| பைண்டிங் | : | ஸ்ரீ ஜெயம் பைண்டிங்,<br>இராயப்பேட்டை, சென்னை-14.<br>செல் : 98845 45426 |


**யோகா, மந்திர வகுப்பு, முறையான தியானம்**
**ஞாயிறு தோறும் கட்டணமின்றி கற்றுக் கொடுக்கப்படும்**

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இந்து மதம் | 7 |
| 2. | உருவ வழிபாடு | 14 |
| 3. | ஞானிகளின் கருணையே கோயில் | 19 |
| 4. | மரபு சித்தாந்த கலை முன்னேற்ற நிலை தமிழ் தெய்வ மரபு வழி | 24 |
| 5. | மன வலிமையும் சுய மதிப்பீடு செய்தலும் | 27 |
| 6. | சுயமதிப்பீடு செய்தல் | 31 |
| 7. | எண்ணம் போல் வாழ்வு | 35 |
| 8. | பக்தியும் கோயிலும் | 38 |
| 9. | சைவமும் சிவபெருமானும் | 43 |
| 10. | லட்சியமும் இறைத்தொண்டும் | 50 |
| 11. | இறைத்தொடர்பும் தியான பயிற்சியும் | 56 |
| 12. | மனிதன் கிரகங்கள் இறைவன் | 66 |
| 13. | தாயின் கடமையும் இறை பக்தியும் | 69 |
| 14. | மனிதர்களிடையே பஞ்சபூதங்கள் | 74 |
| 15. | காஞ்சிபுரம் (நிலம்) | 80 |
| 16. | திருவானைக்காவல் (நீர்) | 82 |
| 17. | திருவண்ணாமலை (ஜோதி) | 85 |
| 18. | வாயு – களம் (மதுரை) | 88 |
| 19. | சிதம்பரம் (ஆகாயம்) | 90 |
| 20. | சென்னை சிவாலயங்கள் | 93 |
| 21. | ஆறுபடை வீடுகளும் ஞானமும் | 102 |
| 22. | பாண்டிய நாட்டு மரபுக் கோயில்கள் | 127 |
| 23. | சேர நாட்டு மரபுக் கோயில்கள் | 137 |
| 24. | சோழ நாட்டு மரபுக் கோயில்கள் | 142 |




# அன்புரை

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

அ – என்றால் 8
உ – என்றால் 2

எட்டும் இரண்டும் தெரியாவிட்டால் ஞானம் என்பது கைகூடாது. இந்த விளக்கங்களை மரபு வழி தெரிந்த ஞான குரு கிடைக்காவிட்டால் கடைசிவரை மரபு வழி முன்னேற்ற உண்மைகளைப் புரிந்து கொள்ளவே முடியாது. வீடு இம்மைக்கும் மறுமைக்கும் தேவை என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

தாய் தந்தை இருவரையும், இந்த உலகில் நாம் பிறப்பதற்கு கருவியாக இறைவன் பயன்படுத்தியிருந்தாலும் அவர்களின் அன்பும் அரவணைப்பும் குறிப்பிட்ட வயதுவரை ஒவ்வொருவருக்கும் தேவைப்படுகிறது.

பிறகு தெய்வ பக்தியும், இறை நினைப்பும் கூடும்போது ஞானகுருவின் சந்திப்பு இறைவனால் ஏற்படுத்தப்படுகிறது. நமது உடல் வளர தாய் தந்தை உதவியதுபோல், நமக்கு ஞான உணர்வு வளர ஞான குருவின் உதவி தேவையாகும். இரண்டு என்பது தாய் தந்தை, எட்டு என்பது கீழே கொடுக்கப்பட்டவைகள்.

1. நன்னடத்தை
2. நற்செயல்
3. மூச்சடக்கல்
4. புலனடக்கல்
5. சரப்பழக்கம்
6. இரண்டறக்கலத்தல்
7. இருக்கை
8. சமாதி (சமநிலை) ஆயுள் 120

ஞானம் வெகுதூரமாக இருந்தபோதிலும் அதைப் புரிநது கொண்டால் அது வெகு சமீபம். எதிலும் பதட்டப்படாது பொறுமையாக ஆழ்ந்து சிந்தித்து எதையும் இறைவன் சாட்சியாக நின்று உணர்ந்து பார்த்து முடிவெடுக்க வேண்டும்.

இறைவனை அடைய வேண்டும் என்ற லட்சியம் வைத்து உழைக்கும்போது உண்மை குருமார்கள் கிடைப்பார்கள். பிறகு வேதனைகள் சோதனைகள் எல்லாம் பயிற்சியாகவும், சாதனைகளாகவும் மாறி நம்மைப் பக்குவப்படுத்தி பத்தரை மாத்துத் தங்கமாக மாற்றி விடும்.

குடும்பத்தில் இருந்து கொண்டே ஞானம் பெற தெளிந்த குருவின் உதவி வேண்டும். ஏனென்றால் உலகியல் வாழ்விலும், ஞான வாழ்விலும் சமமான வேகத்தில் பயணிக்கவும், பிறகு குறிப்பிட்ட தூரத்தில் வந்தவுடன் வேகமாகப் பயணிக்கவும் அவர்கள் அனுபவம் உங்களுக்குப் பயன்படும்.

தமிழ் உண்மை மரபு வழிவந்தவர்களின் நூல் ஸ்தாபனங்களில் இந்த புத்தகம் இருக்க வேண்டும். மூவேந்தர்கள் மரபு வழி வந்த கோயில்களின் விளக்கங்களும், மனித இனத்திற்குத் தேவையான முன்னேற்றக் கருத்துக்களும் அடங்கியதாக அமைந்துள்ளது. புத்தக ஆசிரியர் குரு ஸ்தானத்தில் இருப்பதால் உண்மை விளக்கங்கள் ஆங்காங்கே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. புத்தகத்தைப் படித்தபின், ஆசிரியரைச் சந்தித்து உணர்ந்து ஞானம் பெற்று இறையன்பு பெற வாழ்த்துகிறேன்.

**ஸ்ரீ குரு**
**ஞான பண்டிதர் க. ராஜ்மோகன்**



## ஆசிரியர் உரை

> ''எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு''

பழைய பாடத்தைப் புதுப்பித்து புதிய பாடமாக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை. எல்லாம் உங்களுக்கு தெரிந்திருந்தாலும் இறைவனை உங்கள் உள்ளத்தில் கொண்டுவந்து நிறுத்த எடுத்துக்கொண்ட எளிமையான வழிமுறைதான் இந்த நூல். வைரமாக இருக்கும் உங்களைப் பட்டைதீட்டி ஜொலிக்க வைக்கும் கருவிதான் இந்தப் புத்தகம்.

கோயிலையும் தெய்வத்தையும் வெளியில் பார்க்கும் மனிதர்களைப் பார்த்து, இறைவனை மனதினுள், உள்ளத்தினுள் வையுங்கள் என்று சரியான காரணங்களோடு கூறும் ஒரு அன்பு வேண்டுகோள் தான் இந்த நூல்.

பேனாவும் பேப்பரும் எடுத்துக்கொண்டு கணக்குப் போட்டுக் கொண்டிருந்த மக்களுக்கு ஒரு சோலார் சிஸ்டம் கால்குலேட்டர் வாங்கிக் கொடுத்த மாதிரிதான் இந்த புத்தகம்.

இந்து மதத்தில் சிவாலயம், பஞ்சபூதகோயில்கள், அறுபடைவீடுகள், உருவ வழிபாட்டின் உயர்வு, கோயிலின் தொன்மை, மரபின் தன்மை, லட்சியவாதியின் இறைத்தொண்டு, பஞ்சபூதங்களின் ரகசியங்கள், பெற்றோரின் கடமை, பக்தியின் அவசியம், தியானத்தின் முக்கியத்துவம், மனிதனுக்கு வேண்டிய மனவலிமை என்று அலசிப் பார்த்து உங்கள் பக்திப் பாதையில் என்றும் உடன் வரும் உண்மை வழித் துணைவனே இந்த நூல்.

குருவின் துணையுடன், சற்குரு பரமகுரு காட்டிய ஞானவழியை உணர்ந்து அவர் அருளால் எழுதிய இந்த நூலை இறை அன்பர்கள் படித்து உயர்வு பெற சற்குரு, பரமகுரு பகவான் ஞானவள்ளலின் பாதத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**குருஜி R.I.D. சிவா**

# இந்து மதம்

| | | |
|---|---|---|
| 1) அடைபவன் | – | யாரென்றால் ஜீவன் |
| 2) அடையப்படுவது | – | இறைவன் |
| 3) பயன் | – | முடிவில்லா இன்பம் |
| 4) தேவை | – | இடைவிடாத பக்தி |
| 5) இடையூறு | – | சாஸ்திர விரோதமான செயல்கள் |

‘உடலை வளர்ப்பது சமையல்
உள்ளத்தை வளர்ப்பது சமயம்.’

என்ற பொன்மொழி போல் நமது மனதில் துன்பம் நுழையும்போது அதைப் பிடித்து வெளியில் இழுத்தெறிவது சத்தான சமயக் கருத்துக்கள்தான். மனம் சிறகடித்து வெளியில் செல்லாது நமது உள்ளத்தில் உள்ள இறைவனைச் சுற்றிச் சுற்றி உலாவர உதவுவது சமயமே.

நமது உடலை வளர்ப்பதற்கு சத்தான உணவுப் பொருள்களை வாங்கி **பக்குவமாக** சமைக்கத் தெரிய வேண்டும். இதைப் போல உள்ளத்தில் இறைவனை வளர்ப்பதற்கு சமயக் கருத்துக்களை எடுத்துக் கொண்டு பரிபக்குவமாக தியானிக்கத் தெரிய வேண்டும்.

இறைவனை அடைய நமக்கு வேண்டிய சத்தான பொருள்கள் இருக்கும் சூப்பர்மார்க்கெட்தான் நமது இனிய **இந்துமதம்.** சமையல் பொருள்களை வாங்கி சரியான அளவில் பரிபக்குவமாக கலந்து சத்தாக, ருசியாக சமைத்துத் தருபவரே ஞானகுரு.

இரவும் பகலும் போல, இருளும் ஒளியும்போல, இன்பமும் துன்பமும் நம்மிடம் கலந்தே நிற்கின்றன. துன்பத்தை நீக்கி இன்பத்தைக்காண நமது இனிய இந்து மதம் மக்களுக்கு



கலங்கரை விளக்கமாக உயர்ந்து நின்று பிறவிக்கடலை கடந்து கரைஏற வழிகாட்டுகிறது.

இந்து மதம் ‘ஸநாதன தர்மம்’ என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இதன் பொருள் அழிவில்லாத அறம் என்பதாகும். இது மட்டுமல்லாது இந்து மதம் சன்மார்க்கம், தவநெறி, மெய்நெறி, அருள்நெறி, திருநெறி என்ற பெயர்களாலும் சொல்லி கரையேற அழைக்கப்படுகிறது.

அகங்காரம், காமம், பேராசை, பற்று இவற்றை விலக்கி சுகதுக்கங்களை நீக்கி ஆத்ம ஞானத்தில் திளைத்து ஆன்மாவின் உண்மைத் தோற்றத்தை அறிந்து ஜீவன் முக்தி பெற இந்து மதம் உதவுகிறது.

நாம் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தக்கவாறு மறுபிறவி உண்டு என்பதை ஆணித்தரமாகக் கூறி, நமது இன்ப துன்பத்திற்குக் காரணம், அவரவர் செய்த கருமவினைப் பயனே என்பதை இந்துமதம் தெள்ளத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

இந்து மதத்தில் வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், சாஸ்த்திரம் எனப்பல அறிய நூல்கள் இருக்கின்றன. **வேதம் என்பதற்கு அறிவு நூல்** என்பது பொருளாகும்.

தெய்வீகமான கருத்துக்களை தனக்குள் அடக்கிக் கொண்டிருப்பதால் இந்து மதம் **மறை** எனப் பெயர் பெற்றது. இதன் உட்கருத்துக்களை மரபு உண்மையறிந்த குருமார்களின் உதவியால் அறிந்து, புரிந்து உணர வேண்டும். இதனால் இதைச் **சுருதி** என்று கூறுகின்றனர்.

வியாச முனிவர் இதனை **ரிக், யஜுர், ஸாமம், அதர்வனம்** என்று நான்காக வகுத்துள்ளார்.

**ரிக் :** இதில் இறைவனை துதித்துப் பாடி வணங்குவதற்கு உள்ள வழிகளைக் கூறியுள்ளனர். இது பத்து மண்டலங்களைக் கொண்டது. ஒன்று முதல் எழு மண்டலங்களில் இறைவனை '**அக்கினி**' என்ற பெயராலும், பத்தாவது மண்டலத்தில் பிரம்மன், இந்திரன் என்ற பெயராலும் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது. ஐதரேய, கௌசீதக என்று இரண்டு உபநிடங்கள் இருக்கிறது.

**யஜுர் வேதம் :** யஜ் என்ற சொல்லிற்கு '**யாகம்**' என்று பொருள்படும். யாகத்தில் நமது மும்மலங்களைப் பலி செய்தல், தானம் செய்ய வேண்டிய முறைகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. பௌர்ணமி, அமாவாசை காலங்களில் செய்ய வேண்டிய தவத்தைப் பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளது. ஈச, கட, தைத்திரிய, பிரஹதாரண்யக, சுவேதாஸ்தர, மைத்ராயணீ, மகாநாரயாண என்று ஏழு உபநிடங்கள் உண்டு.

**ஸாம வேதம் :** ஸாமம் என்ற இன்னிசையால் பாடப் பெற்றது. பரம்பொருளான பரமேஸ்வரனை அக்கினி, இந்திரன் முதலான பெயர் சூட்டி பாடப்பட்டுள்ளது. இசையுடன் இதனைப் பாடுவதால் பாவம் நீங்கி நற்கதி அடையலாம். கேன, சாந்தோக்ய என்று இரண்டு உபநிடங்கள் உள்ளன.

**அதர்வணம் :** இதில் எப்படி மந்திரம் உச்சரிக்க வேண்டும், எதிரிகளின் இறப்பிற்கு எப்படி கிரியா முறைகள் செய்வது, அத்துடன் வேதசாரக் கிரியைகளையும், அனுஷ்டானங் களையும் பற்றி தோத்திரங்களும் இருக்கின்றன. இதில் ப்ரஸ்ன, முண்டக, மாண்டுக்ய என்று மூன்று உபநிடங்கள் இருக்கிறது.

**உபநிஷதங்கள்** என்றால் நமது நான்கு வேதங்களின் பிரிவுகளிலிருக்கும் சம்ஹிதை, பிராம்மணம், ஆரணியகம் என்ற பாகங்களைச் சேர்ந்தவை. பொதுவாக '**உபநிஷத்**' என்றால் குரு அருகில் அமர்ந்து அவரால் நாம் அறிந்து கொள்ளப்படும் 'ஞானம்' என்பதாகும்.

'திருமுறை' என்றால் தம்மை அடைந்தவர்களைச் சிவமே ஆக்குகின்ற முறை எனப்பொருள்படும். சைவத்திருமுறைகள் பன்னிரெண்டு, அதில் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய 'தேவாரம்' மூன்று திருமுறைகளாகும்.



திருநாவுக்கரசு சுவாமிகள் நமக்களித்த 'தேவாரம்' நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் ஏழாந்திருமுறையாகும். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம், திருக்கோவையார் எட்டாம் திருமுறையாகும்.

திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது பேர்கள் அருளிச் செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறையாகும். திருமூலத்தேவர் அருளிச் செய்த திருமந்திரம் பத்தாந் திருமுறையாகும்.

திருவாளவாயுடையார், காரைக்காலம்மையார் மற்றும் பன்னிருவர் நமக்களித்தவை பதினோராந் திருமுறையாகும். சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணம் பன்னிரெண்டாந் திருமுறையாகும். இதில் அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய வரலாறு கூறப்பட்டிருக்கிறது.

சைவசித்தாந்த சாஸ்த்திரங்கள் பதினான்கு. இவை இந்து மதத்தின் பெரிய உண்மைகளை நுணுக்கமாகக் கூறுகின்றன. இவற்றை மெய்கண்ட சாஸ்த்திரங்கள் என்று கூறுவர். இதில் தலைமையாக நிற்பது – சிவஞான போதமாகும். 'ஞானம்' என்றால் பொதுவாக தெளிதல் என்று பொருள்படும். 'சிவம்' என்றால் இறைவனாகிய உயர்ந்த பொருளாகும். இது சிவத்தை அறிய போதிக்கப்படும் நூலேயாகும்.

**இதிகாசங்கள் :** இந்துக்களின் உடல் இராமாயணம் என்றால் உயிர் மகாபாரதமாகும். இந்துக்களின் ஞானவளர்ச்சிக்கு பகவத் கீதை ஒரு பெரிய தங்க, வைரச் சுரங்கமாகும். பொதுவாக இந்துமதத்தின் பழமையும், அன்றைய விஞ்ஞான, மெய்ஞான மேம்பாட்டையும் தொன்மையையும் உயர்த்திக்காட்டுவது புராணங்களேயாகும்.

நம்மவர்கள் சிலர் இதை பழித்துப்பேசி வீண்பொழுது போக்கிவிட்டனர். ஆனால் மேலைநாட்டவர் பலர் இதனைப் படித்தறிந்து விஞ்ஞானமாகவும், மெய்ஞானமாகவும் பயன்படுத்திக் கொண்டனர். புராணம் என்ற சொல்லுக்கு பழைய வரலாறு என்று பொருள்படும்.

உண்மை பேசு, தர்மத்தைச் செய் என்று நமக்கு வேதங்கள் வழிகாட்டுகிறது. 'நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு நான் சொல்லுவேன்' என்று கூறி நம்மை நல்வழிப்படுத்துகிறது.

மனிதன் கீழ்நிலையில் கிடந்து துன்பப்படுவதற்கு பக்குவப்படாததும், உண்மையை அறியாததும், அன்பு இல்லாமையுமே காரணமாகும் என்று ஞான சரிகை கூறுகிறது.

'பற்று அன்றிப் பற்று
பரம பரம்பரனை'

என்று நம்மாழ்வார் கூறுகிறார். தான் அனுபவத்தால் பெற்ற உண்மையை உயர்ந்தவர்கள் கூறும்போது அதை உடனே பின்பற்ற வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

நம்மை மேன்மைப்படுத்திக் கொள்ள திடமான முடிவெடுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் முந்திய நாள் இருந்ததைவிட மேன்மேலும் உயர இறைவனை எவ்வளவு நேரம் நினைத்தோம் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். மலரில் மணம் இருப்பதுபோல நம்மிடம் இறைவன் இருக்கிறார். இதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. வாசனையில்லா மலர் போன்றவர்களை நாம் சிந்திக்கக்கூடாது.

நமது ஐம்புலன்கள் வழியாக வரும் இன்பம் முடிவில் சிக்கல்களாகவும், நோய்களாகவும், நெருக்கடிகளாகவும் மாறி நம்மை சேதப்படுத்தி விடும். இதனால் ஐம்புலன்களின் கதவை மூடிக்கொண்டு உள்ளத்தில் இறைவனைப் பார்க்கப் பழகிக்கொள்ள வேண்டியது நமது கடமையாகும். இதனால் அமைதியும் ஆனந்தமும் கிடைக்கும். இதைத்தான் இந்துமதம் இந்துக்களுக்குப் புகட்டுகிறது.

சிவபெருமானது இடது பக்கத்தில் மகாவிஷ்ணு இருப்பதாக தேவராத்திலும், விஷ்ணுவின் வலது பக்கத்தில் சிவன் வீற்றிருப்பதாகப் பிரபந்தத்திலும் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது.

'பொதுவாக உனது பணிவாலும், பரிவு மிகுந்த கேள்வியாலும் சேவையாலும் உனக்கு மெய்ப்பொருள் கண்ட



ஞானிகள் ஞானத்தை உபதேசிப்பார்கள்' என்று கீதை கூறுகிறது.

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே
நலமிக்க நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே
நல்லார் குணங்க ளுரைப்பதுவும் நன்றே
அவரோடி ணங்கி யிருப்பதுவும் நன்றே'

என்று வாக்குண்டாம் கூறுவது போல நாம் நல்லாரைக் கண்டு குருவாக ஏற்று அவர் வழி சென்று இறைவனை இடைவிடாது நினைத்துவந்தால் இந்துமதம் சொன்ன பேரின்பம் பெறுவதில் எந்த சந்தேகமும் இல்லை.

'உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக்காண்'

என்று ஔவையார் வெட்ட வெளிச்சமாக மனிதர்களைப் பார்த்துக் கூறுகிறார். 'இறைவன் உனக்குள்ளே இருக்கிறார். எங்கும் தனி உலகத்தில் அவர் இல்லை. இதனால் உன் முழுகவனத்தையும் உள்நோக்கி உள் முகமாகத் திருப்பு. பிறகுபார் ! உனக்குள்ளே உத்தமனைக் காணலாம்' என்று ஒரு ஞானி கூறியிருக்கிறார்.

இந்துமதக் குழந்தைகளுக்கு 'சைவம்' என்ற பசும்பாலில், 'தியானம்' என்ற சர்க்கரை கலந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை முறையாகப் பருகும் குழந்தைகள் செழித்து வளர்ந்து ஞான வீட்டில் குடியேறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

சைவ சமயத்தில் மூன்று விரலால் திருநீர்பட்டை நெற்றியில் இட்டுக்கொள்வதும், வைணவத்தில் நாமத்தை நெற்றியில் மூன்று கோடாகப் போட்டுக் கொள்வதும் பழக்கத்தில் உள்ளது.

இதன் பொருள் என்னவென்றால், ஒன்று பிறப்பு மூன்று இறப்பு, இதற்கு இடையில் இரண்டு என்ற வாழ்க்கை உள்ளது என்பதாகும். இதை உணர்ந்து நெற்றியில் மறைந்திருக்கும் சுழிமுனையில் மனதைவைத்து நெற்றிக்கண்ணைத் திறக்க இறைவனிடம் மன்றாட வேண்டும். அப்படி நாம் உணர்ந்து

செயல்படும்போது வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாறுகிறது. மும்மலங்கள் எரிந்து சாம்பலாகி நாம் புனிதப்பாதையில் பயணிக்க குரு அருளால் தயாராகிவிடலாம். ஜீவமுக்தி பெறலாம். இல்லாவிட்டால் பிறப்பு வீணாகி சாவை மட்டும்தான் சந்திக்க நேரும். ஆன்மா கரைசேராது.

1) மும்மூர்த்திகள் : பிரம்மா, விஷ்ணு, சிவன்.
2) முத்தொழில்கள் : படைத்தல், காத்தல், அழித்தல்.
3) மூன்று பிரணவ மந்திர ஒலிகள் : அகாரம், உகாரம், மகாரம்.
4) முக்குணங்கள் : ஸத்துவகுணம், ராஜஸகுணம், தாமஸகுணம்.
5) மூன்று சக்திகள் : இச்சா சக்தி, கிரியா சக்தி. ஞான சக்தி.
6) மும்மலங்கள் : ஆசை, பயம், குரோதம்
7) மூன்று சரீரம் : ஸ்தூல தேகம், சூட்சம தேகம், காரண தேகங்கள்.
8) மூன்று வினைகள் : ஸஞ்சிதவினை, ஆகாய வினை, பிராப்த வினை.
9) மூன்று ஆன்ம நிலைகள் : சத்து, சித்து, ஆனந்தம்.

ஈசனாகிய இறைவன் மானிட ரூபத்தில் வந்த வரலாறு ஏராளம் உள்ளது. இன்றும் இறைவன் பூமியில் மானிட ரூபத்தில் சற்குருவாகவும், பரமகுருவாகவும், ஞானகுருவாகவும் இருந்து கொண்டு நன்மக்களை நல்வழிப்படுத்தி தன்னுடன் இணைத்துக் கொண்டிருக்கிறார். இதை உணர்பவர்கள் கண்டிப்பாக இறைவன்மேல் பக்தி செலுத்தி பிறகு ஞானத்தைப் பெறுவார்கள். உண்மையாக இறைவனை அடைய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும்போது காரண குரு கிடைப்பார். சற்குரு தியானம் வளம் பெறும்.



# உருவ வழிபாடு

'தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திரு உருவை'

சிந்திப்பதும், இடைவிடாது திருஉருவத்தை நினைப்பதுவும் தான் தியானமும் தவமுமாகும் என்று திருமூலர் திருமந்திரமாகக் கூறுகிறார். இன்று சற்குரு, பரமகுரு யார் என்று கண்டுபிடிக்க முடியாதவர்களுக்கு கடந்த கால சற்குருமார்களை உருவமாக சிலைவடிவில் காட்டப்பட்டுள்ளது. பரமகுருவின் மறைபொருள் அம்சம்தான் சிவலிங்கம். தற்பொழுது இருக்கும் சற்குருவைக் கண்டறிந்து மனதில் நிலைநிறுத்தி வணங்கினால் சகலமும் கைகூடும்.

பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்.

'எந்த வகையில் என்னை வழிபட்டாலும் நான் ஏற்றுக் கொள்வேன். அதேநேரத்தில் என் உருவத்தை உன் மனதில் நிலைநிறுத்தி, உனது எண்ணத்தை அதனுடன் இணைத்து ஒரு நிலையாகி, என்னைத் தானாகவே ஆக்கிக் கொள்வோர்தான் எளிதாக என்னை அடைய முடியும்.

ஏனெனில் என் உருவத்தை மனதை விட்டு எடுத்து விட்டு உருவமில்லாத என் ஒளி வடிவத்தை மட்டுமே உள்ளத்தில் நிறுத்தி மனதை ஒருநிலைப்படுத்த முயற்சிப்பது எளிதானது அல்ல. அப்படி முயற்சிப்பதில் கஷ்டங்கள் மிகவும் அதிகம்.

நான் எங்கும் நிறைந்திருந்தாலும், எதிலும் கலந்திருந்தாலும் உன் மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு சிறந்த எளிமையான மார்க்கம் என் திருவுருவத்தை உன் மனதில் நிலை நிறுத்தி வழிபடுவதேயாகும்.

நீ செய்யும் எந்தத் தொழிலையும் எனக்காகவே செய். தொழிலின் பலனை அனுபவிக்க எண்ணாதே, அதை எனக்கே சமர்ப்பணம் செய்துவிடு.

பயிற்சியின் வாயிலாக சிறுகச்சிறுக என்னை நெருங்க முயற்சி செய்.

பயிற்சியின்போது ஞானத்தை நாடுவது சிறந்தது. ஞானத்தை விட தியானம் சிறந்தது; தியானத்திலும் உயர்ந்தது தியாகம். தியாகத்தின் பயனாக மனச் சஞ்சலம் அகன்று நிம்மதி கிடைக்கும். மனதை அடக்கி என்னையன்றி வேறு எண்ணமே இல்லாதவன் என்னுடைய இணையில்லாத பக்தனாகி விடுவான்'.

நாம் எதையும் முதலில் பார்த்து பின் அதை மனதில் கொண்டுவந்து உள்ளத்தில் நிலைநிறுத்தப் பழக்கப்பட்டவர்கள். எதையும் பார்க்க ஆசைப்படுவது மனித இனத்தில் தொன்றுதொட்டே உள்ளது. இதனால்தான் தற்பொழுது சினிமா, டெலிவிசன் என்று பார்த்துக் கொண்டிருக்கின்றோம். போட்டோ எடுப்பதிலும், கண்ணாடி பார்ப்பதிலும் ஆசைப்படாதவர்களே கிடையாது.

உருவத்தைப் பார்த்தும், இயற்கைக் காட்சிகளைப் பார்த்தும் அதை ரசிக்கும் நமக்கு 'அருவமாக' ஒன்றை இறைவன் என்று கூறும்போது எப்படி மனம் எடுத்துவந்து உள்ளத்தில் நிலைநிறுத்தும். இதனால்தான் நமது ஞானிகள் மக்களின் மனதின் நிலையை அறிந்து உருவ வழிபாட்டிற்கான ஏற்பாடு செய்தனர். அதுவே பல அர்த்தங்களைக் கொண்ட பஞ்சபூத தலங்களாக முதலில் அமைந்தது.

தன்னில் ஒரு சக்தியை வளர்த்துக் கொள்ள விரும்பினால், தனக்குள்ள ஓர் சக்தியை இயங்கச்செய்து அதன் வாயிலாக பலன் பெற வேண்டும்! உதாரணமாக மின்சாரம் புது வீட்டிற்கு வாங்க விரும்பினால் மின் விளக்கு, மின் விசிறி, டெலிவிஷன் போன்றவைகளைப் பொருத்தி பலன் பெற வேண்டுமல்லவா!



நமக்குள்ளே ஒரு கோயிலை உள்ளத்தில் நிலை நிறுத்தி இது உறுதி என்று வழிபட ஆரம்பித்தால் இறைவனின் நிலையமாக அது மாறுகிறது. எங்கும் எதிலும் நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு செயல்படும்போது அங்கு இறைவன் காட்சியளிக்கிறார்.

நாளை வருகிறேன் என்று கூறுவதே நாம் நாளைவரை உயிருடன் இருப்போம் என்ற நம்பிக்கைதானே. பூணூல் போன்ற காற்று நம்முள் ஓடுவது நின்றாலே நாளை என்ற வார்த்தை பொய்யாகிவிடும். பூகம்பம் வந்தாலே யார் இருப்பார் போவார் என்று தெரியாது. இப்படியிருக்கும் உலகில் மனித வாழ்க்கையே ஒரு நம்பிக்கையால் இயங்குகிறது.

நம்பிக்கை என்ற சக்தியால் தான் மனம் ஒரு விசயத்தைப் பற்றுகிறது. மனம் பற்றக் காரணம் அந்த மனதிற்கு அதில் நம்பிக்கை வரவேண்டும். நம்பிக்கை வர மனதிற்கு அந்தப் பொருள் அல்லது விசயம் பிடித்திருக்க வேண்டும்.

பத்து நபர்கள் சேர்ந்து ஹோட்டலுக்குச் சென்றால் அங்கு ஒருவர் இட்லி வடை என்றால் மற்றொருவர் சப்பாத்தி என்பார். இப்படி பத்துப்பேரும் ஏதாவது பிடித்ததைத்தான் கேட்பார்களே தவிர ஒரே மாதிரி கேட்பதில்லை. அப்படி ஒரே மாதிரி கொண்டு வரச் சொன்னால் அதில் ஒருவர் 'போயும் போயும் இங்கு வந்து இதையா சாப்பிடுவது' என்று முனகிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கலாம்.

விபரம் தெரிந்த மனிதனுடன், விபரம் தெரியாத மனிதன் அடக்கமாக வருவதில்லை. பக்தி என்பதே தனக்குள்ளே, இறைவனுடன் பேசுவது, வெளியில் கண்டதையெல்லாம் பேசுவது பக்தியல்ல என்பதை உணராதவர்களை உணர வைக்கத்தான் கோயில் என்பதை பல வடிவில் கொண்டுவந்து சித்தர்களும், ஞானிகளும் அன்று அரசர்கள் வாயிலாகவும், பணம் படைத்த பக்தர்கள் மூலமாகவும் நிறுவியிருக்கின்றனர்.

உதாரணமாக வெளியில் இருந்து வேர்த்துப் போய் வருபவருக்கு மின் காற்றாடியைப் போட்டு உட்கார வைத்தால் வேர்வை அடங்கும். அவர் உடலுக்கு சுகம் கிடைக்கும்.

அந்த நேரத்தில் உணர்வுப்பூர்வமாக உள்ளவர் மின் சக்தியை மனதில் நினைப்பதால் அந்த மின் சக்தியின் உண்மைத் தத்துவங்கள் அறிவுப்பூர்வமாகத் தெரிந்து விடும். ஆனால் அறிவுப்பக்கமே செல்லாத மனதிற்கு காற்றின் சுகம் மட்டும்தான் தெரியும். மனம் உணர்வுப் பாதையில் பயணிக்கும்போது அறிவுடன் இணைந்து செயல்படுகிறது. இப்படி அறிவுப்பக்கம் செல்பவர் கடவுளுடன் இணைந்து விடுவார்.

காற்றாடியின் காற்றை இருவர் அனுபவித்தாலும் ஒருவர் அந்தக் காற்றின் சுகத்தோடு நின்றுவிடுகிறார். மற்றொருவர் காற்றாடியின் இயக்கம், மின்சாரத்தின் சக்தி, அது எங்கிருந்து வருகிறது என்ற தத்துவங்களை அந்த சுகமான நேரத்திலும் சிந்தித்து அவரால் உணரமுடிகிறதல்லவா! அதுவே உணர்வுத்தத்துவம். இந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு கோயிலும் அறிவுப்பூர்வமாக உணர்ந்து இறைவனை அடைய நிறுவப்பட்டிருக்கிறது.

மின்சாரம் எங்கிருந்தோ தோன்றி மின் கம்பி வாயிலாக வந்தாலும் அது ஒரு இடத்தில் வந்து மின் விளக்காக பிரகாசிக்கிறதல்லவா. இதைப்போன்று இறை சக்தி நிறைந்துள்ள ஓர் பொருளில் மனதைச் செலுத்தி இறைவனை நினைப்பவருக்கு இறைவனின் தத்துவங்கள் உறுதியாகவும் தெள்ளத் தெளிவாகவும் புலப்படும்.

அருவமாக கடவுள் இருப்பதாக உணர்ந்தாலும் அவர் பிரதிபலிப்பது ஓர் உருவத்தில்தான். மின்சாரம், மின்கம்பியில் அருவமாக வந்தாலும் அது ஓரிடத்தில் ஒரு பொருளின் வாயிலாக அதாவது மின் விளக்கு, மின்விசிறி, டெலிவிசன் என்றுதான் பிரதிபலிக்கிறது.

இதைப்போன்று உருவத்தில் கடவுளை நினைப்பதில்லை என்று சொல்பவர்கள் வேறெந்த வழியிலும் கடவுளை நினைக்க சாத்தியப்படாது.



உருவ நிலையில் கடவுளை வழிபடாதவர் கடவுளை முழுமையாக வழிபடுவதில்லை என்று கூறலாம். கடவுளை எந்த வழியில் ஒப்புக் கொண்டாலும் மனிதன் உருவவழியாகத்தான் அவரை அறிய முடியும் – என்பதில் எந்த மாற்றமும் எனது அனுபவத்தில் இல்லை. மனதை அறிவுப்பக்கம் தொடர்ந்து செலுத்துபவருக்கு கடவுள் சற்குருவடிவில் வருவார் என்பதில் எனக்கு சந்தேகமே இல்லை. பகவத் கீதையில் 'மீண்டும் மீண்டும் வருவேன்' என்று பகவான் கூறியிருக்கிறார்.

'சந்தேகமறத் தெளிய வைப்பதே கோயில்'. ஞானிகளின் உள்ளத்திலிருந்து வந்ததே கோயிலும், விக்கிரகமும். அவர்கள் உள்ளம் பெரும் கோயில். அந்த அர்த்தமுள்ள கோயிலை நமக்கு வெளியில் கட்டி வைத்துக் காட்டிச் சென்றுள்ளனர். பிறகு அதன் உள் அர்த்தத்தைப் புரிந்து மரபு குருவழிவந்து, சற்குருவை சந்தித்தால் பிறவி வெற்றி பெரும். உருவ வழிபாட்டின் ரகசியத்தை நீங்கள் உணர்வீர்கள். பொதுவாக சிறு குழந்தை அது கையில் வைத்திருக்கும் பொம்மையை கட்டிப்பிடித்துக் கொண்டே இரவில் கூட படுத்திருக்கும். தாயைவிட அதை அதிகம் நேசிக்கலாம். ஆனால் அதே குழந்தை வாலிபம் வந்தவுடன் பொம்மையை கையில் வைத்திருக்குமா? இதைப்போன்றுதான் ஞான அறிவு வரும்வரை உருவ வழிபாடு தேவை.

'எல்லாம் கடவுள் செயல் என்று அறிந்தால் துன்பமுமில்லை, கவலையுமில்லை.'

குறிப்பு : முறையான தியானம் இலவசமாகக் கற்றுக் கொள்ள ஞாயிறுதோறும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**முகவரி**

துரைமுருகர் சிவா மரபு சித்தாந்த தியான சபை
போன் : 04545 225567, 86800 82425

# ஞானிகளின் கருணையே கோயில்

1. உலகத்தில் சிறந்தது எது?

கருணை.

2. கருணை என்பது யாது?

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று எண்ணுவது.

சரி, எப்படி எல்லோரும் இன்பம் பெறுவது என்று உணர்ந்து பார்க்க வேண்டுமல்லவா.

நமது மனம் வெளியில் சென்று ஒரு காரியத்தில் ஈடுபடும்போது அது சிற்றின்பமாக மாறிவிடுகிறது.

அதே மனம் நமது நினைப்பால் இறைவனை தனக்குள்ளே உள்ளத்தில் வைத்து வழிபடும்போது அது நாளடைவில் பேரின்பமாக மாறி விடுகிறது.

அப்படி பேரின்ப நிலையை அடைய பொறுமையான இறைநினைப்பும், ஞானகுருவிடம் பயிற்சியும் பெற வேண்டும்.

ஆனால் மனிதன் இந்த உலகில் நிலையாக இருப்போம் என்று எண்ணுவதுதான் பெரிய அதிசயமாக இருக்கிறது.

ஒரு மாணவனுக்கு கொடுக்கப்பட்ட 2½ மணி நேர பரீட்சை நேரத்தை வீணாக்கி விட்டு விட்டு கடைசி 5 நிமிடத்தில் எப்படி படபடப்புடன் பரிட்சை எழுதி அவன் பாஸ் பண்ண முடியும். நிச்சயமாக அவனால் முடியவே முடியாது.

இதைப் போன்றுதான் சிறுவயதிலிருந்தே கண்டதையெல்லாம் படித்து, பார்த்து, பேசி பொன்னான நேரத்தை வீணடித்து விட்டு வயதான பின் சாகப்போகிற காலத்தில் சங்கரா! சங்கரா! என்றால் என்ன பிரயோசனம்.

இளமை ஒரு நாள் முதுமையாக மாறும். ஆனால் முதுமையோ மீண்டும் இளமையாக மாறாது. கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இளமையிலேயே இறைநினைப்பை பெருக்குங்கள், படிப்படியாக ஞானத்தை உணருங்கள் – என்று ஞானிகள் கூறி வந்தனர்.



ஆனால் மாயை, மனிதர்களை வளைத்துவிட்டது. இறைவனை நினைக்கும் நேரம் கடுகளவுகூட இல்லை. மனதை இறைவன் பக்கம் திருப்ப முயற்சிக்க நேரம் இல்லை என்ற பதில்தான் எல்லோரிடமும் இருந்து வந்தது.

இதைப் பார்த்த ஞானிகள் நீங்கள் எளிமையாக வணங்க கோயிலுக்கு வாருங்கள் என்று அர்த்தம் நிறைந்த வகையில் கோயிலை எழுப்பினர்.

ஆனால் அந்தக் கோயிலில் என்ன உணர்த்தப்பட்டிருக்கிறது என்று மக்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. ஏதோ எங்கள் தாத்தா பாட்டி இந்தக் கோயிலுக்குத்தான் போனார்கள், நாங்களும் போகிறோம் என்று கூறுவதைக் கேட்டிருக்கலாம்.

பணத்தை எண்ணிப் பார்க்கும் அளவிற்கு இறைவனை எண்ணிப் பார்க்கும் பக்குவமும், ஆர்வமும் இந்துக்கள் என்று கூறும் நமக்கு இல்லை என்பதை சிந்திக்க வேண்டியிருக்கிறது.

சிந்தனை செய் மனமே!

அதாவது ஒரு சினிமாவைப் பார்த்துவிட்டு அதில் உள்ள முக்கியமான சீனை நினைத்தவுடன் அந்தக் காட்சி உங்கள் மூளையில் இப்பொழுதுகூட ஓடுவதைப் பார்க்க முடிகிறது.

அதைப்போன்று உங்களுக்கு விருப்பமான கோயிலை மூளையில் நிரந்தரமாக எழுப்பி அதில் அவ்வப்போது சென்று தனக்குள்ளே வழிபட வேண்டும் என்பதைத்தான் கோயில் எழுப்பிய புண்ணியவான்கள் கூறுகின்றனர்.

தனக்குள்ளே கோயில் எழுப்பி வாழ்பவர்களே மனிதர்களில் சிறந்தவர்கள். அந்தக் கோயிலில் சற்குருவை வைத்து மானசீகமாக பூஜிப்பவர்களே முக்தி நிலையை அடையப்போகும் மனுஈசர்கள். இந்த உலகிலும், மறுமையிலும் வெற்றிபெறும் பாக்கியவான்கள்.

பொதுவாக மரபு வழிவந்ததுதான் கோயில். அதில் அடங்கிய மூல விளக்கங்கள் யாவையும் மரபு வழிவந்த ஞான குருமார்கள் வாயிலாக அறிந்து பின்பற்றி வந்தால் நோயேது?

மனப்பேயேது? மும்மலங்கள் ஏது? எல்லாம் காணாமல் போகும். இறைவனின் அருளும் ஆசியும் நிச்சயம் கிடைக்கும்.

நமது ராஜாக்கள் ஞானகுருமார்களை மதித்தார்கள். அவர்களது ஆலோசனைப்படி பெரிய பெரிய கோயில்களைக் கட்டி மக்களைப் பரவசமூட்டினார்கள். அன்று அவர்கள் நினைத்திருந்தால் பெரிய மருத்துவமனை கட்டியிருக்கலாம்.

ஏன் கட்டவில்லை?

மனம் செம்மையானால் மருத்துவமனைக்கு வேலையில்லை. மனம் வேலை செய்து வெளியில் தான்தோன்றித்தனமாக அலைவதால்தான் நோய்கள் வரிசையாக வந்து நிற்கிறது. ரத்த அழுத்தம், சர்க்கரை வியாதிகளுக்கு மனம் தான் காரணம். இந்த இரண்டும் பல வியாதிகளுக்கு 'ஏஜண்ட்' மாதிரியாகும்.

மனம் அறிவுப்பக்கம் சென்றால் இறை நினைப்பு வரும். மந்திரங்கள் சொல்லச் சொல்ல மனிதன் தந்திரங்கள் வேலை செய்யாது. மனம் பெட்டிப் பாம்புபோன்று அடங்கி ஒடுங்கி இறைவன் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும்.

'அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்' என்பதின் உட்கருத்து என்னவென்றால், பகவானின் பாதமாகிய திருவடியைப் பிடித்துக்கொண்டால் அது உதவுவது போல் நம் கூடப் பிறந்த சகோதரர்கள்கூட உதவமாட்டார்கள்.

இப்படி ஒரு சொல்லில் அர்த்தங்கள் யாவும் பதார்த்தங்களை மூடி வைத்திருப்பதுபோல் பக்குவமாக மூடிவைக்கப்பட்டிருக்கிறது. அதைத் திறந்து காட்டத்தான் அவ்வப்போது ஞானகுருமார்கள் தோன்றினர். தோன்றியிருக்கின்றனர். இனிமேலும் தோன்றுவர்.

பாஸிட்டிவ், நெகட்டிவ் மாதிரி நமக்கு அறிவும் மனமும் இருக்கிறது. இனி இரண்டும் சேர்ந்தால்தான் கரண்ட் வருவதுபோல் இறைவன் நம்முன் அருள்பெரும் ஜோதியாக தோன்றுவார். பிறகு காட்சியளிப்பார். இதற்கு நல்ல



எலக்ட்ரிசன் மாதிரி ஞானகுருதேவை. குருவானவர் இறைவனை உள்ளும் வெளியிலும் காட்டுவார்.

பொது மக்கள் மத்தியில் நோய்கள் அதிகரித்ததற்கும், மனம் இறைவனை நினைக்க முடியாததற்கும் காரணம் சோம்பேறித்தனம்தான் என்பதில் சந்தேகமில்லை.

தூக்கம்தான் துக்கத்தின் துவக்கம். உலகமே போர்க்களம். அதில் சுதாரிப்பாக போரிட்டு வெற்றி பெற்றால் தான் இறைவனை அடையவும் முடியும். சிறப்பாக இங்கு வாழவும் முடியும். படைதனில் தூங்கியவன் வெற்றியிழந்தான் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

நடந்து கொண்டே மந்திரம் கூறுவதால் மனம் ஒருமித்து அறிவுடன் இணைந்து இறைவனை நினைக்க முடியும். நமக்கு எளிதில் இறை பிரசன்னமும் கிடைக்கும்.

இதனால்தான் பாத யாத்திரை என்ற நடைப்பயிற்சி வைக்கப்பட்டது. அந்த நாளில் பாதயாத்திரைகள் துவங்கப்பட்டது. அதை இன்று வரை நம் மக்கள் செய்து வருகின்றனர். பாராட்டுவோம். ஆனால் ஒரு திருத்தம். அடிக்கடி ஊர்க் கதை, சுயசரிதம் பேசுவதை நிறுத்த வேண்டும்.

'தூண்டில்காரனுக்கு மிதப்பு மேல் கண் கரகாட்டக்காரிக்கு தன் தலைமேல் எண்ணம்' என்பது போல நமது மனம் தன் சிரசில் உள்ள இறைவன்மேல் நினைப்பாக உலகில் வாழவேண்டும். ''எண்சான் உடலுக்கு சிரசே பிரதானம்''.

'தலை இருக்க வால் ஆடக்கூடாது' என்பது பழமொழி. தலைக்குத்தான் முக்கியத்துவம். ஏனென்றால் தலையில்தான் இயக்கம் இருக்கிறது. ஒரு சொல்லை ஆதரிக்க தலையைத்தான் ஆட்டுவோம். வேண்டாம் என்றால் தலையைத் தான் குறுக்கே ஆட்டுவோம். பொதுவாக ஆமோதிக்க, ரசிக்க, எல்லாவற்றிற்கும் தலையைத்தான் ஆட்டுவோம்.

பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், உணர்தல் போன்ற ஐந்து முக்கியமான செயல்களும் தலைக்குள்ளேதான் இருக்கிறது. இறைவனை ஐந்து செயலால் உணர ஆரம்பித்துவிட்டால் துக்கம் ஓடிவிடும். **''துக்கம் விட்டால் ஞானம், ஆசை விட்டால் ஆனந்தம்''.**

பாதயாத்திரையால் கோயில் பயணம் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் வேண்டாம். அந்தப் பயணம் பக்தியின் துவக்கம். ஆனால் காலை நேரத்தில் எழுந்து வீட்டில் ஒரு தலை அணையை நடுவே வைத்துவிட்டு அதைச் சுற்றி சுற்றி மந்திரம் சொல்லி வாருங்கள். இதுவே நித்தம் நித்தம் பாதயாத்திரை செய்து, இறைவனை அடையச் செய்யும் சரியான வழியாகும்.

வெளியில் சுற்றும்போது தலைக்குள்ளே கோயில் கட்டி அங்கே மூலஸ்தானத்தில் நீங்கள் எண்ணத்தால் இறைவனைச் சுற்றி வரவேண்டும். அந்தக் கோயில் உங்களுக்குப்பிடித்த எந்தக் கோயிலாகவும் இருக்கலாம்.

பொதுவாக கழுதை, குதிரை, யானைகள் வேலைக்கு பழக்கப்படுத்துவதற்கு முன் கெட்டவைகள்தான். ஆனால் மனிதனால் பழக்கப்படுத்தியபின் சொன்னவைகளையெல்லாம் செய்கிறதல்லவா! பயிற்சிதான் இதற்கு காரணமாகும்.

இதைப்போன்றுதான் மனிதனின் மனமும், சரியான குருவின் உபதேசத்திற்குப் பின் உங்கள் பயிற்சி, உங்கள் இறை நினைப்பு உங்கள் மனதைப் பக்குவப்படுத்திவிடும். பிறகு அமைதியும், நிதானமும், தெளிவும் பிறக்கும்.

கோயிலின் கோபுரம் உயர்ந்து நிற்பதுபோல் உங்கள் வாழ்க்கையும் உயர்ந்து காணப்படும். தனக்குள் ஏற்படும் மாறுதல்களை பொறுமையுடன் கவனியுங்கள். எதிலும் உங்கள் சக்தி, செயல் சிறப்பாக காணப்படும்.

எது நடந்தாலும் அதன் துவக்கம் முதலில் குழப்பம் மிகுந்ததாக இருந்தாலும் முடிவு சிறப்பாக இருக்கும். அப்படி எது நடந்தாலும் அது முற்றிலும் நன்மைக்கே என்ற சிறப்பான எண்ணத்தை நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒருபோதும் நம்பியவர்களை இறைவன் கைவிடமாட்டார்.



## மரபு சித்தாந்த கலையின் முன்னேற்ற நிலை தமிழ் தெய்வ மரபு வழி

கோயில் என்றால் என்ன?

அருங்காட்சியகம். அருமையான காட்சிப் பொருளாக விளங்கும் ஆலயத்தை நமது உள்ளத்தில் கொண்டு வந்து அங்கு பரமகுருவாகிய, சற்குருவாகிய இறைவனை வைக்குமிடம் தான் கோயில்.

கோயில் ஏன் கட்டப்பட்டது?
மரபு வழி தெரிவதற்காக.

மரபு என்றால் என்ன?
முதல் நிலை நாகரிகத்தில் முன்னேற்றத்தில் இருப்பது.

அதை எப்படி கண்டுபிடிப்பது?
முன்னேற்ற நிலையிலிருந்து உணர்வால், உண்மையான தொன்மைக் கல்வியினால்.

இதெல்லாம் உங்களுக்குக் குழப்பமாகத்தானிருக்கும். பொதுவாகத் தமிழ் எழுத்துக்கள் தெரியாதவன் எப்படித் தமிழ் புத்தகத்தைப் படிக்க முடியும்? முதலில் படிப்பறிவு வேண்டும். பிறகு தானாகவே நூலறிவு வந்துவிடும்.

அனுபவத்திறனறிவு உள்ளவருக்குப் படிப்படியாக நுண்ணறிவு வந்துவிடும். நுண்ணறிவு வந்துவிட்டால் உணர்வுப் பாதை புலப்படும். அதன் பிறகு உணர்வுப் பாதையில் பயணம் செய்பவர்களுக்கு இறைவன் இருக்குமிடம் தெரிந்துவிடும்.

இதற்கிடையில் ஞான விளக்கங்கள் உணர்ந்த சற்குரு அல்லது ஞான அனுபவம் நிறைந்த நண்பர்களால் ஏற்படுத்தப்பட்ட குரு தேவை.

பிறகு உங்கள் உழைப்பாலும், பக்தியாலும், எண்ணத்தில் அலைகள் இல்லாத நிலையுடன் இறைவன் பக்கம் செல்ல வேண்டியது மிகமிக அவசியம்.

உள்ளே இருக்கும் விசயத்தை வெளியில் இருப்பதாகக் கூறுவதே அனுபவ நிலையில்தான். கோயிலில் இறைவன் இருப்பதாக நினைப்பது நம் மனதின் திறனிலையில்

ஒன்றுதான். ஆனால் கோவிலை வெளியில் இருப்பதாக நினைப்பதே நம் எண்ணத்தின் திறனிலையில் மாறுபட்டதுதானே! இந்த மாறுபாட்டிற்கு மரபு என்று பெயர்.

மரபு வழியில் ஏன் கோயிலை நிறுவினார்கள் என்றால், தனக்குள் கோயில் கட்டி இறைவனைக் காண முடியாதவர்களுக்கு வெளியில் கோயில் கட்டி முறைப்படி உணர வைக்கத்தான்.

ஆனால் மேலோட்டமாக மக்கள் அதைப்பார்த்தார்களே தவிர உணர்வுபூர்வமாக சிந்தித்து செயல்படவில்லை. பொறுப்பற்ற பெற்றோர்களும், தன்மையில்லாத நண்பர்களும்தான் சந்ததிகளின் அறியாமைக்குக் காரணம் ஆகும்.

பகவான் கிருஷ்ணர் வாழ்ந்த காலத்தில் கோயில் இல்லை. ஆனால் குருகுலம் இருந்தது. ஞானிகள் இருந்தனர். துவாபரயுகமாகிய அன்று முரடர்கள்கூட தியானம் செய்தனர். சிவலிங்கத்தை வணங்கினர்.

கடவுள் இல்லை என்று அவர்கள் கூறவில்லை. ஒவ்வொருவர் உள்ளத்திலும் சிவன் கோயில் இருந்தது. அந்தக் கோயிலில் இறைவனைக் கண்டறிந்து வழிபடத்தெரியாதவர்கள் அன்றும் ஏமாற்றம் அடைந்தார்கள்.

பொதுவாக இடைவிடாது இறைவனை நினைப்பது தவம். விட்டுவிட்டு இறைவனை நினைப்பது தியானம். குடும்பத்தில் இருப்பவர் தியானம் செய்தாலே போதுமானது. மரபு முறைப்படி வெளியில் இருக்கும் கோயிலை உள்ளே கொண்டு வந்து எண்ணத்தால் வினாடிக்கு வினாடி வழிபடுவதே சாலச்சிறந்ததாகும்.

முத்தமிழ் என்றால்

1. மரபு வழி உண்மைக்கல்வி
2. பார்வைக்கல்வி
3. சொற்கல்வி

வேதத்தின் சாரம் என்று சற்குரு போதம் கூறுவது கலைக்கல்வியாகும். வேதத்தைப் படித்துவிட்டு எதார்த்தவாதியாகி சென்றுவிடுவர் பலர்.



வேதத்தைப் படித்துவிட்டு வேதாந்தமாக சிந்தித்து வேதத்தின் சாரத்தை உணர்ந்தவர்கள் முக்தியடையத் தயாராகிவிடுவர். அதோடு மக்கள் உண்மையை அறிய குருவாகிவிடுவர்.

வேதத்தின் சாரத்தை உணர்ந்தோர்களே மரபின் ரகசியத்தை உணர்ந்தவர்கள்.

சிவன் கோயிலில் சிவனை தரிசித்து வணங்குபவர்கள் வேதம் படித்தவர்களாகவோ, வேதம் படிக்காதவர்களாகவோ இருக்கலாம்.

கோவிலில் சிவனை தரிசித்து வணங்கி விட்டு வந்து அந்த சிலை சிவனாக முடியுமா என்று நினைத்தால் கண்டிப்பாக முடியவே முடியாது. அதேபோன்றுதான் சிவன் மனித வடிவில் வெளியில் நடமாடிக் கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணுபவரும், பேசுபவரும் வேதாந்திகளே.

இந்த வேதாந்தி பல நாள் அலைந்து, உணர்ந்து இறைவனை வெளியில் பார்க்க முயற்சிக்கும் போது தெளிவு குரு கிடைப்பார். அவரே சற்குரு. அவரே பரமகுரு; அவரே கடவுள். வேதத்தின் உண்மைசாரத்தை உணர்வதால் அவர் முக்திநிலைக்குத் தயாராகிவிடுகிறார்.

மரபை உணர்ந்தவர் உண்மை நிலைக்குத் திரும்பி விடுகின்றனர். உண்மை என்பது இறைவனைத் தனக்குள்ளே பார்ப்பது. தனக்குள்ளே பார்க்கப் பார்க்க உடல் கோயிலாகவும் ஜீவன் இறைவனாகவும் மாறுகிறது. புழுவாக இருந்து பின்பு வண்ணத்துப்பூச்சியாக மாறி பறந்து செல்லவில்லையா?

இதைப்போன்றுதான் மரபை உணர்ந்து கொண்டவர்கள் ஞான இறக்கை பெற்று இன்ப உலகைக் கடந்து பேரின்ப ஆகாயத்தில் பறந்து செல்கின்றனர். அதில் நாமும் பறந்து செல்வோம் என்று நம்பிக்கை கொள்வோம். விழிப்புணர்ச்சி பெறுவோம். சித்தாந்த உண்மையை அறிந்து, வேதாந்த மேன்மையை உணர்ந்து வளம் பெறுவோம்.

# மன வலிமையும் சுய மதிப்பீடு செய்தலும்

எப்பொழுதுமே இன்பமாக இருக்க ஒரு பொருள் இருக்கிறதா?

இருக்கிறது. அதுவே இறை நம்பிக்கை, இறை நினைப்பு.

மனம் இறைவனை நினைக்க மறுக்கிறதே அதற்கு என்ன செய்வது?

மனக்கோயில் கட்டி அங்கு அடிக்கடி இறைவனை பூஜிக்க வேண்டும்.

இதனால் என்ன நன்மை கிடைக்கும்?

மன வலிமை கிடைக்கும்.

மனம் வலிமை பெற்றால் நமக்கு என்ன லாபம்?

பல துறைகளில் சாதனையாளராக விளங்குவீர்கள். மனம் சார்ந்த பெரிய நோய்கள் வராது. முக்தியும் கிடைக்கும்.

குறிப்பு : இறைவனின் திருவடிகளைத் தியானித்துச் சரணடைகின்ற எவரொருவரும் எக்காலத்திலும் இருள்மயமான துன்பங்களில் சிக்கிக்கொள்ள மாட்டார்கள். இது முற்றும் உண்மை என்று ஞானோதயம் சொல்லுகிறது.

பொதுவாக நமது ஐம்புலன்கள் வழியாக மனம் வெளியில் செல்வதைத் தடுக்கத்தான் மனக்கோயில் கட்டி அடிக்கடி இறைவனை உள்ளே வைத்து பூஜிக்க வேண்டும் என்று மரபு அறிந்த ஞானிகள் கூறி வந்துள்ளனர். இதற்கு உதாரணமாக பூசலார் வரலாறு இருக்கிறது. அதாவது சோழ மன்னன் கட்டிய கோயிலுக்கு இறைவன் செல்லாது பூசலார் மனதில் கட்டிய மனக்கோயிலுக்கு இறைவன் சென்றார். இதனால் பூசலாருக்கு 'மனக்கோயில் கட்டிய மாணிக்கம்' என்ற புனை பெயர் வந்தது.

இவ்வாறு உள்ளே பூஜிக்கும்போது நமது மனம் அறிவுடன் சார்ந்து தெளிவு பெறும். அதாவது பாலில்



சீனிபோட்டு குடிப்பதற்கு ஒப்பாகும். அதேபோல் உப்பும் சீனியைப்போல் வெள்ளையாகத்தானே இருக்கிறது என்று பாலில் போட்டால் பால் முறிந்துவிடும் அல்லவா? இதைப்போன்றுதான் கண்டதையெல்லாம் மனதில் போட்டுக் குழப்புவார்கள்.

நமது மனம் நம்முன் இருக்கும் இறைவனை சந்தித்து வலிமை பெற பல பயிற்சியின் வாயிலாக முயலுவதே தியானம் ஆகும். இந்த பயிற்சியின் வாயிலாக மனம் வலிமை அடைந்துவிட்டால் நல்ல எண்ணங்கள் யாவும் வெற்றிச் செயலாக மாறும். அறிவும் அறியாமையும் கலந்ததே மனம். இதில் அறியாமையைப் பிரித்து எடுக்க தியானம் வேண்டும். பிறகு அறிவுடன் உள்ள மனம் வலிமை பெறுகிறது.

'வலிமையாகச் சிந்திக்கும் போதுதான் மனம் வலிமை பெறுவதாகப் பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் தேவையற்ற எண்ணங்களிலிருந்து விடுதலையடைந்த மனம்தான் வலிமையானது என்பதே உண்மை' என்று ரமண மகரிஷி கூறுகிறார்.

பொதுவாக இறை நினைப்பு இருக்குமேயானால் இறைவனுடைய பாதுகாப்பு கண்டிப்பாக இருக்கும். இதை 'இறைக்கவசம்' என்று சொல்லப்படுகிறது. அதாவது இறை நினைப்பு குண்டுதுளைக்காத கார் போன்றது. இந்த இறைநினைப்பிற்கு மனதின் பங்குதான் அதிகம் வேண்டியிருக்கிறது. இதனால் அடிக்கடி மனதை எண்ணிப் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் மனம் ஊர் சுற்றப் போய்விடும். 'வாழ்க்கையில் அனைத்தும் மனிதனின் மனதிலிருந்துதான் புறப்படுகின்றன' என்று மேலைநாட்டு தத்துவஞானி ஜேம்ஸ் ஆலன் கூறுகிறார். பொதுவாக சித்தி பெற வேண்டும் என்று எண்ணவேண்டும். ஆன்மாவை அறிந்தால் எல்லாம் கிடைக்கும்.

''இறைவனை நினைக்காத நிமிடமும்
இறைவனை போற்றிப் பேசாத நாளும்
இறையன்பர்களை சந்திக்காத வாரமும் வரவே வேண்டாம்''.

என்று நாம் எண்ண வேண்டும். இப்படி எண்ணுகின்ற போது மனம் இறைவனைச் சுற்றி சுற்றி வரும். இறைவனை வலம் வரும்போது மனம் வலிமை பெறும். பொதுவாக பகவத்கீதை, தத்துவம், ஞானம் இவற்றை கற்றுக் கொள்ளும்போது மனதின் அற்ப சிந்தனை போய்விடும்.

நமது மனம் வலிமை பெற்றவுடன் நாம் ஏதாவது ஒன்றை சாதிக்க முற்படுவோம். அதுவே லட்சியமாகும். அந்த லட்சியம் வெற்றி பெற சுயக்கட்டுப்பாடு, உழைப்பு இவற்றோடு தொடர்ந்து செய்யும் தன்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் நாம் செய்யும் தவறை ஒப்புக்கொண்டு நம்மைத் திருத்திக் கொள்ளும்போது வெற்றி உறுதியாகிவிடுகிறது.

ஓர் அறிவிலிருந்து ஐந்தறிவுவரை உள்ள பல கோடி உயிரினங்கள் இருந்த போதும் மனிதனுக்கு மட்டுமே நல்ல மனமும், அறிவும் இறைவனை அடைவதற்காக கொடுக்கப்பட்டுள்ளது. மனிதனின் அறிவே ஆறாவது நிலை அறிவு என்று வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எல்லோரும் மனதின் திறனால் அந்த ஆறாவது அறிவை அறிய முற்படுவதில்லை.

மனதை அறிவின் பக்கம் செலுத்துவதற்கு ஆலயம் ஒரு மையமாக அமைகிறது. ஆலயத்தில் செலுத்தும் பக்தி, அதில் மறைந்திருக்கும் உண்மையை அறிய முயற்சிக்கும் போது மனம் படிப்படியாக அறிவை நோக்கிச் செல்கிறது.

ஒருவரது மனம் முழுமையாக அறிவுடன் கலந்து நின்றால் அவர் முக்திநிலைக்குத் தயாராகிறார். உலகவாழ்வில் வெற்றி பெறுகிறார். நல்லவைகள் அவரைத் தேடிவரும்.

ஆனந்தம் என்பது அனுபவிக்கப்பட்டாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, எப்போதும் அது இருந்து கொண்டே இருப்பதுதான். வந்து போவதாகத் தோன்றுவது மனதின் இயல்புதான்.



**மனித வாழ்க்கையில் மனதின் பங்கு**

| உலகியல் வாழ்வில் வெற்றி பெற மனதின் பங்கு | ஞானவாழ்வில் வெற்றிபெற மனதின் பங்கு |
|---|---|
| 1 எந்த மாற்றங்களையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்துடன் இருப்பது. | எந்த நிலையிலும் இறைவனை மனதில் இடைவிடாது நினைப்பது |
| 2. சாமர்த்தியமாக மற்றவர்களிடம் நடந்து கொள்ளுதல் | சாமார்த்தியமாக மனதை அறிவுப்பக்கம் கொண்டு செல்வது |
| 3. உயர்ந்த பண்பு | உலகமக்களின் நலனில் அக்கறை செலுத்துதல் |
| 4. எப்பொழுதும் தெளிவான சிந்தனை | எதிலும் சமநிலை |
| 5. சுய கட்டுப்பாடு | சுயகட்டுப்பாட்டுடன் தவத்தை தொடர்ந்து செய்தல் |
| 6. நம்பிக்கையாளராக வாழ்தல் | பலர் நேசிக்கும்படியான அன்பராக இருத்தல் |
| 7. புன்னகையோடு பேசுதல் | அன்பும், கண்டிப்பும் கலந்து பேசுதல் |
| 8. பேச்சாற்றல் | அமைதியாக சிலவார்த்தைகள் பேசுதல் |
| 9. எல்லோரிடமும் ஒன்றி வாழ்தல் | அவ்வப்போது தனிமையில் இனிமை காணுதல் |

# சுயமதிப்பீடு செய்தல்

| |
|---|
| பராக்கிரமம் செய்ய முடியாததை உபாயம்செய்து முடித்துவிடும் |

எளிமை, பொறுமை, தூய்மை, விடாமுயற்சி இந்நான்கும் நம்மிடம் இருக்குமேயானால் இறைவன் நமது உள்ளத்தை விட்டுப் போகவே மாட்டார். அவருக்குப் பிடித்த அன்பைப் பெருக்கி அவர்மேல் பேரன்பு வைத்துவிட்டால் இறைவனோடு இணைந்து வாழலாம் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். தடைகள் அனைத்தையும் இறைநம்பிக்கையோடு வாழ்பவர்களின் தூய ஆற்றல் நிச்சயம் வென்றுவிடும்.

பூமியில் பிறந்ததே இறைவனை அடைவதற்காகவே என்ற தத்துவத்தை உணர்ந்து அறிந்ததால்தான் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் போன்றவர்கள் கோயில் கோயிலாகச் சென்று இறைவனைப் பற்றி பாட்டியற்றி பரவசமடைந்திருக்கின்றனர். மற்றவர்கள் உயர்வு பெற வழிகாட்டியிருக்கின்றனர்.

நாம் அந்த அளவிற்கு போக வேண்டியதில்லை. காலம் மாறுவதற்கு ஏற்றாற்போல் இறைவனும் தியான பயிற்சியையும், அவரை அடையும் முயற்சியையும் புதிய 'சிலபஸாக' (Syllabus) மாற்றியமைக்கிறார். வண்டிகட்டி மாடுபூட்டி பயணம் செய்தவர்கள் இன்று காரில் செல்லவில்லையா! காலமும் அவரே! மாற்றமும் அவரே!

பழனி, திருப்பதி போன்ற கோயில்களில் அன்றாட வரவு என்ன என்று உண்டியலை பிரித்து எண்ணிப்பார்த்து விடுவர். ஆனால் இறைவனோ பணத்தை எண்ணிப்பார்ப்பதில்லை. அங்குவரும் பக்தர்களின் மனத்தை எண்ணிப் பார்க்கிறார். அதில் நல்ல ஆன்மா யார் என்பதை பார்த்து தன் பக்கம் இழுக்க நல்ல குருநாதரின் தொடர்பைக் கொடுத்து விடுகிறார்.



இறைவனின் பக்கம் நாம் ஈர்க்கப்பட வேண்டுமானால் சுயமதிப்பீடு நம்மைப்பற்றி நாம் செய்தல் வேண்டும். நல்லவைகளை நாம் வைத்திருக்கிறோமா? அல்லது பின்பற்றுகிறோமா? அத்துடன் கெட்டவைகள் நம்மிடம் எது அதிகமாக கலந்து இருக்கிறது என்றெல்லாம் அன்றாடம் மனதில் போட்டு சலித்துப் பார்க்க வேண்டும்.

கெட்டது எது நம்மிடம் இருக்கிறதோ அதைப்பற்றிய விண்ணப்பம் எழுதி உங்கள் உள்ளே இருக்கும் இறைவனிடம் கொடுக்க வேண்டும். பிறகு பாருங்கள் கெட்டவைகள், கெட்ட குணங்கள் யாவும் படிப்படியாக மறைந்துவிடும்.

முதலில் உங்கள் மேல் உள்ள நம்பிக்கையை அதிகப்படுத்த கெட்டவைகளை நாம் ஒவ்வொன்றாகக் கண்டறிந்து விலக்க இறைவனிடம் மன்றாட வேண்டும்.

பொதுவாக நாமாகவே ஒரு பழக்கத்தைத் துவக்கிவிட்டு அதை விடுவதற்கு மனோதத்துவ டாக்டரை அணுக வேண்டியிருக்கிறது. இது நமக்குத் தேவைதானா!

எல்லாம் வல்ல இறைவனை தனக்குள்ளே உள்ள மானசீகக் கோயிலில் பார்த்து பரவசமடைந்து வருபவர்களுக்கு வெயிலில் போட்ட ஐஸ் கட்டிபோல் கெட்டவைகள் கரைந்தோடிவிடும்.

பேசும்போது நல்லவைகளைப் பேச முயற்சிக்க வேண்டும். கெட்டவைகளைப் பார்க்க கண்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது. கெட்ட விசயத்தை யாராவது பேசும்போது மனதில் மந்திரம் சொல்ல ஆரம்பித்துவிட வேண்டும். 'பிறர் குற்றம் பார்ப்பதை நிறுத்திவிட்டு தன் குற்றம் கண்டு நீக்க வேண்டும்.'

இதையெல்லாம் நாம் செய்து வரும்போது நம்மை நாம் படிப்படியாக உயர்த்திக்கொண்டே செல்கிறோம். உங்கள் மகள் கணக்குப் பரிட்சையில் நூறுமார்க் எடுத்துள்ளாள் என்றால் உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். மற்ற பாடங்களில் 99, 98

என்றாலும் மகிழ்ச்சிதான். ஆனால் ஒரு கெட்ட பையன் கூட சுற்றுகிறாள் என்றால் எப்படியிருக்குமோ அதைப் போன்றதுதான் நம்மிடம் அறிவு இருந்தும் பக்தியிருந்தும் கெட்ட பழக்கங்கள் ஒட்டிக் கொண்டிருப்பது.

இதனால் ‘தன்னை அறிவதே அறிவு’ என்ற பொன்மொழியை உணர்ந்து பார்க்க வேண்டும். அன்றாடம் நாம் பேசியவற்றில் எவ்வளவு தவறுகள் வந்துள்ளது. பிறரைப் புண்படுத்தினோமா, எங்கெங்கே ஆணவம் நிறைந்த பேச்சு வந்தது என்று நாம் ‘ரீவைண்டிங்’ செய்து அதாவது திரும்பத் திரும்ப போட்டுப் பார்த்து திருத்திக் கொள்ள வேண்டும்.

நமது திறமையால் மட்டும் நம்மை மாற்றிவிட முடியாது. இதற்கும் இறைவனிடம் கெஞ்ச வேண்டும். பிறகுதான் அதிகாலையில் சூரியன் உதயமாவதுபோல் நம்மில் ஞானப்பிரகாசம் தோன்றும்.

கடந்து போன காலமும் நேரமும் மீண்டும் திரும்ப வராது என்பதால் தயவு செய்து உங்கள் லட்சியத்தை நோக்கி அனுதினமும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள்.

நமது நேரத்தையும் காலத்தையும் பயனுள்ள வழியில் செலவு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் கடைசி நேரத்தில் வருந்த நேரும். அடிக்கடி நமது முழுகவனத்தை நம்மை நோக்கி திருப்ப வேண்டும். பொதுவாக உலக மக்களிடம் அதிகமாக ஒட்டிக்கொள்ளக்கூடாது.

நாம் எந்தப் பொருள்களின் மேலோ, மனிதர்களின் மேலோ பற்று வைத்தால் அவர்களால் துன்பப்பட நேரிடும் என்பதை மறந்து விடாதீர்கள். பொதுவாக நீங்கள் நல்லபடியாக இருக்க வேண்டுமானால் உங்களிடம் உள்ள கெட்டவைகள், குறைகள் ஒவ்வொரு நாளும் குறைந்துகொண்டே வந்து முடிவில் அது காணாமல் போய்விட வேண்டும்.

அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது உங்களையே நீங்கள் உற்றுநோக்க வேண்டும். இறைவனை மறவாதிருக்க வேண்டும்.



‘எங்கே உண்மையான ஆர்வமும் ஏக்கமும் இருக்கின்றதோ அங்கே கடவுள் தம்மைத்தாமே தோற்றுவித்துக் கொள்கிறார்’ என்று சீரடிபாபா அனுபவபூர்வமாகக் கூறியிருக்கிறார். பொதுவாக ஒருவர் எவ்வளவுதான் கற்றிருந்தாலும் கடவுளை அறிந்தவர் முன் உண்மையிலேயே மங்கி விடுகிறார்.

இதனால் மனவலிமையினாலும், நம்மை நாம் சுயமதிப்பீடு செய்து திருத்திக் கொள்வதாலும் தியானமும், தவமும் எளிமையாகச் செய்து உயர்ந்த நிலைக்கு வந்துவிட முடியும்.

‘இறை நம்பிக்கை என்னும் தங்க மோதிரத்தில் பதிக்கப்பட்ட வைரம்தான் தியானமும் தவமும்.

தியானப் பயிற்சி என்பது குருவின் உதவியால் உள்ளத்தில் கோயில் எழுப்பி இறைவனைப் பூஜிப்பதாகும்.

அனுதினமும் உங்கள் மனம் இறை நாட்டத்திலேயே இருக்க வேண்டும்.

கார் ஓட்டுனர் எப்படி பாட்டுக் கேட்டுக் கொண்டே கார் ஓட்டுகிறாரோ அதைப்போன்று இறைவனை நினைத்துக் கொண்டே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும்.

**ஒவ்வொரு பெரிய கோயில்களின் வெளியிலும் வீதிகளிலும் பிச்சைக்காரனைப் போல் சற்குரு காணப்படுவார்.**

**எந்த கெட்ட வாசனையும்<br>அவரிடம் இருக்காது.<br>கொடுப்பனை உள்ளவர்<br>கண்ணுக்கு காட்சியளிப்பார்.**

# எண்ணம் போல் வாழ்வு

**உலகில் உயர்ந்தது எது?**
ஞானம்.

**ஞானம் என்றால் என்ன?**
இறைவனைத் தெளிவாக எண்ணுவது

**இதனால் என்ன லாபம்?**
காணாமல் போன விலை மதிப்பற்ற பொருளைத் தேடி எடுப்பது.

சரி விசயத்துக்கு வருவோம்.

கோயிலுக்கு செல்லும் பலர் எண்ணத்தை இறைவன்மேல் வைப்பதில்லை. ஏதோ கடனுக்குத்தான் செல்லுகின்றனர். ஏன் கோயிலுக்குச் சென்றீர்கள் என்று கேட்டால் **'நேர்த்திக்கடன்'** என்று கூறுகின்றனர்.

இன்னும் சிலர் 'என் குழந்தைக்கு உடம்புக்குச் சரியில்லாதபோது இந்தக் கோயிலில் மொட்டை அடிக்க நினைத்தேன். அதுதான் இந்த நேர்த்திக்கடனைச் செலுத்த வந்தேன்' என்று கூறுகின்றனர்.

அடுத்து அடுத்து பலரை விசாரித்துப் பார்த்தால் தொழில் பிரச்சனைக்காக இறைவனிடம் வேண்டியவர்கள், வீடுகட்டி முடிக்கவேண்டும் என்று நினைத்தவர்கள், தன் குழந்தையின் கல்வி, வேலைக்காக இறைவனிடம் இரைஞ்சுபவர்கள்தான் இருக்கிறார்களே தவிர இறைவனை தன்னிடம் வரும்படி கோயிலில் வேண்டுபவர்கள் ரொம்ப ரொம்ப குறைவாகத்தான் காணப்படுகின்றனர். அச்சத்தால் இறைவனிடம் செல்பவர்களே அதிகம்.

'அச்சம் அறியாமையிலிருந்துதான் பிறக்கிறது. எனவே அறியாமையை முதலில் நீக்க வேண்டும்.'

நல்ல கருத்துக்கள், நல்லவர்கள் வாயிலாக வரும்போது இழந்த பொருள் மீண்டும் வந்துவிட்டதாக நினைத்து மூளையில் பதிவு செய்து கொள்பவரே மனிதரில் சிறந்தவர்.



மூடனைப் பிறர் அழிக்க வேண்டியதில்லை. தன் எண்ணம் சரியில்லாததால் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறான். அறிவாளி தன் எண்ணத்தை இறைவன்மேல் செலுத்தி உயர்ந்துவிடுகிறான்.

அறிவற்றமுட்டாள் மவுன விரதம் இருந்தால் மட்டும் இறைவனை அறிய முடியாது. ஏனென்றால் அவன் மவுனத்தில் எண்ண அலைவரிசை வெளியில் செல்கிறது. அது இறைவனிடம் செல்லவில்லை.

எண்ணம் எப்பொழுதும் உலக விசயங்களில் செல்வது மனித இயல்புதான். அதை அவ்வப்போது அணைபோட்டுத் திருப்பி இறைவன்பக்கம் கொண்டுவர முயற்சிப்பவரே பிறவியை ஜெயிப்பவர்.

நமது எண்ணம் இறைவன் பக்கம் இருக்குமேயானால் கண்டிப்பாக தெளிவான பேச்சு, உயர்ந்த செயல், மறுமைக்கான உழைப்பு, செல்வத்தில் ஆரோக்கியம், தன்நிறைவு, எதிலும் பற்று இல்லாது இறைபற்றுடன் வாழலாம்.

மகிழ்ச்சியில் அனுதினமும் இறைவனை எண்ணி நினைப்பவரே மனிதரில் மிகச் சிறந்தவர். துன்பத்தில் இறை நினைப்பு சிறிது வருவது இயல்பு. ஆனால் இந்த நேரத்தில் பக்தியை அதிகப்படுத்த முயல்பவர் இரட்டிப்பு வெற்றியை அடைவர்.

துன்பத்தில் இறை நினைப்பு வரும். ஆனால் திடீரென அந்தத் துன்பத்திலேயே எண்ணம் செல்லுமே தவிர இறைவன்மேல் பற்று வைப்பது குறைந்துவிடும். இதைக் கவனித்து எண்ணத்தை இறைவன்பக்கம் கொண்டு செல்வது பக்தனின் கடமையாகும்.

இறைவன்மேல் எண்ணத்தை நிலைநிறுத்தத்தான் கோயில் கட்டப்பட்டது. **'இறைவன் யார்?'** என்ற கேள்விக்குறி அநேகருக்கு இருக்கும்.

ஆனால் கோயில் என்ற அழகான கட்டிடத்தை உங்கள் உள்ளம் பதிய வைத்துக் கொள்ளும். எந்தக் கோயில்

சூழ்நிலை உங்கள் மனதிற்குப் பிடிக்குதோ அந்தக் கோயிலை நினைத்தவுடன் உணர்வுப்பூர்வமாக உங்களால் பார்க்க முடியும்.

இப்பொழுது உங்கள் எண்ண அலைவரிசையை தூண்டினால் நீங்கள் அந்த கோவிலில் உலாவலாம். அங்கு உள்ளே சென்று இறைவனைத் தரிசிக்கலாம். இந்த நிகழ்ச்சி எங்கு நடக்கிறது என்றால் உங்கள் மூளையில். இந்த ஒளிபரப்பை எண்ணம்தான் துவக்குகிறது. எண்ணம் சிறப்பானால் எல்லாமே கைக்கூடும். இதனால் எண்ணத்தை அடிக்கடி இறைவன் பக்கமே கொண்டு செல்ல முயற்சி செய்யுங்கள்.

மனம்தான் நமது கேமராமேன். எண்ணம்தான் வீடியோ கேமரா. இப்பொழுது கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் சென்ற கோயிலை எண்ணம் என்ற கேமரா வாயிலாக படம் எடுத்துவிட்டீர்கள்.

சரி இப்பொழுது வீட்டிற்கு வந்தாகிவிட்டீர்கள். எண்ணத்தால் எடுக்கப்பட்ட வீடியோவில் இருக்கும் C.D. யை அறிவு என்ற V.C.D. யில் போட்டுப் பாருங்கள். அப்படியே காட்சிகளை ரசித்துப் பார்க்க உங்களால் முடியும்.

உங்களால் முடியாதது எதுவும் இல்லை. ஆனால் உங்கள் எண்ணத்தை அதில் செலுத்தவில்லை. உலகில் உயர்ந்த பொருள் இறைவன் என்பதை அறியாததுதான் அதற்கு காரணம்.

எதார்த்தவாதிக்கு எதிலும் வெற்றியில்லை. காரியவாதிக்கு இம்மை, மறுமை இரண்டும் வெற்றியாகும்.

'நண்பன், பகைவன், நல்லவன், கெட்டவன், மானம், அவமானம், இகழ்ச்சி, புகழ்ச்சி ஆகியவற்றையெல்லாம் ஒரே மாதிரியான உணர்ச்சியுடன் எண்ணுபவனும், ஆசைகளை விலக்கி, தனது கவலைகளை தூக்கி எறிந்துவிட்டு, தனது திறமையை முன்வைத்து என்னை அனுதினமும் எண்ணி வாழ்பவர்கள் எனக்கு இனிமையானவர்களாவர்' என்று பரமகுரு பகவான் கிருஷ்ணர் கீதையில் கூறுகிறார்.

எண்ணங்களை அடக்கும்போது விழிப்புணர்வு தேவை
இல்லையேல் தூக்கம் உண்டாகும்.



# பக்தியும் கோயிலும்

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்காதே
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
சூதாட்டத்தையும், சூதான உள்ளத்தையும் விரும்பாதே''
(ஔவையார்)

**பக்தி என்றால் என்ன?**

நாம் உலக வாழ்வில் இன்பகரமாக தொடர்ந்து இருக்கவும், அத்துடன் துன்பத்திலிருந்து தப்பிக்கவும், இறைவன்மேல் நம்பிக்கையை தன் மனதில் வளர்த்துக் கொள்ள முயற்சிப்பதே பக்தி. நம்பிக்கை இல்லாவிட்டால் பக்தி வராது. எதிலாவது ஒன்றில் பக்தி இருந்தால்தான் சக்தியே பிறக்கும்.

**ஏன் கோயிலுக்குச் செல்ல வேண்டும்?**

நாம் நீந்தவேண்டுமென்றால் நீச்சல்குளமோ, ஏரியோ போக வேண்டுமல்லவா. இதேபோல் பக்தியை வளர்க்க முயற்சிப்பவர் கோயிலுக்குச் செல்ல வேண்டும். நல்ல குருமார்களின் பக்திச் பேச்சினையும் கேட்க வேண்டும். அத்துடன் பக்தி, தியான, ஞான நூல்களையும் படிக்க வேண்டும்.

**கோயிலுக்குப் போய்வந்தால் பக்தி கூடுமா?**

நாம் உணர்வுபூர்வமாகப் புரிந்து கொள்வதைப் பொறுத்திருக்கிறது. பக்தியும், ஞானவிளக்கமும் தெரிந்த வழிகாட்டியின் உதவியால் கோயிலுக்குச் சென்றால் உண்மை புரியும். பக்தி கூடும்.

**ஒருவர் எப்பொழுது பக்தனாக மாறுகிறார்?**

இறைவனை இந்த பூமியில் மனித உருவத்தில் சந்திக்கும்போது.

**இறைவனை எப்படிக் கண்டுபிடிப்பது?**

முதலில் ஞானகுரு கிடைத்தால் சற்குருவடிவில் இருக்கும் இறைவனை சந்தித்துவிடலாம்.

**கோவிலில் சிவன், சக்தி, விநாயகர், சுப்ரமணியம் வைத்திருப்பதற்கு விளக்கம் என்ன?**

நமது ஜீவனை குருவின் அருளாலும், பயிற்சியாலும் சிவனாக்க வேண்டும். குருவின் தீட்சையால் நெற்றிக்கண் திறந்து ஜோதி தரிசனம் கிடைக்கும்.

சக்தி என்ற மனம் அறிவு என்ற சிவனோடு சேரும்போது மாயாசக்தி மறைந்து, கிரியா சக்தியாக மாறி, ஜீவசக்தி கூடி ஞான ஒளியாக நம்மில் பிரகாசிக்கிறது. உண்மையான பக்தர்களுக்கு இது கிடைக்கும்.

விநாயகர் என்பது உடல் கூறைக் குறிக்கும். முருகன் என்றால் மும்மலத்தை வென்றவன். மும்மலத்தை வென்றபின்தான் சுப்ரமணியமாக இருப்பர்.

சுப்ரமணியம் என்றால் குருவின் தயவால் சற்குருவை அறிந்து உணர்ந்து தனக்குள்ளே கோயில் அமைத்து அவரை வழிபடுவதாகும். சற்குருதான் பிரம்மம். சுத்த பிரம்மத்தை உணர்ந்தவரே சுப்ரமணியம்.

**புராணம் என்ன சொல்கிறது?**

வேதங்கள் சொன்ன நல்ல கருத்துக்களை கதையாக சித்தரித்து மக்களுக்குப் பக்தியையும், ஞானத்தையும் புரிய வைக்கிறது.

**கோயிலில் ஞானிகள் இருப்பார்களா?**

ஞானிகள் மக்கள் நடமாடும் இடங்களிலெல்லாம் இருப்பார்கள். அவர்கள் பிச்சைக்காரர் வேஷத்திலும் இருக்கலாம். குடும்பஸ்தர்களாகவும் இருக்கலாம். எமது அனுபவத்தில் தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கிறார்கள். கோயில் உள்ள இடங்களில் நல்ல மனிதர்களுக்கும் காட்சி கொடுப்பார்கள்.

**ஏன் தமிழ்நாட்டில் சிறப்பான கோயில் இருந்தும் பக்தி முறையாக வளரவில்லை?**

பொதுவாக கலியுகமான தற்காலத்தில் இறைவனைப் பிடிப்பது வெகுசுலபம். ஆனால் இறைவனை மறக்கடிக்க



மாயை ஏகப்பட்ட சீன் ஓட்டிக் கொண்டிருக்கிறது. இதனால் உண்மையைக் கூறவரும் குருமார்களை மக்கள் மதிப்பதில்லை. உதாரணமாக நல்ல புத்தகத்திலுள்ள கருத்துக்களை நமது மூளையில் பதிய வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, புத்தக அட்டைப்படத்தை அல்ல. ஒரு குழந்தைக்கு படம் பார்த்து படிக்க வைப்பதற்குக் காரணம் அந்தப்படத்திலுள்ள பொருள் இன்னது என்று தெரிவதற்காகத்தான். ஆனால் அந்தப்படத்திலுள்ள பொருளை சாப்பிட முடியாது. பொருளை கடையில் வாங்குவதற்கு மனதிற்கொரு பயிற்சியாகும்.

இதைப்போன்றுதான் இறைவனை அடைய ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு பயிற்சி சிலை விளக்கமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதை உணர்ந்து புரிந்து இந்தப் பிறவியில் முயற்சிப்பவர்களுக்கு சரியான வாய்ப்பளிக்கும் பள்ளியாக விளங்குவதே கோயில்.

கோயிலில் ஞான விளக்கங்கள், பக்திக் கதைகள் கூற வேண்டும். இதற்கென்று முறையான இயக்கம் வேண்டும். மக்களிடம் ஆர்வமும் ஒத்துழைப்பும் வேண்டும். குறைகாண்பதிலும், குறைகூறுவதிலும் பொழுதைப் போக்குகின்றனர். சுயஒழுக்கம் நம்மிடம் நிலைத்து நிற்க வேண்டும். ஒவ்வொருவரும் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டால் பக்தியும் ஞானமும் நம்மிடம் தானாகவே வளரும்.

**பக்தியும், ஞானமும் வளர நம்மை நாம் எப்படித் தயார்ப்படுத்திக் கொள்வது?**

மிலிட்டரி, ஏர்போர்ஸ், போலீஸ் போன்ற வேலைக்குத் தேர்ந்தெடுத்தபின் சரியான முறையில் உடலையும், உள்ளத்தையும் பயிற்சியால் தயார்ப்படுத்துவது போல் நம்மை நாம் தியானப்பயிற்சியால் தயார்ப்படுத்த வேண்டும்.

காலையில் எழுந்து யோகாசனங்கள் செய்வது 3 மணி முதல் 5 மணிக்குள் உள்ளக் கோவிலில் இறைவனுக்குப் பாத பூசை செய்வது, மந்திரங்கள் சொல்லி அர்ச்சனை செய்து வருவது யாவும் பக்தியின் வெற்றிப் படிகளேயாகும்.

உங்களுக்குத் திருப்தியான ஞான குரு கிடைக்கும் வரை சுயமாக எந்தக் கோயில் பிடிக்கிறதோ அதை உள்ளத்தில் வைத்து அங்கு இறைவனை எண்ணத்தால் தரிசித்து வழிபட்டு வாருங்கள். நாளடைவில் சற்குருவை எந்த வழியிலாவது சந்தித்து விடுவீர்கள். ஆனால் குருவின் விளக்கமும் அவருடைய வழிகாட்டலும் தான் உங்களை விரைவில் உயர்த்தும்.

வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் மறக்கலாம். இறை நினைப்பை மட்டும் மறந்து விடக்கூடாது.

**இரை வயிற்றுக்கு**
**இறை உள்ளத்திற்கு**

உள்ளம் ஒரு கோயில் என்பதை திடமாக நம்புங்கள். நாம் பிறந்து வளர்ந்த குழந்தைப் பருவமான 8 மாதத்திற்குள் நடந்தது எதுவும் நமக்குத் தெரியாது. ஆனால் எதுவும் தெரியாத நாம் அம்மா, அப்பா என்று அவர்களை நம்பி அழைக்கிறோம் என்றால் அவர்கள் சொன்ன சொல்லில் நம்பிக்கை வைத்துத்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இதைப்போன்றுதான் பூமியில் சற்குருவடிவாக இறைவன் நடமாடுகிறார் என்பதை குருவின் உதவியால் அறிந்து உணர்ந்து நம்ப வேண்டும். பிறகு எல்லாம் நமக்குப் புரியும். இறைமார்க்கம் கைகூடும்.

எதையும் புரிந்து செய்தல், உண்மை என்று அறிந்தால் அதை உடனே செய்தல், பிறகு தொடர்ந்து செய்தல் யாவும் பக்திக்கு தூண்போன்றதாகும்.

'ஞானத்தின் துவக்கம் பக்தியாகும்.
பக்தியின் முடிவு ஞானமாகும்.'

உண்மை சொல்லும் ஞானகுருமார்களுக்கு சோதனைகள் யாவும் ஞானச் சாதனையாக மாறி விடும். துன்பம் தூசி போன்றதாகும். உலகம் பொய் என்றறிந்த அவர்களுக்கு மாயை தள்ளி நிற்கும். இவர்களே பக்தர்களைக் கரைசேர்க்கும் 'ஞானக் கப்பலோட்டிகள்' ஆவர்.



பிரார்த்தனை செய்யும் எந்த மனிதனும் ஏதேனும் ஒரு புதிய விஷயத்தைக் கற்கத் தவறமாட்டான் (எமாகன்)

மனித உடலை கோயிலுக்கு ஒப்பிடுவார்கள்

| | |
|---|---|
| சிரசு | – கர்ப்ப கிரகம் |
| கழுத்து | – அர்த்த மண்டபம் |
| மார்பு | – மகா மண்டபம் |
| நாடி | – யாக சாலை |
| பாதம் | – கோபுரம் |
| வாய் | – கோபுரம் |
| நாக்கு | – நந்தி |
| உள்நாக்கு | – கொடிமரம் |
| பஞ்ச இந்திரியங்கள் | – தீபங்கள் |
| இதயம் | – கர்ப்ப கிரகம் |
| உயிர் | – மகாலிங்கம் |

மனித உடலும், உள்ளமும் கோயிலாகவும், ஆன்மா வாழும் வீடாகவும் ஞானிகள் வாயிலாகக் கூறப்பட்டுள்ளது.

'வீட்டைக் கட்டிப்பாரு
திருமணத்தைப் பண்ணிப்பாரு'

என்ற பழமொழியில் உயிரோட்டமான கருத்து அடங்கிக் கிடக்கிறது. தன் உள்ளத்தில் மனதால் வீடுகட்டி இறைவனை திருமணம் செய்து அங்கே அவரை வைத்துப்பார் என்பது தான் இதன் பொருள்.

இறைவன் ஆண் பாதி, பெண் பாதியாக இருப்பதற்குக் காரணம் மனிதன் மனம் பாதி, அறிவு பாதியாக இருப்பதேயாகும். இதை சரியாக இணைத்து சாமர்த்தியமாக வாழ்வதே தெய்வீக வாழ்க்கையாகும். இப்படிப்பட்டவர்கள் இந்த உலகிலும், மறுமை உலகிலும் ஆனந்தமடைவர்.

# சைவமும் சிவபெருமானும்

**சைவம் என்றால் என்ன?**

கொல்லாமை, தூய்மை, புனிதம் என்று மூன்றும் கலந்த நிலைமையே சைவமாகும்.

**கொல்லாமை என்றால் என்ன?**

உடலில் உள்ள உயிரணுக்கள் இறந்து வேர்வையிலும் சிறுநீரிலும் வெளியேறுவதால் நாற்றமடிக்கிறது. ஆனால் பல மாதங்களாக குளிக்காதிருக்கும் ஞானிகளிடையே கெட்ட நாற்றம் வருவதில்லை.

இதற்கு அவர்களின் தியானமும் தவமுமே காரணமாகும். இதனால் அவர்களுடைய உயிரணுக்கள் கொல்லாது பாதுகாக்கப்படுகின்றன. வேர்வையிலும் நாற்றமில்லை. இப்படிப்பட்ட ஞானிகளைத்தான் எல்லா உயிர்களும் கைகூப்பித்தொழும். இதுதான் சைவத்தின் ரகசியமாகும்.

**கொல்லான், புலால் மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்** – திருக்குறள்

புலால் மறுத்தானை – உலக ஆசையை விட்டவனை

கொல்லான் – தவசக்தியால் தனது உயிரணுக்களைப் பாதுகாப்பவன்.

தனது உடலிலுள்ள ஜீவ அணுக்களை இறப்பிலிருந்து தியானத்தாலும், தவசக்தியாலும் பாதுகாப்பவரே மனிதரில் புனிதனாகி மக்களுக்குத் தொண்டு செய்யும் குருமார்களாக வாழ்கின்றனர். இவர்களே உண்மையான சைவத்தை கடைப்பிடிப்பவராவர். இவர்களுக்குத் தூய்மையும், புனிதமும் என்றும் உண்டு.

**சிவதர்மம் என்பது யாது?**

1. கொல்லாமை
2. பழிக்கு அஞ்சுதல்
3. பொறுமை
4. தவம் புரிதல்



5. உள்ளன்புடன் இருத்தல்
6. இயன்றவரை கொடைச் செயல் புரிதல்
7. சிவனாகிய சற்குருவை அர்ச்சித்தல்
8. புண்ணிய காரியங்கள் செய்தல்
9. சிவனாகிய சற்குருவை மானசீகமாக தியானித்தல்

**உலகில் உள்ள நான்குவித பக்தர்கள் யார்?**

1. முக்தியை லட்சியமாகக் கொண்ட ஞானி
2. மோகத்தை விரும்பி தியானிக்கின்ற பக்தன்
3. தன்னிடம் உள்ள நோய்கள் நீங்க பிரார்த்தனை செய்பவர்கள்.
4. தான் பணக்காரனாக வேண்டும் என்று யாசிப்பவர்கள்.

**சிவன் என்பவர் யார்?**

சிவன் என்பவர் பகவான். பகவானுக்கு, ஆறு குணங்களை உடையவர் என்ற பொருளுண்டு. பகவானாகிய சற்குருவை பூமியில் கண்டறிந்து உள்ளத்தில் வைத்து பூசிப்பவர்களுக்கு அவரின் ஆறு குணங்களாகிய ஞானம், ஐசுவரியம், சக்தி, பலம், வீரியம், தேஜஸ் என்பன வந்து சேர்ந்து விடும்.

**எப்படி பூமியில் இறைவனைத் தேடுவது?**

உள்ளத்தில் கோயில் கட்டி, இறைவனைப் பூஜிக்கும் போது படிப்படியாக பக்தி பெருகும். உண்மையான இறைநாட்டம் உள்ளவர்கள் குருவைக் காட்டிக் கொடுக்கும்படி இறைவனிடம் வேண்டுவர். இறைவன் அருளால் குரு கிடைப்பார். பிறகு குருவின் வாயிலாக சற்குருவை அறிந்து உணர்ந்து உயர்வு பெறுவர். சற்குருவே மனித வடிவில் உள்ள சிவனாகும். உலகில் தேவையற்றிருப்பவரே சற்குரு.

**சிவன் கோயிலில் பிரதோஷம் என்று கொண்டாடுவதின் ஐதீகம், மகிமை விளக்கம் என்ன?**

சிவன் கோவில்களில் நடைபெறும் விசேஷமான விழாக்களுள் ஒன்றான 'பிரதோஷம்' 15 நாட்களுக்கு ஒருமுறை வரும்.

சிவன் கோவில்களில் சோமவாரம், சிவராத்திரி, பிரதோஷம் போன்ற விரத தினங்களில் வழிபாடு செய்பவர்களின் பாவங்கள் நீங்கப்பெற்று புண்ணிய நலன்களை எளிதில் பெறுவார்கள் என்பது ஐதீகம்.

தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் போர் மூண்டது. இதில் இருதரப்பில் பலர் மாண்டனர். ஆனால் அசுரர் தரப்பில் இறந்தவர்கள் அனைவரும் மீண்டும் உயிர்பெற்று வந்தனர். இதற்குக் காரணம், அசுரர்களின் குருவான சுக்கிராச்சாரியார் இவர்களுக்கு உபதேசம் செய்த மந்திரத்தால் அவர்கள் மீண்டும் மீண்டும் உயிர்பெற்றனர்.

'துன்பமின்றி வாழ விரும்பிய தேவர்கள் பிரம்மதேவருடன் திருமாலிடம் சென்று, சாவா மூவா நலம் பெற என்ன வழி?' என்று வினவ, 'திருப்பாற் கடலைக் கடைந்து அமிர்தம் உண்டால் மரணமின்றி இளமையுடன் வாழலாம்' என்று திருமால் கூறினார்.

திருமாலின் ஆலோசனைப்படி மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு அமிர்தத்துக்காக பாற்கடலைக் கடைந்தனர். பாம்பின் தலைப்புறம் தேவர்களும் வால்புறம் அசுரர்களும் இருந்து பாற்க்கடலை கடைந்தனர். கடையத் தொடங்கிய தினம் தசமி திதி.

மறுநாள் ஏகாதசியன்று தொடர்ந்து கடைந்தபோது வாசுகி உடல் வருத்தம் தாங்காது நஞ்சைக் கக்கியது. அப்போது கடலில் இருந்தும் நஞ்சு தோன்றியது. வாசுகி உமிழ்ந்த ஆலமும் (விஷம்) கடலில் தோன்றிய ஆலமும் கலந்து ஆலாலம் எழுந்தது. பயங்கர வெப்பத்துடன் புறப்பட்ட விஷத்தால் உலகமே அழியும் நிலை ஏற்பட்டது. வெண்ணிறமான திருமால் விஷத்தின் வேகத்தில் நீலநிறமானார். இதனைக் கண்டு அஞ்சிய தேவர்கள் கயிலாயம் சென்றனர். நந்தி பெருமானால் அவர்கள் சிவனிடத்தில் அழைத்து செல்லப்பட்டனர். அமிர்தத்துக்காகப் பாற்க்கடலை கடைந்ததையும் அப்போது விஷம் தோன்றியதையும் கூறி தம்மை காக்க வேண்டி, அவர் திருவடிகளில் வணங்கி முறையிட்டனர்.



தேவர்கள் முறையீட்டிற்கு இறங்கிய சிவ பெருமான் தம் தொண்டராகிய சுந்தரரை அழைத்து அக்கொடிய நஞ்சினைக் கொண்டு வருமாறு கூறினார் வானவர்களும் அணுக முடியாத அக்கொடிய நஞ்சினை, திருபாற்க்கடலுக்குள் சென்று எடுத்து வந்து சிவபெருமானிடம் தந்தார் சுந்தரர். எல்லா உயிர்களும் துன்பம் நீங்கி இன்புறும் வண்ணம் சிவபெருமான் அந்த நஞ்சை உண்டார். அப்போது அருகே இருந்த பார்வதி சிவனின் உடலுக்குள் விஷம் இறங்கி விடாமல் இருக்க சிவனின் கழுத்தைப் பிடித்தார். விஷம் கண்டத்தோடு நின்றுவிட்டது. இதனால் சிவந்த மேனியுடைய எம்பெருமானுடைய கண்டம் நீலமாக ஆயிற்று. அதனால் நீலகண்டர் என்று பெயர் பெற்றார். இவ்வாறு தேவர்கள் பொருட்டு சிவபெருமான் ஆலால விஷத்தை உண்டருளியது சனிக்கிழமை அன்று ஏகாதசி திதி மாலை நேரமாகும்.

நிம்மதி பெற்ற தேவர்களும் மற்றோரும் இறைவனைத் துதித்து வணங்கினர். பாற்கடலை மீண்டும் கடைந்து அமிர்தத்தை உண்ணுமாறு சிவபெருமான் கட்டளையிட்டார். தொடர்ந்து ஏகாதசி இரவில் கடலைக் கடையத் தொடங்க, பாற்கடலிலிருந்து ஐராவதம், கற்பகத்தரு, காமதேனு போன்ற சிறந்த பொருள்களை தேவர்கள் பெற்றனர். இலக்குமி பாற்கடலில் இருந்து தோன்ற திருமால் ஏற்றுக்கொண்டார்.

மறுநாள் துவாதசியன்று அதிகாலையில் அமிர்தம் தோன்றியது. அதனைத் தேவர்கள் பகிர்ந்து உண்டனர். அமிர்தம் உண்ட தேவர்கள் மகிழ்ச்சியில் துவாதசி அன்று ஆடியும், பாடியும் பொழுதைக் கழிக்கலாயினர்.

உண்ட களிப்பில் சிவபெருமானை மறந்தனர். பின்னர் தங்கள் தவறை உணர்ந்து சிவனை வணங்கி மன்னிப்பு கேட்டனர்.

தேவர்களுக்கு அருள்புரிய திருவுளம் கொண்டு கயிலையில் திரயோதசி திதி மாலை பிரதோஷ வேளையில் (மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை) தம் திருமுன்

இருந்த நந்திதேவரின் இரு கொம்புகளுக்கிடையில் நின்று அம்பிகை காண இறைவன் ஆனந்தத் திருநடனம் செய்தருளினார்.

அப்போது சரஸ்வதி தேவி வீணை மீட்டினார். இந்திரன் புல்லாங்குழல் ஊதினார். பிரம்மா தாளம் போட்டார். லட்சுமி தேவி பாடல்களைப் பாடினார். திருமால் மிருதங்கம் வாசித்தார்.

தேவர்கள் அதனைக் கண்டு மகிழ்ந்து சிவபெருமானை வணங்கி துதித்தனர். அது முதல் திரயோதசி திதியன்று மாலை பிரதோஷ காலம் என வழங்கலாயிற்று. விஷத்தில் இருந்து இறைவனால் காப்பாற்றப்பட்டு உயிர்கள் இன்பம் பெற்ற காலமே பிரதோஷ காலமாகும்.

பிரதோஷத்தன்று எம்பெருமானை வழிபடுதல் சிவமூர்த்திக்கு உரிய பல விரதங்களில் தலையாயது. இவ்விரதம் மேற்க்கொள்வோர் துன்பம் நீங்கப் பெற்று இன்பம் பெறுவர். இவ்வழிபாட்டில் சிறப்புகள் பல. இறைவன் பேரருளுக்கு நன்றி செலுத்தும் வண்ணம் இவ்வழிபாடு அமைந்துள்ளது.

பிரதோஷ காலத்தில் வீசும் மஞ்சள் வெயில் உடல்நலத்தையும் உள்ள உணர்வையும் கூட்டும். பிரதோஷ வழிபாடு திருக்கயிலையில் நடைபெற்றாலும் சிவபெருமான் எழுந்தருளியுள்ள அனைத்து சிவாலயங்களிலும் நிகழ்ந்து வருகிறது. பிரதோஷ வழிபாட்டில் எல்லா தெய்வங்களும் கலந்து கொள்கின்றன. ஆதலால் சிவாலயங்களில் பிரதோஷ காலம் புண்ணிய காலமாகக் கருதப்படுகிறது.

நந்தி, சிவபிரானிடத்தில் சென்று தேவர்களின் குறைகளை முறையிட்டு அத்துன்பத்தைப் போக்கியவர். ஆதலின் பிரதோஷ காலத்தில நந்திக்கு முதலில் பூஜை நிகழ்கிறது. நந்தி, சிவகணங்களுள் தலைவர். ஊழிக்காலத்திலும் வாகனமாக இருந்து இறைவனைத் தாங்கும் பெருமை பெற்றவர். நந்தி அறவடிவினன். அறம் விளங்குமிடத்தே ஆண்டவன் ஆனந்தத் தாண்டவமாடுவான்.



எனவே சிவ தரிசனத்தில் முக்கியமானதும் முதலாவதாகவும் செய்ய வேண்டியது நந்தி (எம்பெருமானைத்) தரிசிப்பதாகும். நந்தியின் இரு கொம்புகளுக்கு இடையே இறைவனை தரிசித்தால், நம் வேண்டுகோளை நந்தி, ஈசனுக்கு தக்கநேரத்தில் பக்குவமாக எடுத்துச் சொல்லி நிறைவேற்றி வைப்பார்.

பிரதோஷம் மாதம் இருமுறை வரும். வளர்பிறை தேய்பிறை ஆகிய இரண்டு காலங்களிலும் திரயோதசி திதியில் சூரியன் மறைவதற்கு முன் உள்ள காலமாகிய மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை உள்ள காலமே பிரதோஷ காலமாகும்.

சிவபெருமான் ஆலால விஷத்தை உண்ட நாள் சனிக்கிழமை. ஆதலின் சனிக்கிழமை அன்று வரும் பிரதோஷம் மிகச்சிறந்ததாகும். இதனை சனிப்பிரதோஷம் என கூறுவர். சித்திரை மாதம் வளர்பிறையில் வரும் பிரதோஷம் மகாப்பிரதோஷமாகும்.

**வழிபடும் முறை**

பிரதோஷ தினத்தன்று காலை நீராடி சிவாலயம் சென்று வழிபடுதல் வேண்டும். பிரதோஷ வழிபாடு செய்பவர்கள் அன்று பகலில் உண்ணாமல் விரதம் இருந்து வழிபாடு செய்தபின் மாலையில் உண்பது சிறப்புடையதாகும். பிரதோஷ வேளையில் சிவபெருமான் பார்வதிதேவியுடன் நந்திவாகனத்தின் மீதமர்ந்து மும்முறை வலம் வரும்போது முதல் சுற்றில் வேதபாராயணமும் மூன்றாம் சுற்றில் நாதகர இன்னிசையும் நடைபெறும்.

வழக்கமாக சிவன் சன்னதியில் 3 முறை வலம் வருவார்கள். ஆனால் பிரதோஷத்தன்று எப்போதும் போல் கோயிலை சுற்றக்கூடாது. இடபுறமாக சென்று சுவாமி அபிஷேக தண்ணீர் விழும் கோமுகம் வரை வந்து மீண்டும் வந்த வழியே திரும்பி சென்று சிவனை வழிபடவேண்டும். அப்போது கோமுகத்தை தாண்டக்கூடாது. இதற்கு சோமசூக்த பிரதட்சிணம் என்று பெயர்.

பாற் கடலைக் கடையும்போது வந்த ஆலால விஷம் தேவர்களைத் துரத்த, கயிலைக்கு ஓடி இறைவனை வலம் வந்து எம்பெருமானைச் சரணடைய எண்ணிய அவர்களை விஷம் அப்பிரதட்சிணமாகச் சென்று எதிர்த்தது. இதைக்கண்டு அஞ்சிய தேவர்கள் வந்த வழியே திரும்பி வர விஷம் அந்தப் பக்கத்திலும் எதிர்த்துச் சென்று பயமுறுத்தியது. இவ்வாறு வலமும், இடமுமாக வந்த அந்த நிகழ்ச்சிதான் சோமசுத்தப்பிரதட்சிணம் எனப் பெயர் பெறலாயிற்று.

முதலில் நந்தியை தரிசித்து பின் சுவாமி சன்னதிக்கு முன் உள்ள நந்தியின் இருகொம்புகளுக்கிடையே சிவலிங்கத்தையும் தரிசனம் செய்து வணங்கிய பின் அப்பிரதட்சிணமாகச் சண்டேசுவரர் சன்னதி வரை சென்று அவரை வணங்கிக் கொண்டே அப்படியே திரும்பி வந்து முன்போல் நந்தியையும், சிவபெருமானையும் வணங்கிய பின் வழக்கம்போல் பிரதட்சிணமாக ஆலயத்தை வலம்வரும்போது சுவாமி அபிஷேகத் தீர்த்தம் விழும் நிர்மால்யத் தொட்டியைக் கடக்காமல் அப்படியே வந்த வழியே திரும்பி அப்பிரதட்சிணமாக சன்னதிக்கு வந்து சிவலிங்கத்தையும், நந்தியையும் வணங்குதல் வேண்டும்.

பிரதோசத்தின் பலன்கள் : வறுமை நீங்குதல், பயம், பாவம் மரண வேதனை ஒழிதல்.

> அன்பு கொண்ட அடியார்களின் மனக்குறை தீர்த்துக் காப்பாற்றுவதற்காகவே கடவுள் புவியில் ஞானகுருவாக அவதாரம் செய்து அருள்புரிந்து ஆட்கொள்வார் என்பது வேத வாக்கியம்.
>
> – சற்குரு போதம்



# லட்சியமும் இறைத்தொண்டும்

''நமது லட்சியத்தில் காட்டும் உறுதியே வெற்றியின் ரகசியம்''

இறைவனை அறிவதையும், அடைவதையும் யார் லட்சியமாகக் கொண்டிருக்கிறாரோ அவரை ஒருபோதும் இறைவன் கைவிடமாட்டார். பல லட்சியவாதிகள் இருப்பர். ஆனால் இறைவனை அடைய முயல்பவரே முதன்மையான லட்சியவாதி.

'மண்ணும் பொன்னும் நம்மை விட்டுப் போவதற்குள் நாம் அதைவிட்டுப் போகும் நிர்ப்பந்தம் இருப்பதை நாம் சிந்திக்க வேண்டும்.'

பக்தியில் மூட நம்பிக்கை இருக்கக்கூடாது. உணர்ந்து ஆராய்ந்து செய்தல் வேண்டும். அறிவுபூர்வமாக உணர்வுப் பாதையில் செல்வதால் மட்டுமே இறைவனை உணர்ந்து பார்க்க முடியும். ஒரு மூடன் இறைவன்மேல் நம்பிக்கை வைக்க முடியாது. அப்படி நம்பிக்கை வைத்தால் அதற்குப்பெயர்தான் மூடன்+நம்பிக்கை=மூடநம்பிக்கையாகும்.

பொதுவாக ஒரு லட்சியவாதி சிறந்த தன்னம்பிக்கை யாளராகவும் இருப்பார். தன்னம்பிக்கை என்பது தனது அறிவின்மேல் நம்பிக்கை வைப்பதாகும். அவ்வப்போது சந்தேகம் வந்தாலும் சிந்தித்து தெளிந்து விடுவர்.

அறிவின்மேல் நம்பிக்கை உள்ளவருக்கு சற்குருவின் காட்சி, தொடர்பு, தரிசனம் எல்லாம் ஒரு நாள் கிடைத்துவிடும். இவர்மேல் ஞானக்காற்று வீச ஆரம்பித்துவிடும். துன்ப காலத்தில்கூட ஒரு நிமிடம் வருந்தி உடனே இறைவனை நினைத்து பேரின்பத்தில் நுழைந்துவிடுவர்.

இப்படிப்பட்ட லட்சியவாதிகள் பூமியிலும், மறுமையிலும் வெற்றி வீரராக இருப்பர். மிகுதியான கவலை இவர்களை சுற்றி வளைத்துவிடாது. தோல்வி போல் தெரிவதுகூட முடிவில் வெற்றியாகும். மிகுந்த முயற்சியுடன் ஓடிச்செல்பவனுக்கு அவன் தேடியது கிடைக்கும்.

இவர்களுக்கு முழுமையான உணர்வு இருப்பதால் அறிவின் கூர்மையால் ஞானகுருவை அடையாளம் தெரிந்து அவர்களிடம் நம்பிக்கை வைத்துவிடுவர். இவர்கள் உழைப்பாலும் பேரன்பாலும் இறைவனை அடைவது உறுதியாகிவிடும். 'பெரிய நம்பிக்கைகளால் பெரிய மனிதர்கள் உருவாகிறார்கள்'

பொதுவாக ஒரு லட்சியவாதிக்கு திட்டம் என்று ஒன்று வேண்டும். எதை எதை எப்பொழுது முடிக்க வேண்டும் என்ற காலவரையறை தேவை. லட்சியவாதியானவன் சிறுசேமிப்புப் போல் கொஞ்சம் கொஞ்சமாக அன்றாடம் இறைவனைப் பற்றி நல்ல விசயத்தை உள்ளத்தில் சேமித்துக் கொண்டேயிருப்பான். அதேநேரத்தில் இவர்களுக்கு நல்ல குரு கிடைத்துவிட்டால் வங்கியில் போட்டிருந்த கோடி ரூபாய் டெபாசிட், வட்டியும் முதலுமாக கைக்கு வந்தது போன்றதாகும்.

லட்சியவாதிகள்தான் கோயில் எழுப்பியிருக்கின்றனர். தான் எந்த லட்சியத்தை முன் வைத்து வெற்றி பெற்று பேரின்பத்தை அடைந்தனரோ அதைப் படம்போட்டு கோயிலாக காட்டிவிட்டுச் சென்றுள்ளனர். பின்னால் வரும் லட்சியவாதிகளுக்கு ஒரு துவக்கப் பாடம் நடத்தும் துவக்கப் பள்ளிதான் கோயில்.

விஞ்ஞானிகளும், மெய்ஞானிகளும் லட்சிய வாதிகளே. விஞ்ஞானமும், மெய்ஞானமும் அறிவில் இருந்து விளைந்த ரத்தினங்களேயாகும்.

ரத்தினம் என்ற சொல்லுக்கு கடவுளின் வாழ்த்து அல்லது கடவுளின் பரிசு என்று பொருள். இதனால் தான் ஞான ரத்தினம் என்று கூறப்படுகிறது. இதை சற்குரு போதம்

'ஞான ரத்தினம் இது
நல்ல ரத்தினம்'

என்று கூறுகிறது. பொதுவாக போதம் என்றால் ஞானம், நாதவிந்து, போதித்தல் என்று பல அர்த்தங்கள் உள்ளது.



இரண்டு பரிட்சைக்கு தயாராகும் மாணவன் தனக்கு கடினமாகத் தெரியும் பாடத்திற்கு அதிக நேரம் செலவு செய்து படிப்பான். விருப்பமான பாடத்திற்கு நேரம் குறைவாகச் செலவிடுவான். இதைப்போன்று மனிதர்களுக்கு ஞானம் கடினமாகத் தெரிவதால் அதிக நேரம் செலவு செய்ய வேண்டும். நடைமுறை வாழ்விலும் ஞானத்தைக் கலந்து கொள்வது நல்லது.

பலாமரத்திற்கு உரம் வைத்து அடிக்கடி தண்ணீர் 5 குடத்துக்குப் பதில் 10 குடம் ஊற்றினாலும் அது காய்க்கும் சீசனில்தான் காய்க்கும் என்பது சாதாரண மனிதனின் சிந்தனையாகும்.

ஆனால் லட்சியவாதியின் கொள்கை, படிப்படியாக கொடுக்கும் ஊட்டச்சத்தும், நீர் வளமும் தான் சீசனில் நல்ல வளமான, அதிகமான விளைச்சல் தரும் என்பதாகும்.

ஒரு சராசரி மாணவன் பரீட்சை நேரத்தில் படித்து பாஸ் பண்ண முயற்சிப்பான். ஆனால் லட்சியவாதி மாணவன் ஆரம்பத்திலிருந்தே திட்டமிட்டு எதை எப்பொழுது முடிக்க வேண்டுமோ அதை முறைப்படுத்தி உயர்ந்த மதிப்பெண்களைப் பெறுவான்.

லட்சியவாதியின் ஆயுதம் தொடர்ச்சியான செயலாகும். ஞானத்திற்கு இந்தத் தொடர் நினைப்பே உறுதுணையாகிறது. இதனால் லட்சியவாதியே ஞானவானாகிறார்.

உறவும் துறவும், தாமரையும் தண்ணீரும்போல் இருக்க வேண்டும். தண்ணீருக்குள்தான் தாமரை வாழ்கிறது. ஆனால் அந்த உறவில் துறவு கொண்டு தண்ணீரில் ஒட்டாமல் இருக்கிறதல்லவா! இதைப் போன்றுதான் வாழ்வியலுமாகும். 'லட்சியவாதிகள் என்றும் உறவில் துறவுடன் இருப்பர்.'

பொதுவாக ஞானிகள், தன்னை அறிவாளிகள் அடையாளம் கண்டுபிடித்துப் பயன் பெற வேண்டும் என்பதற்காக வித்தியாசமாகக் காட்சியளிப்பர். அத்துடன் அவர்கள் செயலும் மாறுபட்டுத்தானிருக்கும்.

பல வருடங்களுக்கு முன், பல வீடுகள் இருக்கும் காலனியில் புதிதாக ஒரு ஞானி குடிபுகுந்தார். வீட்டிற்குப் போனவுடன் கதவைத் தாழிட்டுக் கொள்வார். வெளியில் செல்லும்போது கதவைத் திறந்து போட்டு விட்டுச் சென்று விடுவார்.

இது அங்குள்ளவர்களுக்கு புதுமையாக இருந்தது. ஒரு மாத காலத்தில் அவர் யாரிடமும் பழகவும் இல்லை. ஒரு நாள் அங்குள்ள பலர் சேர்ந்துவந்து அவரிடம், 'ஐயா உங்கள் போக்கு பொதுமக்களின் செயலுக்கு மாறுபட்டதாக இருக்கிறதே' என்று கேட்டனர்.

அதற்கு அவர், 'என்னைப் பொருத்தவரை என்னைக் காட்டிலும் எனக்குள் இருக்கும் இறைவனைக் காட்டிலும் உயர்ந்த பொருள் ஒன்றும் இங்கு இல்லை. இதனால்தான் பாதுகாப்பாக பூட்டிக் கொண்டிருக்கிறேன். போகும்போது திறந்து போட்டுவிட்டுச் செல்கிறேன்' என்றார். பிறகு அவரைப் பின்பற்றி உயர்ந்தவர்கள் அந்தக் காலனியில் பலர்.

**1) தொண்டு என்றால் என்ன?**

இறை அன்பர்களுக்குச் செய்யும் தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகும். தான் பெற்ற பேரின்பத்தை மற்றவர்களும் பெறவேண்டும் என்பதே தொண்டின் சிறப்பாகும். இதனால்தான் ஞானிகள் தான்பெற்ற ஞானத்தை நன்மக்கள் பெற உழைக்கின்றனர்.

பொதுவாக இறைவனை உணர, அடைய முயற்சிக்கும் மக்களுக்கு உதவி செய்வது, அதற்கான வேலைகளைச் செய்வது, அத்துடன் இறைவனைப் பற்றிய பயிற்சிகளைப் போதிப்பது, பக்தி சம்மந்தமான கருத்தான புத்தகம் வெளியிடுவது, அன்பர்களுக்கு உணவு அளிப்பது யாவும் சிறந்த தொண்டாகும்.

**2) தொண்டு செய்தால் என்ன கிடைக்கும்?**

உண்மையான தொண்டருக்கு புண்ணியம் கிடைக்கும். அதையே பெருமைக்காகச் செய்தவருக்கு அதுவே பாவமாக



மாறிவிடும். பசிக்கு உணவு முக்கியம்தான். ஆனால் அது கெட்டுப் போய்விட்டால் அதுவே விசமாகிவிடுகிறதல்லவா! 'போலியான தொண்டு தற்கொலைக்குச் சமம்'.

**3) புண்ணியம் என்றால் என்ன?**

புண்ணியம் என்பது ஐந்து ஆண்டுகளுக்கு முன் போட்டு வைத்திருந்த டெபாசிட் பணம் தற்பொழுது முதிர்ச்சியடைந்து கைக்கு வந்தமாதிரியாகும். இதுபோன்று போன பிறவியில் செய்த நல்லவைகள் இந்தப் பிறவிக்கு உதவும்.

'மலையளவு தங்கம் இருந்தாலும் அதை மண்டியிட்டுக் கொண்டு சாப்பிடக்கூடாது'. 'செக்கைப் போல் தங்கம் இருந்தாலும் அதைச் செதுக்கிச் செதுக்கி எவ்வளவு நாட்கள் சாப்பிடுவது' என்ற பழமொழிபோல் போன பிறவிப் புண்ணியம் இருக்கிறது என்று இந்தப் பிறவியில் உழைக்காமல், இறைவனை அடிக்கடி நினைக்காமல் இருக்கக் கூடாது.

நமது உண்மையான தொண்டால் இறைவனை அடைய இறைவனிடம் கிடைக்கும் நுழைவுச் சீட்டுத்தான் புண்ணியம். இந்தப் புண்ணியம் இருந்தால்தான் நமது மனம் இறைவனை நினைக்கும்போது தடை ஏற்படாது. இல்லாவிட்டால் சிறிது நேரம்கூட இறைவனை நினைக்க முடியாது.

**4) தொண்டு செய்பவர்கள் எப்படி இருக்க வேண்டும்?**

குரு சொன்னால் அதை இறைவன் சொன்னதாக நினைத்து இறைவனுக்காகச் செய்தோம் என்றிருக்க வேண்டும். சில நேரங்களில் நான்தான் செய்தேன் என்ற எண்ணம் தோன்றப் பார்க்கும். அதை அடித்து நொறுக்க வேண்டும். அடிக்கடி நம்மைக் கண்காணிக்க வேண்டும். அனுதினமும் இறைநினைப்பு, மந்திரம் தனக்குள்ளே சொல்லுதல், பயிற்சி செய்தல் என்றிருக்க வேண்டும்.

குறிப்பு : லட்சியமில்லாத வாழ்க்கையும், தொண்டு செய்யாத மனமும் நமக்கு தேவையில்லை. தொண்டு செய்ய நமக்கு வாய்ப்பு இல்லையே என்று ஏங்க வேண்டாம். இறைவனை

நினைப்பதும், அவரை மறவாதிருக்க மற்றவர்களுக்குச் சொல்லும் அறிவுரையும் பெரிய தொண்டாகும். இதையாவது நாம் புரிந்து, உண்மையை உணர்ந்து செய்யலாமில்லையா!

''உத்தமச் செயல்களைச் செய்ய நினைத்தால்
உடனடியாக செய்வதுவே சிறந்தது'' – ஸ்ரீ அரவிந்தர்

''ஆயிரம் நூல்களைக் கற்பதைவிட அறிஞர்கள்
கூறும் பழமொழிகளே அதிக அறிவைத் தரும்''– லவேட்டர்

அன்றாடம் காலை மதியம் இரவு நேரங்களில் இறைவனிடம் நாம் செய்த பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும்.

வாசனை இல்லாத மலர்போன்று உலக வாசனையைத் துறக்க வேண்டும். வாசனை உள்ள மலர்போன்று இறைவாசனையை இடைவிடாது உணர வேண்டும்.

ஒவ்வொரு உள்ளமும் ஆலயம்தான். ஆனால் மனம் என்ற பெரும் பூட்டால் உங்கள் கோயில் பூட்டப்பட்டிருக்கிறது. இதைத் திறக்க ஞானகுரு, சற்குருமார்களிடம்தான் சாவி இருக்கிறது.

ஒருவன் குரு சேவை பண்ணினால் அவனுடைய குலமே சுத்தமாகும். குருவைத் திருப்தி செய்வதினால் பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்கள் எல்லோரும் மகிழ்ச்சி அடைவார்கள்.

சிவம் கோபித்த காலத்தில் குரு ரக்ஷிப்பவர் ஆகின்றார். குரு கோபித்த காலத்தில் ரக்ஷிப்பவர் யாருமில்லை.

– சற்குரு போதம்



# இறைத்தொடர்பும் தியான பயிற்சியும்

''ஒவ்வொருவரும் அவரவர் வீட்டில் இருக்கிறோம்.
ஆனால் இறைவன் எல்லா வீடுகளிலும் இருக்கிறார்.''

இறைவனை அடைய எதை வேண்டுமானாலும் இழக்கலாம். ஆனால் இறை சிந்தனையை, அவரது தொடர்பை நாம் இழந்துவிடக்கூடாது இறைவனது தொடர்பு துண்டிக்கப்படாது இருக்கவேண்டுமானால் தியானப் பயிற்சி மிகமிக அவசியம். இதற்காகத்தான், கோவில் கட்டுவிக்கப்பட்டது. தியானம் என்ற உங்கள் கடமையை எதன் பொருட்டும் தவறவிடாதீர்கள்.

தியானம் என்பது மனதின் உள்ளே, தனக்குப் பிடித்தமான கோயிலை அமைத்து அதன் மூலஸ் தானத்திலுள்ள இறைவனை அடிக்கடி பூஜிப்பது. இந்தப் பயிற்சிக்கு முதலில் ஒரே கோயிலைத் தேர்ந்தெடுத்துச் செய்தல் வேண்டும். உதாரணமாக ஒரு சினிமாவில் உங்களுக்குப் பிடித்த ஒரு காட்சி நினைத்தவுடன் மனக்கண் முன் எப்படி நிற்கிறதோ அதைப்போன்று நீங்கள் நினைத்தவுடன் கோயில் மனதில் நிற்க பயிற்சி எடுக்க வேண்டும்.

இறைவனை நோக்கிச் செல்லும் பாதைகள் :–

**கர்மயோகம்** : மனக்கோயிலில் இறைவனைப் பற்றிக் கொண்டு நல்ல செயல்கள், கடமைகள் இவற்றின் வாயிலாக ஒருவர் தன்னிடம் உள்ள தெய்வத்தன்மையை உணர்தல்.

**பக்தியோகம்** : சிலை வடிவில் உள்ள இறைவன்மேல் ஒருவர் பக்தியையும் அன்பையும் மனதால் செலுத்தி இடைவிடாது போராடி தெய்வத்தன்மையை உணர்தல்.

**ராஜயோகம்** : ஐம்புலன்கள் வழியாக வரும் இன்பங்களில் மனம் செல்லாது பாதுகாத்து இறைவனை நோக்கிப் பயணித்தல். இப்படி மனதை அடக்கப் பெறுவது ராஜயோகம்.

ஞானயோகம் : அறிவே சற்குரு, சற்குருவே கடவுள் என்ற கோட்பாட்டை அறிந்து உணர்ந்து தனது தெய்வீகத் தன்மையை அறிவில் உணர்தல் முக்தி நிலை.

'அறியாமை என்னும் விதையில் பிறந்து, தீவினைகள் என்னும் துன்பம் தரும் மரங்கள் முளைத்து, ஆசையாகிய வேர் நிலத்தில் இறங்கி நன்றாகப் பற்றிக் கொள்ள, காதல், இன்பம், மகிழ்ச்சி என்னும் கிளைகள் பரந்து, வருத்தம் என்னும் மலர் பூத்து, பெருந்துன்பம் என்னும் காய்காய்க்க, சாவு என்கிற முடிவையே அது தரும் பழமாகக் கொண்டு இவ்வுடல் மறையும்' என்று சீவக சிந்தாமணி கூறுகிறது.

இதைப் படித்தவுடன் நாம் ரொம்ப சிந்திக்க வேண்டியிருக்கிறது. நமது பிறப்பு புனிதமானதாக இருந்தாலும் நாம் வளர்ந்த சூழ்நிலை, சேர்க்கை நம்மை அறியாமை என்ற சதுப்பு நிலச் சேற்றில் தள்ளிவிட்டுவிடும்.

இதில் மூழ்கிவிடாது மீண்டுவர நமக்கு இறைவன் குரு, சற்குரு வடிவில் வந்து கைகொடுக்காவிட்டால் உலக மாயையில் மூழ்கிவிடுவோம். பொதுவாக துன்பத்தில்தான் இறை நினைப்பு வரும். ஆனால் சிலர் தனக்கு வந்த துன்பத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்களே தவிர இறைவனைத் தொடர்ந்து நினைக்கமாட்டார்கள்.

தற்பொழுது மனிதன் தொலைத்தொடர்பு கொள்ள அவரவர் வசதிக்கு ஏற்றவாறு செல்போன், இண்டர்நெட், டெலிபோன், பேகஸ் என்றெல்லாம் வைத்திருக்கும்போது நம்மைப் படைத்த இறைவனிடம் தொடர்பு கொள்ள வேண்டாமா?

கண்டிப்பாக வேண்டும்.

அது எப்படி?

பக்தியில் மந்திரம் சொல்லுதல், மனக்கோவில்கட்டி அங்கிருந்து தியானம் செய்தல், விடாது தவம் செய்தல் போன்ற பயிற்சியால் இறைவனின் தொடர்பு நமக்கு கண்டிப்பாகக் கிடைக்கும்.



**பக்தியும் மந்திரமும் :** ஒருவரை நமக்குப் பிடித்துவிட்டாலோ, அன்பு வைத்துவிட்டாலோ தொடர்ந்து அவர் நினைப்பாகவே இருக்கும். அவருடைய அழகு, பேச்சாற்றல், திறமை இவைகளைப் பற்றி அடுத்தவர்களிடம் பேசி மகிழ்வோம். இதைப்போன்று இறைவன்மேல் பக்தி செலுத்தும்போது அவரைப்பற்றி பேசி, பாடி மகிழ்வதும் பக்திதான். நமக்கு இறைத்தொடர்பு ஏற்படுவதற்கும், பயிற்சி செய்வதற்காகவும்தான் கோயில் கட்டப்பட்டுள்ளது.

இறைவனுடைய பூரண அருள் கிடைக்க வேண்டு மானால் அவருக்காக 'ஓம் நமச்சிவாய வாழ்க! வாழ்க!' என்ற மந்திரத்தை கோயிலுக்குச் சென்றாலும், பாத்ரூமில் குளித்தாலும், உணவு உட்கொண்டாலும் சொல்லப் பழகவேண்டும். ஆரம்பத்தில் வெளியில் புலம்பிச் சொல்லிப் பழகினால் நாளடைவில் உள் மனதில் மந்திரம் சொல்ல வந்துவிடும்.

**தியானம் :** முதலில் உங்கள் உள்ளத்தில் மனக்கோவில் கட்டி அங்கு இறைவனை வைத்து அவ்வப்போது பூஜிப்பதாகும். அதிகாலை எழுந்தவுடன் பாதபூசை செய்வது முக்கியமாகும். நீங்கள் குளிக்கும்போது இறைவனையும் குளிக்க வைப்பது, உணவு ஊட்டுவது இப்படி பல வழியில் இடைவிடாது இறைத்தொடர்புடன் இருக்க வேண்டும். தான் தவறு செய்துவிட்டோம் என்று உணர்ந்தவுடன் உங்கள் உள்ளத்தில் கட்டியிருக்கும் மனக்கோயிலில் இறைவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

தியானம் காலையில் துவங்கும் முன் சில யோக ஆசனங்கள் செய்து உடலை சுறுசுறுப்பாக்கி விட வேண்டும். இதனால் உடலும், மனமும் ஆரோக்கியமடைந்து தியான முன்னேற்றம் கூடும். சோதனைகள் வந்தாலும் பொறுமையாக இருந்தால் அது சாதனைகளாக மாறிவிடும்.

**தவம் :** மூச்சு நம்மிடம் ஓடுவது போன்று இடைவிடாது தனது மனக்கோயிலுக்குள் தியானப் பயிற்சி செய்து வர வேண்டும். இதன் ரகசியங்களை ஞானகுருமார்களிடம

அறிந்தே முன்னேற வேண்டும். இதற்கு உணர்வுதான் முக்கியம். உணர்வே பிரம்மம். எல்லா சூழ்நிலையிலும் இறைவனைப் பற்றி நினைப்பவர்களை இறைவன் ஒரு போதும் கைவிடமாட்டார்.

**குறிப்பு :** இறைவன் மேல் அன்பு வைத்தால் நம்மிடம் உள்ள எட்டு வகையான துன்பம் நீங்கும். அதே அன்பை பிறபொருள்களில் வைத்தால் எட்டுவகையான துன்பம் மேலும் மேலும் பெருகும். மாறாத அன்பை இறைவன்மேல் செலுத்துபவர்களுக்கு சற்குரு வடிவாக இறைவன் காட்சியளிப்பார், துன்பம் நெருங்காது.

வேஷ்டியில் ரத்தக் கறைபட்டுவிட்டால் அதனை ரத்தத்தைக் கொண்டு போக்க முடியாது. இதுபோல பிறவிக்குக் காரணமாகிய உலகப்பற்றாலேயே பிறவியை அறுக்க முடியாது. இதனால்தான் 'பற்றற்றானைப் பற்றுக', பரமகுருவை அதாவது இறைவனைப் பற்றுக என்று கூறியுள்ளனர்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையை வடித்த சீத்தலைச் சாத்தனார், உதயகுமாரனுக்கு, சுகமதி வாயிலாக அறிவுரை கூறுவதுபோல், நமக்கு எச்சரிக்கை விடுகிறார்.

மனிதனுக்கு பண்டை வினைப் பயனாய் இந்த உடல் வந்தது. இவ்வுடல் இனிவரும் நல்வினை தீவினைகளுக்கு விளைநிலமாக அமைவது; புனையப்படும் மணப் பொருள்களை நீக்கிவிட்டால் புறத்தே வீசியெறியத்தக்க முட நாற்றம் உடையது; இளமை மாறி முதுமை எய்திச் செத்து அழியும் இயல்புடையது.

அத்துடன் கொடிய நோய்களுக்கு இருப்பிடமாக உள்ளது; பற்றுக்கள் பற்றும் இடமாகத் திகழ்வது; பாம்பு தங்கும் புற்றுப்போலச் சினம் தங்கும் இடமாக இருப்பது; வருத்தம் கவலை, செயலற்ற தன்மை, வாய்விட்டு அழக்கூடிய பெருந்துன்பம் ஆகிய நான்கும் நீங்காத உள்ளத்தைத் தன்பால் கொண்டு விளங்குவது. மக்கள் உடம்பு இத்தகையது என உணர்ந்து தெளிவுபெற நமக்கு உணர்த்தப்படுகிறது.



'வினை வருதலும், வீடு பேறும்
அவரவரால் அமைவதே, பிறரால் வருபவை அல்ல'

எவர் ஒருவர் லட்சியத்தோடு இறைத் தொடர்பையும், அதற்கான பயிற்சியையும் மேற்கொள்கின்றாரோ அவரே இறைவனை உணரவும், காணவும் முடியும். குரு வழிகாட்டியாகவும், தக்க சமயத்தில் உதவுபவராகவும், வாழ்த்துபவராகவும், உங்களுக்காக பகவானிடம் இறைஞ்சுபவராகவும் இருப்பார்.

ஆனால் உழைப்பவர், குருவின் உதவியால் உயர்த்தப்படுவார்.

நமது உடலில் நமது உயிர் தங்கியிருப்பதால் தான் விரதம் மகாவிரதங்களை மேற்க்கொண்டு தர்மகாரியங்களைச் செய்து புண்ணியத்தைச் சேர்த்து தியானம், நற்செயல்களில் ஈடுபட்டு மும்மூர்த்திகளை தரிசித்து, முக்திக்கான பாதையில் முன்னேறி வீடுபேறு அடைய முடிகிறது.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது நமது உடலை அழியாது பாதுகாத்தல்லவா மேற்சொன்ன வீடுபேறு பெற வேண்டும். நமது உடல் பாதுகாக்கத்தக்கது மட்டுமல்ல, பயன்படுத்தப்பட வேண்டியது. உடல் வளர்த்ததே, உயிர் இருக்க, உயிர் இருப்பதே, ஆன்மா முக்திபெற என்பதை நமது முன்னோர்கள் கூறியிருப்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். நாம் உணர்ந்தால்தான் நம்மில் இருக்கும் கடவுளைக் காண முடியும்.

பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், உடல், மனம், வாக்கு ஆகியவற்றால் செய்யும் தவத்தை கீழே உள்ளவாறு விளக்குகிறார்.

1. புனித நீராடி உடல் சுத்தம் பெற்று, பிரம்மசரிய விரதத்தைக் கடைப்பிடித்து ஞானகுரு, சற்குரு ஆகியோரை பூஜித்து வரும் தவம் சரீரத்தால் செய்யப்படுவதாகும்.

2. பொதுவாக தனது வாழ்க்கையில் உண்மையையும், நல்லதையும் பேசி யாரையும் புண்படுத்தாது கனிவாக உரையாடுதல், வேதம் ஓதுதல் போன்றவற்றினால் செய்யும் தவம் வாக்கினால் செய்யப்படுவதாகும்.

3. சாதுத்தன்மை, சாந்தமாக இருக்கும் இயல்பு, மனக்கட்டுப்பாடு, உள்ளத்தெளிவு, தனது ஆன்மாவையன்றி வேறு சிந்தனையற்றிருத்தல் ஆகிய இந்த அடிப்படையில் பின்பற்றப்படுவது தனது மனத்தினால் செய்யப்படும் தவமாகும்.

இதனால் நாம் எச்சரிக்கையாக நேரத்தை வீணக்காது நமது மனத்திற்குப் பயிற்சி கொடுத்து வர வேண்டும். முடியாது என்று ஒன்றும் இல்லை. முயன்றால் உங்களால் முடியும்.

பொதுவாக குரு என்பவர் உங்கள் சந்தேகங்களைப் போக்குபவராகவும், உங்கள் உள் ஒளியைக் காட்டி நெற்றிக் கண்ணைத் திறப்பவராகவும் இருக்க வேண்டும். குருவைத் தேர்ந்தெடுக்கும் முன் சந்தேகம் வரலாம். ஆனால் தேர்ந்தெடுத்த பின் குழப்பம் அடையக் கூடாது. சந்தேகம் விபரீதத்தில் விட்டுவிடும்.

உண்மையான குரு எதிர்பார்ப்பு உள்ளவராக இருக்கமாட்டார். நீங்களாகவே உதவி செய்வது, தொண்டு செய்வது உங்கள் விருப்பம். பொதுவாக குருவின் வாழ்த்தும் ஆசியும் தேவை. குரு என்பவர் இறைவனிடம் உங்கள் ஞானமுன்னேற்றத்திற்காக வேண்டுபவர். குரு இல்லறத்திலிருப்பவராகவோ, துறவை மேற்க்கொண்டவராகவோ இருக்கலாம்.

ஒரு குருவிடம் இருந்து மற்றொரு குருவை நாடிச் செல்வதாக இருந்தால் அது உங்கள் விருப்பம். ஆனால் குறைகூறிச் செல்லக்கூடாது. ''இறைவன் கோபிக்கும் காலத்தில் குரு ரட்சிப்பார். ஆனால் குரு கோபிக்கும் காலத்து யார் ரட்சிப்பார்'' என்று சற்குரு போதம் சொல்கிறது. அத்துடன் குருதான் உங்களுக்கு சற்குருவைக் காட்டிக் கொடுப்பவர். மறைந்திருக்கும் ஞான ரகசியங்களைக் கூறுபவர். பயிற்சிகளை அளிப்பவர். உணர்வுப் பாதையில் கூட்டிச் செல்பவர்.

பில்லி சூன்யம் பேசுபவர்களும், பேய், பிசாசு என்று கூறுபவர்களும் ஞானம் பெற முடியாது. இறைவனைப் பிடிக்க முயற்சிக்கும் நாம் எதற்கும் அஞ்சக்கூடாது. வழிகாட்டி, குரு



சரியாக கிடைக்காவிட்டால் சுயமாக இறைவனிடம் சரணடைந்து தியானித்து வந்தால் நல்ல குருநாதர் குருவாய் வருவார்.

பிறகு ஞானம் மலரும்!

ஞானப் பயிற்சி முறையாகச் செய்து உயர்வு பெறும்போது தனக்குள்ளே பல மாற்றங்கள் உருவாகும். காதில் வண்டுசத்தம் வரும்.

*எண் திசைக்கும் புகழ் இன்னம்பர் மேவிய*
*வண்டு இசைக்கும் சடையீரே*
*வண்டு இசைக்கும் சடையீர் உமை வாழ்த்துவார்.*
*தொண்டு இசைக்கும் தொழிலோரே* – என்று திருஞானசம்பந்தர் பாடுகிறார்.

## பரமாத்மா, ஆத்மா, குணங்கள்

சூரியன் உலகிற்கு ஒளிதரக்கூடியது என்பது நமக்கு நன்கு தெரிந்ததுதான். பல்லாயிரம் தண்ணீர் குடங்களை பகலில் வெளியில் வைத்துப் பார்த்தால் அந்தக் குடங்களில் சூரியனின் பிம்பம் தெரியும் என்பதும் உண்மைதான்.

ஒரு சூரியனின் பிம்பம் ஆயிரக்கணக்கான குடங்களில் தெரிவதுபோன்று இறைவனாகிய பரமாத்வாவின் பிம்பம் பல ஆத்மாவாகி ஜீவன்களில் பிரதிபலிக்கிறது. இதை ஜீவாத்மா என்று அழைக்கிறோம்.

வெளியில் தெரியும் சூரியன்தான் குடத்திலும் தெரிகிறது. அது வெளியிலும் பிரகாசிக்கிறது. எங்கும் நிறைந்திருக்கிறது. குடத்தில் தெரியும் சூரியன் குடத்தில் மட்டும்தான் பிரகாசிக்கிறது. ஆனால் குடத்தை மூடிவிட்டால் பிரகாசிக்குமா? அல்லது அந்த சூரியனை உள்ளே பார்க்க முடியுமா?

சிந்தித்துப் பாருங்கள். நமது மனம் இறைநினைப்பால் ஏழு திரைகள் என்ற மூடியைத் திறந்தால்தானே சூரியன் போன்ற இறைப் பிரகாசம் தெரியும். நமது ஆத்மா வெற்றி பெற, ஒளிர, ஞானப்பிரகாசமாக மாற நமது மனம் அடிக்கடி இறைவனை நினைக்க வேண்டும். இல்லாவிட்டால் அதுவாகவே ஏழு திரைகளால் மூடிக்கொள்ளும்.

இப்படிப்பட்ட பரமாத்மாவாகிய இறைவனை அடைய, சிந்திக்கத்தான் கோயில் கட்டப்பட்டது. இதைப் படம்பிடித்து மனக்கண்ணால் பார்த்து பயிற்சி செய்து உயர்வது ஒவ்வொரு இந்துக்களின் கடமையாகும்.

நமக்குள் இருக்கும் ஆத்மா பரமாத்மாவிடம் தொடர்பு கொண்டு பிரகாசிக்க நம்மை மூடியிருக்கும் மாயை என்ற மூடியை விலக்க மனமானது இறைவனை வேண்டி நினைத்தால் வெற்றி பெறுவது மிகமிக சுலபமாகும்.

**இனிமேல் நமது குணங்களைப் பார்ப்போம்.**

இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று வகை தொழிலைப்போல் மனிதர்களை மூன்றாகப் பிரித்துப் படைத்திருக்கிறார். 1. சத்துவ குணம் 2. ரஜோ குணம் 3. தாமச குணம் என்று.

**சத்துவகுணம்** : இந்தக் குணம் படைத்தவர்கள் ஏகமும் இறைவன் நிறைந்திருக்கிறார் என்ற கொள்கை கொண்டவர்கள். மனிதன், விலங்குகள் யாவிலும் கலந்து நிற்பது ஒரே ஆத்மாதான் என்று நினைப்பவர்கள்.

பொதுவாக இவர்கள் சூடான, காரமான உணவுப் பொருள்களை சாப்பிடமாட்டார்கள். யாருக்கும் தீங்கு செய்ய பயப்படுவார்கள். காரணம் எல்லாவற்றிலும் இறைவன் இருக்கிறார் என்ற எண்ணம் இருக்கும்.

இவர்கள் தேனீ போன்றவர்கள். தேனீ உயர்ந்த தேனை மலரிலிருந்து எடுத்துச் செல்லும். ஆனால் அந்த மலருக்கு எந்தச் சேதமும் விளைவிப்பதில்லை.

**ரஜோ குணம்** : இவர்கள் சுயநலம் அதிகம் உள்ளவர்கள். எதிலும் நமக்கு முதலில் என்ன கிடைக்கும் என்ற சிந்தனை உடையவர்கள். பக்குவமற்ற வாழ்க்கை நடத்துபவர்கள். தடாபுடா என்று இயங்கி பொருளீட்டுவதிலே குறிக்கோளாக இருப்பர்.

மனிதன் மற்றும் எல்லா உயிரினங்களிலும் வெவ்வேறு, அதாவது ஒவ்வொரு ஆத்மா இருப்பதாக எண்ணுபவர்கள் இறைவன் ஒருவனே என்ற எண்ணம் இல்லாதவர்கள்.



இவர்களுக்குப் புளிப்பு காரம் கலந்த காரசாரமான உணவு பிடிக்கும். எதையும் சூடாகக் குடிக்கும் பழக்கம் இருக்கும்.

இவர்களுக்கு ஈயை ஒப்பிட்டுக் கூறுவர். ஈ கெட்ட பொருள்களில் அமரும். திடீரென நல்ல பொருள்களில் உட்காரும்.

**தாமச குணம்** : இவர்களுக்கு எதுவும் முழுமையாகப் புரியாது. ஏதோ தெரிந்த மாதிரி ஏடாகூடமாகப் பேசுவர். ஒரு காரியத்தை எதற்குச் செய்கிறோம். இதனால் நமக்குப் பயனா, அல்லது மற்றவர்களுக்குப் பயனா என்று யோசிக்காது செயல்படுபவர். இவர்களால் தனக்கும், வீட்டுக்கும், நாட்டுக்கும் கேடு. நல்ல அறிவுரைகளைக் காதில் வாங்கிக் கொள்ள மாட்டார்கள்.

இவர்கள் புளித்துப் போனது, பழையது இவற்றை விரும்பிச் சாப்பிடுவர். அதிகம் சாப்பிடும் பழக்கமும் இருக்கும்.

இவர்களுக்கு மல வண்டை உதாரணம் சொல்லுவர். எந்த நல்ல பொருள்களையும் மலவண்டு தொடவே தொடாது. மலத்தை மட்டும்தான் விரும்பி உணவாகக் கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு : நம்மில் மூன்றுவிதமான அறிவுள்ளவர்கள் இருக்கின்றனர் என்ற போதிலும் நாம் தெளிந்து, பகுத்து, ஆராய்ந்து உணர்வதே ஆன்மிக அறிவாகும். இந்த அறிவுதான் இறைவனை உணர உதவும்.

எதைச் செய்வது, எதைச் செய்யக் கூடாது என்று சிந்தித்து உணர்ந்து கெட்டதை விட்டு, நல்லதை செயல்படுத்த முயற்சிப்பவருக்கு சாத்வீக அறிவுடையவர் என்று கூறுவர்.

தருமத்தை தவறாகப் புரிந்து கொள்வதும், அதர்மம் எது என்று அறியாதிருப்பதும், எந்த உண்மையையும் பொறுமையாகக் கேட்டுப் புரிந்து கொள்ள மறுப்பதும், எது நல்லது எது கெட்டது என்று தெரிந்து முடிவெடுக்க இயலாத நிலைக்கு ராஜஸ குண அறிவு நிலை எனப்படும்.

உலக வாழ்வே பெரியது என்று நினைத்து இறைவனை புறக்கணித்து நீதி நியாயத்திற்கும் மதிப்புத் தராது தான் கூறுவதும் சொல்லுவதுமே நியாயம் என்று கூறுவது தாமஸ அறிவாகும்.

நமது மனத் தெளிவால் ஞான சக்தியால் தோன்றுகின்ற சுகம் சாத்வீக சுகம். இந்த சுகம் முதலில் கசப்பாய் இருக்கும். போகப் போக அமுதமாக இனிக்கும்.

ஆரம்பம் இனிமையாகி படிப்படியாக கசப்பாக மாறும் சுகம் ராஜஸ சுகம் எனப்படும். இது நன்மை அளிப்பதுபோல் தோன்றி முடிவில் தீமையாகிவிடும்.

தொடக்கம் முதல் கடைசி வரை ஒரே மயக்கம்தான். இடையில் துக்கம், தொல்லைகள், சோம்பல் நிலையே இவர்களுக்கு சுகமெனத் தெரியும். இதுவே தாமஸ சுகம்.

பொதுவாக இந்த மூன்றுவிதமான நிலைகளும் நமக்குக் கலந்து வர வாய்ப்பு உள்ளது. இதனால் அர்ச்சுனனுக்கு சற்குரு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கிடைத்ததுபோல் உங்களுக்கு குரு, சற்குரு கிடைத்தால் நீங்கள் சாத்வீக சுகத்தை அடைந்து மறுமையில் வீடுபேறு எய்தலாம்.

உங்களுக்குப் பிடித்த கோயிலை உங்கள் உள்ளத்தில் பதிய வைத்து அங்கே இறைவனாகிய சற்குருவை சிம்மாசனத்தில் அமர வைத்து அவர் வலது பக்கம் அமர்ந்து கொண்டு தியானம் செய்ய வேண்டும்.

**வாழ்க்கையில் வெற்றி பெற**
**அனுதினமும் கூற வேண்டிய மந்திரங்கள்**

ஓம் நமசிவாய வாழ்க! வாழ்க!
ஓம் சச்சிதானந்தம் வாழ்க! வாழ்க!
ஓம் சற்குருநாதர் வாழ்க! வாழ்க!



# மனிதன் கிரகங்கள் இறைவன்

ஒவ்வொரு மனிதனும் நான்கு முறை பிறக்கிறான் என்று மகாகவி பாரதியார் கூறியுள்ளார். கருவாகும்போது முதல் பிறப்பு. கருவைவிட்டு வெளியேறும்போது இரண்டாம் பிறப்பு. தன்னை உணர ஆரம்பிக்கும்போது மூன்றாம் பிறப்பு. உணர்தலில் ஞானம் அடைவது நான்காம் பிறப்பு.

முதல் பிறப்பில் குழந்தை எதுவுமே தானாக தேட வேண்டியதில்லை. இரண்டாவது பிறப்பு என்பது வெளியே தேடத் தொடங்குவதன் ஆரம்பம். மூன்றாவது பிறப்பு உள்ளே தேடத் தொடங்குவதன் தொடக்கம். நான்காவது பிறப்பு தேடல் முற்றுப் பெற்றதின் அடையாளம். அதாவது ஞானம்.

பொதுவாக சிந்தனையை உள்முகமாகத் திருப்பிவிடும் போதுதான் உணர்வு உண்டாகும். மனிதன் தனது புலன்களை அடக்குவது ஆறாவது அறிவின் துணைகொண்டுதான். ஆனால் தனது புலன்களைக் கடப்பது ஏழாவது அறிவால். இந்த அறிவுதான் ஞானம். முழுத் தெளிவுபெறும் நிலையே ஏழாவது அறிவின் ஆற்றலாகும். 'கோடியில் ஒருவரே ஞானவான்' என்ற பொன்மொழி இருந்தாலும் நாமும் முயன்றால் இறைவன் அருளால் ஞானம் பெறலாம்.

'அண்டத்திலிருப்பதெல்லாம் நமது பிண்டத்தில்' என்பது முன்னோர்களின் வாக்கு. அண்டசராசரத்தில் அதாவது யுனிவர்சலில் உள்ளது அனைத்தும் நமது உடலிலும், உள்ளத்திலும் இருக்கிறது.

இறைவன் நமக்குள் இருப்பதைப் பார்த்து விட்டால் பிறகு யாவும் நமக்குள் வந்துவிடுகிறதல்லவா!

கிரகங்கள் நம்மில் கலந்திருப்பது உண்மைதான். அது நமது சுவாசக் காற்றின் வழியாகவந்து ஆக்கிரமிக்கிறது. உதாரணமாக சோலார் சிஸ்டம் கால்குலேட்டரை எடுத்துக் கொள்ளுங்கள். அது காற்றில் கலந்துள்ள 'சூரிய சக்தியை'

கிரகித்துக் கொள்கிறது என்பது விஞ்ஞானப்பூர்வமான உண்மையாகும்.

இதைப்போன்று நீங்கள் சுவாசிக்கும் காற்றில் எல்லா கிரகங்களின் சக்தியும் கலந்திருப்பதும் உண்மையாகும். ஆனால் உங்கள் உடலில் உங்களைச் சார்ந்த கிரகம்தான் ஆக்கிரமிக்கிறது.

எப்படி சோலார் சிஸ்டம் கால்குலேட்டர் சூரிய சக்தியைமட்டும் இழுத்துக் கொள்கிறதோ அதைப்போன்று நமது உடலும் அதற்கான கிரகத்தை ஈர்த்துக் கொள்கிறது.

இந்த நிகழ்வு நம்மை அறியாமலே நடந்து வருகிறது. ஆனால் இதையெல்லாம் இயக்கி வரும் இறைவன் நமது உள்ளக் கோயிலில் குடியிருப்பது முற்றிலும் உண்மை. அந்த உள்ளக் கோயிலில் இருப்பதை நாம் உணரத்தான், அதைப் பார்த்த ஞானிகள் வெளியில் கோயிலாக அமைத்துள்ளனர்.

நாம் விடாமுயற்சியால் அடிக்கடி இறைவனை பூஜிக்க உள்ளத்தில் மனதால் கோயில் அமைத்து வழிபட்டு வந்தால் கிரகங்களின் ஆதிக்கம் குறைந்து தெய்வீக இயக்கம் பரிபூரணமாக வந்துவிடும். நமது உள்ளே பகல் போன்று வெளிச்சம் வந்துவிட்டால் பிறகு ஏன் விஞ்ஞான விளக்கு?

உதாரணமாக இரவில், வீதியில் மின் விளக்குகள் எரியாவிட்டால் எல்லோரும் ரிப்போர்ட் செய்து அது எரிய ஏற்பாடு செய்வோம். அதே மின் விளக்கு பட்டப்பகலில் எரிந்தால் ஏன் இப்படி பகலில் லைட் வீணாக எரியுது என்று கூறி அதை நிறுத்த ஏற்பாடு செய்வோமில்லையா!

அதோடு மின் விளக்கு அந்த இடத்தில் மட்டும்தான் வெளிச்சம் கொடுக்கும். ஆனால் சூரியனோ உலகதிற்கே வெளிச்சம் கொடுக்கிறதல்லவா. சூரியனைப் போன்ற இறை சக்தி உள்ளே பிரகாசிக்கும்போது நம்மில் மின்விளக்குப் போன்ற கிரகசக்திக்கு பவர் இல்லை.



இந்த நிலையை அடைய தொடர்ந்த இறை நினைப்பு என்ற உழைப்பு வேண்டும். இடைவிடாது எது செய்தாலும் இறை சிந்தனை தேவை. முயன்றால் இறைவன் நமக்குக் கைகொடுப்பார். இதற்கு வாரம் ஒருமுறை பட்டினி விரதம் எடுத்து தியானிக்க வேண்டும். சதா மனம் இறை சிந்தனையாகவே இருக்க வேண்டும்.

மனித 'உள்ளம்' பெரிய பொக்கிஷம். அதில் உள்ள திரவியங்களை எடுக்க 'மனதின்' உதவி தேவை. மனமிருந்தால் மார்க்கம் உண்டு. மனதை உள்ளத்தில் குடியிருக்கும் இறைவனை நோக்கிச் செலுத்துங்கள். பிறகு கிரகங்களே உங்களுக்கு ஏவல் புரியும்.

ஒரு விஞ்ஞானி ஒரு ராக்கெட்டோ அல்லது ஏதோ ஒன்றைக் கண்டு உருவாக்க பல விதத்தில் உதவிகள் தேவை.

1. விஞ்ஞானப் பொருள்கள் 2. அதற்கான இட வசதி 3. ஆட்கள் உதவி 4. அரசாங்க ஒத்துழைப்பு இன்னும் பல என்று வைத்துக் கொள்வோம்.

ஆனால் நமக்கோ இறைவனை நினைக்க மனமிருந்தால் போதும். இறையன்பராகி விடலாம். பிறகு ஒருநாள் மெய்ஞ்ஞானியாகிவிடுவீர்கள். உங்கள் குடும்பம் 21 தலைமுறை செழித்தோங்கும்.

> பொதுவாக தியானம் என்றால் இறைவனை அடிக்கடி நினைப்பதே.
>
> சரணாகதியும் பேரன்பும் இறைவனைச் சென்றடையப் பயன்படுத்தப்படும் வாகனங்கள்.

# தாயின் கடமையும் இறைபக்தியும்

இறைவன் நமது துன்பங்களை அகற்றி இன்பமளிக்க வல்லவன். நம்மிடையே தோன்றும் குழப்பங்களையும், அறியாமையையும் போக்கி தெளிவுபெற வைப்பவன். பிறவித் துன்பத்திலிருந்து நம்மை கரைசேர்ப்பவன். இப்படிப்பட்ட சக்தியிடம் தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொண்டாலென்ன! இதில் ஏன் உங்களுக்கு தயக்கம்!

சரி! குழந்தை வேண்டும் என்று ஆசைப்படும் நீங்கள் அது சிறந்த, ஆற்றல் மிகுந்த வெற்றியாளராக உலகில் உலாவர என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டுமல்லவா!

அப்படி சிந்திப்பவராக நீங்கள் இருந்தால் மனதில் கோயில்கட்டி அந்தக் கோயிலில் இறைவனை பூஜித்து வரவேண்டும். உண்மையாக இதைச் செய்து வந்தவர்களுக்கு மிகச் சிறந்த குழந்தை பிறக்கும்.

கர்ப்பமாக இருக்கும் காலத்தில் உங்கள் பக்திக்குத் தகுந்தவாறு குழந்தைகள் பிறக்கும். ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்படும் வித்தியாசத்திற்கு உங்கள் எண்ண அலைவரிசையும் ஒரு காரணமாகும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

இதனால்தான் ‘தாயிற் சிறந்த கோயிலும் இல்லை’ என்று கூறப்பட்டுள்ளது. கோயிலாக இருக்கும் நீங்கள் இறைவனை இடைவிடாது நினைக்க வேண்டியது மிகவும் அவசியமில்லையா! நமது மூச்சு ஓடுவதுபோன்று உங்களின் இறைநினைப்பு இடைவிடாது இருக்க வேண்டும். இதனால் குடும்பம் சிறந்தோங்கும். உங்கள் குழந்தைகள் உயர்வு பெறுவர். நீங்கள் இறை அன்பர்களாகவும் நல்ல பண்பாளராகவும் பிறருக்கு உதவி புரிபவராகவும் இருப்பீர்கள். சாம்ராட் சிவாஜி, மகாத்மா காந்தியின் தாய்மார்கள் பக்தி கதைகள் சொல்லி அவர்களை உருவாக்கியிருக்கும் போது நீங்கள் ஏன் உங்கள் குழந்தைகளை உருவாக்க முடியாது. முயலுங்கள், இறைவன் உங்களிடம் இருக்கிறார்.



# வாலிப தந்தையின் இறை வழிபாடு

‘தந்தை சொல்மிக்க மந்திரமில்லை’ என்ற வாசகத்தை படிக்கும் போது ஒரு தந்தையாவதற்கு சரியான இறைபக்தி வேண்டும் என்பது புரிகிறது.

இந்த உலக வாழ்வில் எவ்வளவு கற்றிருந்தாலும் படித்திருந்தாலும் ஆத்ம ஞானக்கல்வியான தெய்வீக ஞானம் உங்களிடம் வளர வேண்டும். இல்லாவிட்டால் பல இன்னல்களைச் சந்தித்து தொழில், உடல் கெட வாய்ப்பிருக்கிறது.

தனக்கு என்று சம்பாதிப்பவர் சிலர். தன்னைச் சார்ந்தவர் முன்னேற்றத்திற்காக அதிக நேரம் உழைப்பவர் ஒரு சிலர். இதைப்போன்று உங்களுக்கும் உங்களை நம்பி இருக்கும் குழந்தைகளின் உயர்ந்த வளர்ச்சிக்கும், நலனுக்கும் தந்தையாகிய நீங்கள்தான் மந்திரம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஏனோ தானோ என்றெல்லாம் எதையும் தப்பும் தவறுமாக கற்றுக் கொடுக்கக் கூடாதல்லவா. இதனால் நீங்கள் தெளிவு பெற வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் போனால் திரும்பாது, காலத்தையும் நேரத்தையும் வீணக்காமல் மனதினை இறைவன்மேல் திருப்ப வேண்டும்.

அடிக்கடி ‘ஓம்நமசிவாய’ என்ற மந்திரத்தை கூறி வர வேண்டும். இந்த மந்திரம் சொல்லும்போதே உங்கள் மனதில் மானசீக கோயிலை எழுப்பி அங்கிருந்து இறைவனை வழிபட வேண்டும். இதற்கு நேரம் காலம் கிடையாது. அடிக்கடி அதாவது தினமும் காலை எழுந்ததிலிருந்து தூங்கும்வரை உள்ளே சொல்லிக் கொண்டே தனது கடமைகளைச் செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு செய்யும்போது உங்கள் சக்தி கூடிக் கொண்டே வரும். உங்கள் ஆர்வம் அதிகமாகும்போது குருவின் தொடர்பும் சற்குருவின் சந்திப்பும் ஆசியும் கிடைத்துவிடும். உங்கள் குடும்பம் தழைத்தோங்கும்.

# இளமையில் தெய்வ வழிபாடு

இளமையில் புதுமை படைக்க விரும்புபவர்களாக இருந்தால், உங்கள் இளமைப் பருவத்திலேயே பக்தி, வழிபாடு, தியானம் இவற்றில் ஆர்வம் வந்துவிடும். உங்களுக்கு முறையாக வழிகாட்ட ஆள் இல்லாத காரணத்தால் உங்களின் ஆற்றல் வெளிப்படுவதில்லை.

இளைஞர்களே, நீங்கள் 19 வயதிற்குள் முறையான பக்தியிலும், தியானத்திலும், உழைப்பிலும் நம்பிக்கையாளராக உங்களைக் கொண்டு வந்துவிட்டால், நீங்கள் ஒழுக்கத்துடன் முன்னேறிவிடுவீர்கள். உயர்வும், சிறப்பும், புகழும் உங்களை வந்தடையும். தான் செல்லும் வழி, சரியா, தப்பா என்று யூகிக்கும் ஆற்றலும் உங்களிடம் வந்து விடும். 'இளமையில் கல்' என்று ஔவையார் சொல்வது 'ஞானத்தை இளமையிலே கற்றுக் கொள்' என்பதாகும்.

தனிமையில் ஒவ்வொரு இளைஞர்களும் நல்லவர்களே. ஆனால் பலர் ஒன்றுகூடும்போதுதான் 'மாயை' யாராவது ஒருவர் வாயிலாக வந்து வேலை செய்ய ஆரம்பிக்கும்.

இதனால் இந்த சந்தர்ப்பங்களில் மனதில் அடிக்கடி பகவானின் மந்திரமான 'ஓம் நமசிவாய வாழ்க! வாழ்க!' என்பதை நீங்கள் திரும்பத் திரும்ப சொல்லி வர வேண்டும்.

தனது மனதில் கோயிலைக் கொண்டு வந்து அங்கு மானசீகமாக இறைவன்முன் இருந்து பூசை செய்து பாருங்கள். எது நல்லது, எது கெட்டது என்று தெரியும். துணிந்து முடிவெடுப்பீர்கள். வெற்றி பெறுவீர்கள். பயிற்சிக் காலத்தில் ஏற்படும் தோல்விகளுக்கு அஞ்சக்கூடாது. மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும். உங்களை பரிசுத்தமாக்கி நல்வழிப்படுத்த இறைவனிடம் உங்கள் மானசீகக் கோயிலில் மன்றாடுங்கள்.

**வாலிபம் தாண்டி வயோதிகம் வரை தெய்வீகஞானம் :**

வாலிபம் முடிந்து வயோதீகத்தை நோக்கி பயணிப்பவர்களுக்கு குடும்பப் பொறுப்பும், குடும்பச் செலவும்,



அவமானமும், துக்கமும், நோயும், தேவையற்ற குழப்பமும் வந்து அச்சுறுத்தப் பார்க்கும். தான் ஒழுங்காக இருந்தாலும் தன்னைச் சார்ந்தவர்களின் பிரச்சனைகள் வந்து மனதை சஞ்சமலடையச் செய்யும்.

புண்ணியம் மிகுந்தவர்களுக்கு மேற்சொன்னவைகள் குறைவாகவோ அல்லது வராமலோ இருக்கலாம். இருந்தாலும் இந்தப் பிறவியில் என்ன புண்ணியம் செய்ய வேண்டும் என்ற கேள்வி இருக்கிறதில்லையா! 'ஞானம் என்பது புண்ணியருக்கே' என்கிறது வேதம்.

இதனால் இறைவன் அருளைப் பெறுவதே புண்ணியம் என்று மறைமுகமாகக் கூறப்பட்டிருக்கிறது. உங்கள் அனுபவம் கூடியிருந்தாலும் இந்த இறைவனை உணரும் மார்க்கத்தில், 24 மணி நேரத்தில் எவ்வளவு தூரம் முன்னேறி வந்திருக்கிறீர்கள் என்ற கணக்கைப் போட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது.

காலை, இரவு மட்டும் பூஜை செய்வது பூசிக்கப்படுபவருக்கு சிறிய பஞ்சு மிட்டாய் கொடுத்த கணக்காகிவிடும். உதாரணமாக உங்கள் வீட்டில் கரண்ட் அடிக்கடி நின்று நின்று வந்தால் எப்படி மனவேதனை அளிக்குமோ அதைப்போன்றது தான் நீங்கள் இறைவனை விட்டு விட்டு நினைப்பதாகும்.

முதலில் உங்கள் அனாவசியமான அட்வைஸ், அரசியல் பேச்சு, அடுத்தவர்களைப் பற்றிய விமர்சனம், பேப்பர் செய்திகளைப் பற்றிய விமர்சனம் எல்லாவற்றையும் தூக்கி தூர வீசிவிட்டு இறைவன் நாமத்தை எந்த வேலை செய்தாலும் சொல்லிக் கொண்டே இருக்கிறோமா, விட்டுவிட்டோமா என்று உங்களைக் கண்காணியுங்கள்.

உங்கள் உள்ளத்தில் மனக்கோயில் எழுப்பி அதில் உங்களுக்குப் பிடித்தவாறு இறைவனை அலங்கரித்து மூலஸ்தானத்தில் வைத்து வழிபட்டுப் பாருங்கள். உங்களிடம் இறை நறுமணம் வீசும். அப்பொழுது ஆணவம் வராது உங்களைக் கண்காணித்து வரவேண்டும்.

உங்களைப் புகழ்ந்து கவுப்பதற்கு சிலர் பேச வருவர். ரொம்ப எச்சரிக்கையாக உள்ளே மந்திரம் சொல்ல வேண்டும். சிலர் இகழ்வாகப் பேசும்போது ரொம்ப வேகமாக உள்ளே மந்திரம் ஓதவேண்டும். இப்படி நீங்கள் தயாராகி வரும்போது இறைவனின் முழு அருள் கிடைக்கும். ஞான குருமார்களின் தொடர்பு ஏற்படும். அவர்கள் குடும்பத்திலிருப்பவர்களாகவும் இருக்கலாம்.

இறைவனைப்பற்றிய புத்தகம் படிப்பதைக் காட்டிலும் இறைவனைப்பற்றிய நாமம் சொல்வதிலும் ஞானகுருவைச் சந்தித்து பணிந்து நல்ல விசயங்களையும் பயிற்சிகளையும் கற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

நான் வயதானவன் என்ற இறுமாப்பு உங்கள் ஞான தெய்வீக முன்னேற்றத்திற்கு தடையாகும். இதை நீங்கள் உடைத்தெறிந்து ஞானம் குழந்தையிடம் இருந்தாலும் கற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

உலகில் காசுவாங்காத மருத்துவர்களான சூரிய ஒளி, சுத்தமான குடிதண்ணீர், சுத்தமான காற்று, சரியான உணவு, உடற்பயிற்சி, சிறிது ஓய்வு, இவைகளோடு இறைவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டு தியானிக்க வேண்டியது நமது கடமையாகும்.

''உடல் வளர்ச்சி உலகியலுக்கு
ஆன்ம வளர்ச்சி ஆண்டவனுக்கு''



# மனிதர்களிடையே பஞ்சபூதங்கள்

நமது உணவைப் பக்குவமாக சமையல் செய்ய நீர், காற்று, நெருப்பு, மண்ணில் விளையும் பொருள்கள் அத்துடன் விண்ணின் பாதுகாப்பும் தேவைப்படுகிறது. இதைப் போன்றுதான் இறைவன் நம்மை பரிபக்குவமாக இந்த பஞ்சபூதங்களின் வாயிலாகப் படைத்திருக்கிறார். இதனால்தான் இவைகளோடு இணைந்து வாழ்கிறோம்.

சுவை, ஒளி, பரிசம், ஓசை, நாற்றம் போன்ற குணங்களும் நம்மில் ஐம்பூதங்களாக செயல்படுகிறது. நீர், நெருப்பு, வாயு, ஆகாயம், நிலம் போன்றவைகள் தான் ஐம்பூதங்களாகும். இவைகளின் கூட்டுச் சேர்க்கையால்தான் உலகப் பொருள்கள் உண்டாகின்றன.

ஒரு குப்பை குழியில் பலவிதமான குப்பைப் புழுக்கள் வந்துவிடுகிறது. சாப்பிடப் பயன்படுத்தும் ரவை, அரிசி சுத்தமாக இருந்தாலும் நாட்கள் கூடிவிட்டால் அதிலும் வண்டுகள், புழு திடீரென தோன்றிவிடுகிறது. இப்படி பாதுகாப்பாக வைத்திருக்கும் அத்தியாவசியப் பொருள்களிலும் நமக்கே தெரியாமல் பஞ்சபூதங்களின் ரசயானச் சேர்க்கையால் கால அளவின் விகிதப்படி மாறி அதற்கேற்ற உயிரினங்கள் தானாகவே தோன்றிவிடுகிறது என்பதை எப்படி சிந்தித்து ரசிக்காமல் இருக்க முடியும்.

வாயு : வாயு முழுமைபெற ½ விகிதம் வாயுவுடன் மற்ற ஒவ்வொன்றும் 1/8 பகுதியாக நீர், நெருப்பு, ஆகாயம், நிலம் கலந்தாக வேண்டும்.

உணவு முறையில் கூட ½ வயிற்றுக்கு சாப்பாடு மீதியை தண்ணீர், வாயுவுக்கு விடு என்று கூறுவார்கள். அந்த வயிற்றில் உணவை உஷ்ணமான நெருப்புத்தான் எரிக்கிறது. இடைவெளியான ஆகாயமும் இருக்கிறது.

ஒரு மிக்சியில் அதாவது பிலன்டரில் (Blender) முழுதும் ஒரு பொருளைப் போட்டு அரைப்பது என்பது சாத்தியப்படாது.

ஆனால் அரை, முக்கால் என்று போட்டு அரைத்துப் பாருங்கள். அங்கே சிறப்பான முறையில் வேலை முடியும்.

இப்படி முறை தெரியாத உணவு விகிதாசாரத்தால்தான் மலச்சிக்கல், வாயுத் தொந்தரவு, உஷ்ண வியாதிகள் உண்டாகி இதன் தொடர்பால் நரம்பு மண்டலப் பாதிப்பு என்று அடுக்கடுக்காக நோய்கள் வருகிறது.

**வாயு :** வாயு நமது உடலில் உள்ள தோல் பகுதியையும், சில உடற்பகுதியையும் தோற்றுவிக்க காரணமாக இருந்துள்ளது. இதனால்தான் வெளியிலும் உள்ளேயும் உள்ள குளிர்ச்சி, வெப்பம், வன்மை, மென்மை, இன்பம், துன்பம் முதலிய தொடு உணர்ச்சியைக் காட்டிக் கொடுக்கிறது.

**நெருப்பு :** நெருப்பு என்பது முழுமை பெற இதன் ½ பகுதியோடு மற்றவைகள் 1/8 பகுதி சேர வேண்டும். நெருப்பால் நமக்கு உலகை பார்க்கும் கண்கள் தோன்றின. உணரும் நெற்றிக் கண் பஞ்ச பூதங்களின் மொத்தக் கூட்டுக் கலவையாகும்.

நமது பாதக்காலும் நெருப்பின் தொடர்புடையதே. நடத்தல், நிற்றல், அமர்தல், எழுந்து செல்லுதல் யாவிற்கும் நெருப்பே காரணமாகிறது.

**நீர்** : நீர் முழுமை அடைய இதன் ½ பகுதியில் மற்ற வாயு, நெருப்பு, நிலம், ஆகாயம் வீசம் பகுதி சேர வேண்டும். அப்பொழுதுதான் நீரின் தன்மை சிறப்படையும்.

நீரின் தன்மையால்தான் நமது 'வாய்' தோன்றி யிருக்கிறது. சுவைகளை நமக்கு இதுவே கொடுக்கிறது. ஆண், பெண் குறிகளுக்கு நீர்தான் காரணமாகி அந்தத் தொழில்களைச் செவ்வனே செய்கின்றது.

**நிலம்** : நிலம் முழுமை பெற இதன் பாதிப்பகுதியுடன் வீசம் பகுதி மற்ற பூதங்கள் இணைய வேண்டும். இதன் குணத்தால்தான் நாம் வாசனைகளை உணரும் மூக்கு உண்டாகியிருக்கிறது.



**ஆகாயம் :** நிலம் முழுமை பெற இதன் பாதிப் பகுதியில் நான்கு பூதங்களாகிய நீர், நிலம், நெருப்பு, காற்று ஒவ்வொன்றும் 1/8 பகுதி சேர வேண்டும்.

இதன் உதவியால் நமக்கு காதுகள் உருவாகியிருக்கிறது. நமக்கு கேட்கும் தொழிலை நடத்துவதும், நமது உடலை சமம் செய்து சீராக நடத்துவதும் இதுவே. நாவினால் பேசுவதையும் இதன் உதவியாலே செய்து வருகிறோம்.

**பஞ்சபூதங்களில் இறைவன்** : வாயுவினால் நாம் நினைப்பதற்கான சக்தியைப் பெறுகிறோம். இதன் வாயிலாகத்தான் நமது மனதின் தொழில் நடந்து வருகிறது. சந்திரகிரகத்தின் தலைமையில் நடந்து நமது வயிற்றில் இருக்கும் நாபியை ஸ்தலமாகக் கொண்டிருக்கிறது.

நெருப்பினால் எந்த ஒரு காரியத்தை எடுத்தாலும் அதை நிச்சயப்படுத்தும். இதிலிருந்து புத்தியின் செயல் நடந்து வருகிறது. பிரம்மதேவனின் ஆளுகைக்குட்பட்டு நமது முகத்தை ஸ்தலமாகக் கொண்டிருக்கிறது.

நிலம், இதனுடைய தன்மையால் நமக்கு அகங்காரம் உண்டாகிறது. இதன் வாயிலாகத்தான் நமக்கு முயற்சி உண்டாகிறது.

நீர், ஆகாயம் இதன் மூலமாகத்தான் மனம், புத்தி, அகங்காரம் ஆகிய மூன்றுக்கும் காரணமாக இருக்கும் சித்தம் உண்டாகும். பொதுவாக இது எல்லா மனிதர்களுக்கும் இருப்பதாகும். இந்த நீரின் குணமாக இருக்கும் சித்தத்தை ஆகாய குணத்தோடு சேர்க்கும்போது சாதாரண மனிதன் இறைவனாகி விடுகிறார். 'சித்தம் தெளிந்தால் முக்தன்'

கொடுப்பினை இருப்பவர்களுக்கு நீரும் ஆகாயமும் சேர்வதுண்டு. குருமார்கள் நமக்கு வழிகாட்டினாலும் இதனைப் பெறலாம்.

**1. மூலாதாரம் :** இது மலவாய்க்கு மேல் 5 அங்கல உயரத்தில் முதுகுத்தண்டில் அடிப்பக்கத்தில் இருக்கிறது. இது மண்ணின் சூட்சமமாகும்.

2. **சுவாதிட்டானம் :** நீரின் சூட்சமப் பகுதிதான் சுவாதிட்டானம் என்று அழைக்கப்படுகிறது. இது நமது ரகசிய உறுப்புகளின் உள்பக்கம் உள்ளது.

3. **நாபி :** தொப்புளுக்கு உட்புறமாக தீயின் சூட்சமமான பகுதி முதுகுத் தண்டை ஒட்டி அமைந்துள்ளது.

4. **அநாதகம் :** நடு மார்பின் பின்னால் அதாவது உட்பகுதியில் வாயுவின் தன்மைகொண்ட அநாதகம் முதுகுத் தண்டில் இருக்கிறது.

5. **விசுத்தி :** இது ஆகாயத்தின் சூட்சமமத்தை உடையது. நமது கழுத்தின் உள்பகுதியில் முதுகுத்தண்டில் உள்ளது.

**சுழிமுனை நாடி :** மேற்கூறியவைகள் யாவும் முதுகுத்தண்டில் இணைந்து இருந்தாலும் ஐந்து ஆதாரத்தையும் இணைத்து நமது மூளை வரை கொண்டுபோய் நிறுத்தும் நாடியே சுழிமுனைநாடி.

இப்படி நமக்கு உள்ளே உள்ள விசயங்களையும், வெளியே உள்ள விசயங்களையும் இணைத்துக் கூறி இறைவனை அடைய வேண்டிய சூட்சமங்கள் உணர்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த விஞ்ஞானம் கலந்த மெய்ஞ்ஞானத்தை உணர்த்த குருவேண்டும். அல்லது சுயம்பாக மாற விதி வேண்டும்.

எது எப்படிப்போனாலும் நம் இறைவனை உணர்ந்து அறிந்து நமக்குள் கொண்டுவர பல ஞானிகள் முயன்றிருக்கின்றனர். அதை நாம் உணர்ந்து பிடித்து வெற்றி பெறவேண்டுமல்லவா. தொடர்ந்து செய்யும் யாவும் ஒருநாள் மகத்தான வெற்றியளிக்கும்.

சூரிய சக்தி மிகுந்தால் தென் துருவம், வடதுருவத்தில் உள்ள பனிக்கட்டி மலைகள் உருகி நீரால் சூழப்பட்டுள்ள நிலம் தண்ணீரில் மூழ்கிவிடும். உலகமே ஒரு பேலன்சில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இறைவனின் செயலை உணர்ந்து நாம் விசாரணை மூலமாக ஞானப்பிரகாசமாக மாற வேண்டும். அழிவு என்பது தனி மனிதருக்கோ, நாட்டிற்கோ,



உலகிற்கோ உண்மைதான் என்றபோதும் இதில் அழியாத இன்பத்தைப் பெறுவதுதான் பேரின்பம் ஆகும்.

உள்ளத்தில் சிவாலயத்தை மானசீகமாக அமைத்து அங்கு அனுதினமும் 'ஓம் நமசிவாய வாழ்க வாழ்க' என்ற மந்திரத்தை உச்சரித்தவண்ணம் நமது கடமைகளைச் செய்துவரப் பழக வேண்டும். பிறகு பாருங்கள் உங்கள் உடம்பு ஆலயமாகும். ஜோதிப் பிரகாசம் தோன்றி உங்களைப் பேரின்பத்தில் வைக்கும். சகல காரியங்களும் கைகூடும். சோதனைகள் எல்லாம் வெற்றிச் சாதனைகளாக மாறிவிடும்.

**அன்பில் ஆனந்தம்**

ஒவ்வோர் உயிரிலும் தெய்வீகத் தன்மை மறைந்திருக்கிறது. வெளியேயும் உள்ளேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப்படுத்தி உள்ளே குடிகொண்டுள்ள இந்தத் தெய்வீகத்தன்மையை மலரும்படி செய்வதுதான் முடிவான இலட்சியமாகும்.

தனி மனிதர்களின் நிலை உயர்த்தப்பட்டால் தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்.

நீ இறைவனிடம் உனது ஆன்மா, மனம், இதயம் முழுவதையும் அர்ப்பணித்து விடு.

எவன் ஒருவன் தன்னிடத்தில் நம்பிக்கையில்லையோ, அவன் மற்றவர்களை நம்ப மாட்டான். அவனே நாத்திகன்.

நீ எதையும், எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவன். எல்லாம் வல்லவன் நீ.

– சுவாமி விவேகானந்தர்

**சற்குரு தியானம்**
**வளம் தரும்**

# மனிதன் - பஞ்சபூதங்களின் ஆலயம்

பஞ்சபூதங்களின் ஆலயம் நமது உடலிலும், உள்ளத்திலும்தான் இருக்கிறது. பொதுவாக இறைவன் வாழும் இடம் கைலாயம் என்பர். ஆனால் ஞான பரிபாசையில் நமது சிரசுதான் கைலாயமாகும். அத்துடன் நமது உள்ளம் இருப்பதும் இங்குதான்.

பஞ்சபூதங்களில் இறைவன் நிறைந்திருந்தாலும், இறைவன் எல்லாவற்றிலும் வியாபித்திருந்தாலும் அவர் உரையுமிடம் கைலாயமாகிய நமது சிரசில்தான். நமது சிரசுதான் எல்லாவற்றிற்கும் பிராதனம் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

ஒரு விமானத்தை உதாரணத்திற்காக எடுத்துக் கொள்வோம். அந்த விமானத்தைச் செய்த மெட்டல் பூமியின் தாதுப்பொருள். அது பூமியைச் சார்ந்தது. அதன் பெட்ரோல் தண்ணீராகவும் பிறகு அது இன்ஜினில் நுழையும்போது வாயுவாகவும், நெருப்பாகவும் ஆகிவிடுகிறது. அத்துடன் விமானம் தரையில் ஓடப் பயன்படுத்தப்படும் டயர்டியூப் காற்றாலானது. பறப்பதோ ஆகாயத்தில். இதில் பஞ்சபூதங்கள் அடங்கியிருப்பதை அறிய முடிகிறது.

இந்த விமானம் செய்ய இயங்க பஞ்சபூதப் பொருள்கள் கலந்திருந்தாலும் அது பறக்கக் காரணமாக இருப்பவர் பைலட் ஆவார்.

இதை விஞ்ஞானிகள் அமைத்தது போன்று நம்மை இறைவன் அன்றே அறிவாகவும், விமானமாகவும், சகல சக்தி நிறைந்தவராகவும் பஞ்சபூதங்களால் படைத்திருக்கிறார்.

பைலட் விமானத்தில் ஏறி வந்து ஓட்டாவிட்டால் எப்படி விமானம் ஓடும். இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமல்லவா. இதனால் எல்லாம் வல்லவராகிய இறைவனை நமது மனமாகிய விமானத்தை ஓட்டச் சொல்லி கெஞ்ச வேண்டும். இதுவே நமது பிறவியின் கடமையாகும்.



# காஞ்சிபுரம் - நிலம்

சுவாமி : ஏகாம்பர நாதர்
அம்பிகை : ஏலவார் குழலி
தீர்த்தம் : சிவகங்கை, கம்பாநதி
தலமரம் : மாமரம்

பஞ்சபூதக் கோவில்களின் வரிசையில் காஞ்சிபுரம் நிலத்திற்காக அமைக்கப்பட்டதாகும். கைலையிலிருந்து அம்மையே தவம் செய்வதற்காக காஞ்சிபுரம் வந்தாள் என்று ஸ்தலவரலாறு கூறுகிறது. நமது மூலாதாரமே மண் தத்துவத்துக்குரியது.

நமது சிரசில் ‘சிவனும்’ நமது மூலதாரத்தில் சக்தியும் இருக்கின்றனர். நமது மூலாதரமாகிய அடிப்பகுதியிலிருந்து தியான, தவ வலிமையால் நமது சக்தியை இந்தப் பிறவியில் சிரசை அடையச் செய்ய வேண்டும். இந்த முயற்சிக்கு இந்த ஸ்தலம் உதவி செய்யும்.

இப்படி நாம் அடைவதற்கு இடைவிடாது இறை சிந்தனை, இறை நினைப்பு, தியானப் பயிற்சி அன்றாட வாழ்வில் இருக்க வேண்டும். ஒரு பொருளையோ, பணத்தையோ ஒவ்றொன்றாகத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரேயடியாக நூறு என்று எப்படி எண்ண முடியும். இதற்கு பொறுமையும், தொடர்ந்த உழைப்பும் தேவை.

முறையாக தியானப் பயிற்சிகள் செய்து வருபவர்களுக்கு நாத ஒலி காதில் கேட்கும். சில்லிவண்டு ஒலி, சங்குநாதம், மணி ஓசை இப்படி பல வகையான சத்தம் கேட்கும். இந்த நேரத்தில் காது என்னவோ ஆகிவிட்டது என்று சிலர் வந்து என்னிடம் கூறியிருக்கின்றனர். இது உங்கள் உழைப்பின் முன்னேற்றம்.

காஞ்சியில் காமாட்சியம்மன் தவம் செய்யும்போது அவள் பூசை செய்த மணல் லிங்கத்தை கம்பாநதி அழிக்க வந்தது என்று இங்கு வரலாறு கூறுவார்கள். அதாவது நாம் தவம் செய்யும்போதும் மனம் அறிவோடு இணையும்போதும் நமக்குள் அமிர்தம் சுரக்கும். வாய், தொண்டை இனிக்கும். இதைத்தான்

மறைமுகமாக ஞான அடிப்படையில் கூறப்பட்டுள்ளது. வெளியில் உள்ள மண் லிங்கம் அழிந்து உள்ளே நிலையான இறைவனை அடையும் நிலையாகும்.

நமது இந்து பழக்க வழக்கப்படி பூசையில் இரண்டு வாழைப்பழம் வைப்பார்கள். இதில் ஒன்று 'பரமகுரு'வுக்கும் மற்றொன்று உபதேசம் செய்த குருவுக்குமாகும்.

ஜீவாத்மாவை பரமாத்வாவில் கலந்து முக்தி நிலை அடைந்தவர்கள் பலருக்கு நல்வழிகாட்டிவிட்டுத் தானும் பிறவிப் பெருங்கடலை நீந்திச் செல்வர். இவர்களுக்கு வாழையடி வாழையாக ஞான சந்ததிகள் இருந்து கொண்டே இருப்பர். இவர்கள் வழி வந்தவர்கள் மக்கள் ஞானம் பெற தொண்டாற்றிக் கொண்டே இருப்பார்கள்.

சிலர் தனது முற்பிறவியில் செய்த தவ வலிமையால் இப்பிறவியில் கடும் முயற்சி செய்யாது ஞானகுருமார்களின் பயிற்சி இல்லாது முக்தியடைந்துவிடுவர். இவர்களுக்கு இளமை வயதிலேயே இறைவன்மேல் அலாதி அன்பும் பக்தியும் இயற்கையாகவே வந்து விடும்.

பொதுவாக வைணவ மதமும், சைவ மதமும் ஞான மார்க்கத்தில் ஒன்றாகத்தான் இருக்கும். காஞ்சிபுரம் மூலாதாரமாகிய மண் தத்துவமாகையால் இங்கு வரதராசப் பெருமாள் கோவில் அத்திகிரி எனப்படுகிறது. பொதுவாக மூலாதாரத்தின் அடையாளச் சின்னம் யானை என்று சாஸ்திரம் கூறும். இதனால் அத்திகிரி எனப்படுகிறது.

விண்ணில் கொண்டுபோய் மண்ணை இணைக்கும் தியானம், தவம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மண்ணையும் விண்ணையும் தனது இரண்டு பாத அடிகளால் அளந்து மூன்றாவது அடிக்குத் தன் தலையை மாவலிச் சக்கரவர்த்தி கொடுத்ததால் மோட்சம் தந்த கதையை நாம் அறிவோம். இதிலிருந்து இறைவன் விண்ணையும், மண்ணையும்விட மனிதனின் தலையில் குடியிருப்பதையே விரும்புகிறார் என்று அறிய முடிகிறது. இதனால் நாம் இடைவிடாது தியானம் செய்ய முயற்சிக்க வேண்டும்.



# திருவானைக்காவல் - நீர்

சுவாமி : ஜம்புகேஸ்வரர், அப்புலிங்கேஸ்வரர்
அம்பிகை : அகிலாண்டேசுவரி
தீர்த்தம் : காவிரி மற்றும் 9 வகைத் தீர்த்தங்கள்
தலமரம் : வெண்ணாவல் மரம்

பஞ்சபூதங்கள் நம்முள் கலந்து இருந்தாலும் அதில் நீரை மட்டும் நாம் தாகத்தால் விரும்பி அருந்துகிறோம். 'நீரின்றியமையாது உலகு'' என்று முன்னோர்கள் நீரின் பெருமையைக் கூறியிருக்கின்றனர். உணவு சமைப்பதிலிருந்து சுத்தம் செய்வதுவரை அன்றாடத்தேவைக்கும், அடிப்படை விஞ்ஞான வளர்ச்சிக்கும் நீரின் பங்கு அதிகம் என்றறிவோம்.

இந்த நீர், நமது ஆன்மா சக்தி பெற உதவுகிறது என்பதை விளக்கிக் காட்டும் வரைபடமாக அமைக்கப்பட்ட கோயில்தான் திருவானைக்காவல். நம்மை உருவாக்கியது தந்தையின் சுக்கிலமும் தாயின் யோனிதமும் நீர்தான் என்பதும், ஞானம் பெற 'நாத விந்து நமோ நமோ' என்ற பாடலையும் நினைத்து பெருமைப்பட வேண்டியிருக்கிறது. நம்மில் இருக்கும் சாகாவரம் தருகின்ற அமிழ்து என்ற உயர்ந்த பொருளும் நீரையே குறிக்கும்.

சக்தியின் இருப்பிடம் நீர்தான். நீரில் ஒளி ஊடுருவும், அத்துடன் ஒலியின் வேகமும் அதிகமாகும். நீரில் ஒளி ஊடுருவும்போது ஆகாயத்தில் வானவில் தோன்றுவதைப் பார்த்திருப்பீர்கள். இதைப்போன்று நமது தலைக்குள் பல வண்ணங்கள் தோன்றும். இதைப் படிப்படியாக தியானப் பயிற்சியில் இருப்பவர்களுக்கு ஞான குருமார்கள் காட்டுவர்.

குரு பார்க்க கோடி புண்ணியம். வித்யா குரு இல்லாவிட்டால் வித்தை தொழில் கல்வி எதுவும் வளராது. ஞான குரு கிடைக்காவிட்டால் இம்மையைக் கடந்து மறுமையை அடைய முடியாது. ஜோதிட அடிப்படையில் குருவுக்கு பொன்னன் என்று பெயர் உண்டு. சுக்கிலமாகிய பொன் தாதுவை இறைவன் குரு வழியாக உயிர்களுக்கு

வழங்கி வருவதாக வரலாறு கூறுகிறது. இங்கு சிவபெருமானைப் பொன் எனும் பெயர் வைத்து சம்புலிங்கம் என்று அழைக்கின்றனர்.

பொதுவாக நமது பிறப்பு உறுப்புக்கள் நீர்தத்துவமுறை கொண்டதாகும். இதனால் ஆணவம் பிறக்க அதிக வாய்ப்பு இருக்கிறது. பிறப்பு உறுப்புக்களின் வாயிலாக நாம் காம இச்சைகளில் மாட்டி துன்புறாமல் இருக்க இங்கு வழிபடுவது நல்லதாகும். இத்தலத்தில் புத்திரபேரும், தீய காமத்தை அழித்தலும் பெறலாம்.

ஆணவத்தின் சின்னம் யானை. அது இத்தலத்தில் நற்கதி அடைந்திருக்கிறது என்றால் நாம் முறையாக வழிபட்டால் ஆணவம் ஒழிந்து நற்கதி அடைவோம் என்ற மறைமுக விளக்கம் உள்ளது.


இங்கு சிலந்தியையும் காட்டப்பட்டுள்ளது. பொதுவாக சிலந்தி தனது வாயின் வாயிலாக வலை பின்னி அதில் வாழ்ந்து வரும். அதில் விழும் பூச்சிகளை உணவாக அருந்தும். ஒன்றும் கிடைக்காவிட்டால் அதையே உணவாக்கி அதிலே வீழ்ந்து சாகும்.

இதைப்போன்ற உலகவியலில் நாம் இறைவனை நினைக்காது வீட்டைக்கட்டி, உணவுக்காக அலைந்து, பணம் ஈட்டி, ஓடி ஆடித்திரிந்து காலன் வரும்போது அங்கே நாம் இறந்து கிடப்போம். ஆனால் உலகை பொய்யெனப் புரிந்தவர் தான் என்ன செய்தாலும் இறைவன் நாமத்தை விடமாட்டார். அவருக்கு நல்ல குரு கிடைப்பார். இம்மையும் மறுமையும் வெற்றி தான்.

நீர் அடிக்கடி அருந்துதல், குளித்தல், அதிகாலை எழுதல், சந்திரனைக் காண ஆசைப்படுதல் யாவும் நீர் குணங்களே. நீர்க் குணம் கூடும்போது கோபம் குறையும். பக்தி கூடும். பொதுவாக நாம் 2 மணி நேரத்திற்கு ஒருமுறை ஒரு டம்ளர் தண்ணீராவது கண்டிப்பாகக் குடிக்க வேண்டும். இதில் சோம்பேறித்தனம் இருக்கக் கூடாது. நேரத்திற்கு ஒரு முறை ஒரு டம்ளர்.



இங்குள்ள சிவலிங்கத்தின் அடியில் இயற்கையாகவே நீர் நிரம்பி வருகிறது. இது மனிதனின் இனப்பெருக்கத்தையும் குருமார்களின் உதவியால் ஞானம் பெற வேண்டும் என்ற தத்துவத்தையும் சூட்சுமமாக விளக்குகிறது. நீர் உணவில் சேரும் தன்மையுள்ளது என்பதால் நீங்கள் எளிதில் இங்கு இறை அருள் பெறலாம்.



தனக்குள்ளே நீங்கள் ஐந்து மதில் அமைத்து உள்ளே சம்புகேசுவரரை மனதால் நிறுத்தி ஓம் நமசிவாய வாழ்க! வாழ்க! என்ற மந்திரம் கூறி வந்தால் காமம் கட்டுக்கடங்கும். குழந்தைகளின் வளர்ச்சி, ஞான விருத்தி ஏற்படும். மனம் சாந்தமாகும். தெளிவும் உயர்வும் கிடைக்கும்.

**அன்பில் ஆனந்தம்**

அன்பின் மூலமாகச் செய்யப்படும் எந்தக் காரியமும் ஆனந்தத்தைக் கொண்டு வந்து சேர்க்கும்.

நீங்கள் கடவுளின் குழந்தைகள், அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும், பூரணத்துவமும் பெற்றவர்கள்.

கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். கடவுள் பற்றில்லாமல் இருக்கிறார். ஏனென்றால் உலகம், உயிர்கள், அண்டசராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார்.

– சுவாமி விவேகானந்தர்

# திருவண்ணாமலை - ஜோதி

சுவாமி : அண்ணாமலையார், அருணாசலேசுவரர்
அம்பிகை : அபீதகுஜாம்பாள், உண்ணாமலையம்மை
தீர்த்தம் : பிரம தீர்த்தம்
தலமரம் : மகிழம்

ஒவ்வொரு ஜீவனும் ஜோதியே. இறைவன் அருளும் ஜோதியே. உலக இயக்கத்திற்கு இரவும் பகலும் ஜோதியருள் வேண்டும். இந்த அருள்தரும் ஜோதி நமது உள்ளம் தெளிந்து இறைவனை அடையவும், உலகம் இயங்கவும் இம்மை, மறுமை இரண்டிற்கும் இரண்டு கண்களாக நிற்கிறது.

பிறப்பையும் நாம் அறிய முடியாது. இறப்பையும் நாம் தெரிந்து கொள்ள முடியாது. நாளை என்பதே நமது நம்பிக்கையில்தான் ஓடுகிறது. இதற்குள் ஏன் நமக்குக் குழப்பம். இறைவன் உண்மை என்பதை நிரூபிக்க நம் முன்னோர்கள், ஞானிகள் எடுத்திருக்கும் முயற்சிதான் பஞ்சபூதக் கோயில்களின் ஞானத் தத்துவங்கள்.

உண்மையைச் சொல்லிப் பார்த்தார்கள். பேசிப் பார்த்தார்கள். பிறகு படம் வரைந்து கோயிலாக நமக்குச் சுட்டி காட்டிவிட்டுச் சென்றுள்ளனர். அதன் அர்த்தத்தை புரிந்து வழிகாட்டியாகிய குருமார்களை வணங்கி வழிபட்டு அறிந்து விளங்கிக் கொண்டால் நீங்கள் ஞானத்தை உணர்ந்து உலக வாழ்வில் சிறந்து இரண்டிலும் வெற்றிக் கொடி நாட்டுவீர்கள்.

மக்கள் ஜோதி என்ற இறை சக்தியை மறந்துவிடாது புரிந்து கொள்ள கார்த்திகை மாதத்தில் நடத்தப்படுகின்ற ‘சொக்கப்பான்’ என்பது சிவன் முப்புரம் எரித்த வரலாறு ஆகும். அதாவது மனிதனிடமுள்ள மும்மலங்களை எரித்தலாகும். தலைபோன்று வட்டமாக குச்சிகளை நட்டு அதில் நெருப்பு வைத்து எரியும் போது அந்தக் குச்சியைப் புடுங்கி வருவர். இந்த குச்சியை வயலில் நட்டால் நல்ல விளைச்சல் வரும் என்பது நம்பிக்கை. அது ஞான விளைச்சலாகவும் இருக்கலாமல்லவா! நமது ஞானிகள் மக்களின் மறுமை முன்னேற்றத்திற்கு விளையாட்டாகவும்,



சூட்சுமமாகவும் நேரடியாகவும் ஞானத்தை விளக்கிக் காட்டி வந்திருக்கின்றனர். ஏதோ ஒரு சிலர்தான் வெற்றி பெறுகின்றனர். இதற்குக் காரணம் இறை பக்தி பெற்றோர்களிடம் கிடையாது. குழந்தைகளுக்குப் போதிப்பதும் கிடையாது.

தலைக்குள்ளே ‘ஆகாயம்’ அதுவே சிதம்பரம் என்று புரிந்து கொண்ட நாம் நமது தலைக்குள்ளே தான் திரு அண்ணாமலையாகிய இறைவனின் ஜோதி இருப்பதை உணர்த்த கார்த்திகையில் மலையின் மேல் தீபம் காட்டப்படுகிறது. இதுவும் சூட்சமமாக அறிவுள்ள மக்கள் புரிந்து கொள்ள காட்டப்பட்டதாகும்.

நமது ரிக் வேதத்தைப் படித்துப் பார்த்தால் அதிகமாக அக்கினியைபற்றிதான் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அக்னிதான் உலகப் பொருள் அனைத்திற்கும் ஆதாரமாகக் கருதப்படுகிறது. சிவமே ஜோதி என்று கூறுவதும் இந்த அடிப்படையில்தான்.

நமது ஜோதி வழிபாடே இதுதான். ‘விளக்கை வெளியில் ஏற்றி என்ன செய்வது. தனக்குள்ளே ஏற்ற இறைவனிடம் இறைஞ்ச வேண்டும்’ இதுதான் திருவண்ணாமலை ஸ்தலத்தின் மூலத்தத்துவம். இதற்கு ஞானகுரு கிடைக்க வேண்டும். அவர் இல்லறத்தி லிருப்பவராகவும் இருக்க வேண்டும்.


ஆணவம் அகங்காரமாகிய இருளில் மூழ்கிக்கிடக்கும் நீங்கள் அவன் திருவடி நினைத்து மனம் உருகி வேண்டினால் உங்கள் உள்ளத்தில் ஜோதிப்பிரகாசமாக இறைவன் நிற்பார் என்பதே இங்குள்ள தத்துவம். பிறகு மனம் தெளிந்து ஞான வெளிச்சத்தில் எப்பொழுதும் மனக்கோயில் கட்டி இறைவனை தரிசிக்க முடியும் – என்ற தத்துவம் இங்கு மறைமுகமாகக் காட்டப்பட்டுள்ளது.

நமது அறிவுப் பகுதிக்கு, நமது முகம்தான் இருப்பிடம். ‘அகத்தின் அழகே முகத்தில் தான் தெரியும்’ என்ற பழமொழியும் உண்மை. இதில் கண் என்பது அக்னியின்

குணமாகும். இதனால் அகந்தை இல்லாது அறிவால் உணரும் ஜோதியினை இறைவன் என்று புரிந்து கொள்ள முடிகிறது. இதனால் இத்தலத்தில் அக்கினியான சிவம் கண் என்று கூறப்படுகிறது. நமது கண்ணிற்குள் உள்ள ரகசியத்தை நல்ல குருவாயிலாக 'நேத்திர தீச்சை'யாக விதியிருப்பவர் பெறுவீர்கள்.

திருவண்ணாமலையில் கிரிவலம் வருவது முக்கியமாகும். கிரி என்பது மலை என்று பொருள்படும். ஆனால் நமது உடலுக்குத் தலை தான் உயரமான மலையாக இருப்பது. ஞான தத்துவமுறைப்படி உங்கள் தலைக்குள் இந்த கோயிலை மானசீகமாக அமைத்து அங்கே திருவண்ணாமலையாரை அடிக்கடி தரிசனம் செய்ய வேண்டும்.

இப்படி செய்து வருவதால் உங்கள் பாவங்கள்
பஸ்பமாகிவிடும். பேரின்பம் கிடைக்கும்.



அண்ணாமலையார்

குறிப்பு : மனக்கோயில்கட்டி அந்தக் கோயிலில் இறைவனை வைத்து நீங்கள் வணங்கி வரவும். பிறகு பெரிய ஒளிப்பந்த ஜோதியை கையில் பிடித்துக் கொண்டு உங்கள் எண்ணத்தால் கிரிவலம் வரவேண்டும். அப்படி வரும்போது அண்ணாமலையார் உருவம் மனக்கண்ணில் உங்கள் தலைக்குள்ளே தெரிய வேண்டும். இவ்வாறு செய்தால் சகலமும் கைகூடும்.

ஊனான உடலுக்குள் முகவட்டத்துள்
ஒளிபோல நிற்குதப்பா அகாரபீடம் (போகர்)
முக்கோணம் அதனுள்ளே வட்ட ஜோதி (கோரக்கர்)



# வாயு - கூடல் (மதுரை)

சுவாமி : சொக்கலிங்க நாதர்
அம்பிகை : அங்கயற்கண்ணி

நமது நாட்டிற்கு எல்லை உண்டு. நமது வீட்டிற்கும் வேலியுண்டு. ஆனால் காற்றுக்கேது வேலி? காற்றுக்கேது எல்லை? காற்று இல்லாத இடமேயில்லை. காற்று மிகுந்த வேகம் உடையது. நமது மனதின் வடிவம் காற்றுத்தான். இதனால் இந்த ஸ்தலத்தில் நமக்குக் கிடைக்கும் பலன் மனோவேகமேயாகும்.

நக்கீரருக்கு நெற்றிக்கண்ணைத் திறந்து காட்டி பெருமை சேர்த்த இடம் மதுரை. பிட்டுக்கு மண் சுமக்கும்போது ஈசன்பட்ட பிரம்பு அடியால் உலக மக்கள் அனைவரையும் உணர்வு பெற வைத்த இடம் மதுரையாகும்.

'உருத்தரித்த நாடியில் ஓடுகின்ற வாயுவை
கருத்தினால் நிறுத்தி கபாலம் ஏற்ற வல்லீரே
விருத்தரும் பாலராவார்'.

என்ற ஞானப்பாடலில் கபாலம் என்றால் தலை என்பதாகும். நம்மில் காற்றுப் போல் ஓடிக் கொண்டிருக்கும் மனதினை கபாலத்தில் உள்ள உள்ளத்தில் நிலை நிறுத்திவிட்டால் முதியவர்கள் கூட ஞானப்பிரகாசத்தால் இளைஞர்களாக முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது.

நமது உடலுக்குப் போகும் காற்று பத்துவிதமானதாகும் என்றாலும் ஐந்து மிக முக்கியமாகும். 'துருத்தி என்பது காற்று ஊதப் பயன்படுத்தும் கருவியாகும். இந்தத் துருத்தியால் ஊதி ஊதி தங்கத்தையும், இரும்பையும்கூட தண்ணீராகக் கரைத்துவிடலாம். இந்த காற்றின் தன்மையான மனதை பகவான்மேல் வைத்து மீண்டும் மீண்டும் முயன்றால் உருகாத அவரும் உருகி நமக்கு அருள்பாலிப்பார்'. முயன்றால் உங்களால் முடியும். அதை இன்றே முயலுங்கள்.

உயிர் ஓட்டத்திற்குத் தேவையான வேலைகளைச் செவ்வனே செய்து வருவது 'பிராணன்' என்ற காற்றாகும். நமது மலசலங்களைக் கழித்துப் போக்குவது 'அபானன்' என்ற வாயுவாகும். நமது வயிற்றில் நடக்கும் ஜீரண வேலைகளைச் சரிவரச் செய்ய உதவுவது 'உதானன்' என்ற வாயுவாகும்.

நமது உடலில் தோல்மீது பரவி நமக்கு பரிச உணர்வு தந்து உலகத்தின் ஒலி ஒளிச் சுழலுக்கு ஏற்றவாறு உடலைக் காத்து உதவுவது 'வியானன்' என்ற காற்றாகும்.

நம் உடலில் உள்ள வாதம், பித்தம், சிலேத்துமம் முதலாகப் பலவிதமான வேறுபட்ட உடல் பொருள்களைச் சமப்படுத்துவது 'சமானன்' என்ற வாயுவாகும்.

பொதுவாக ஒவ்வொரு பஞ்சபூத கோயிலும் நமது உடற்கூறைத்தான் வடிவமைத்துக் கூறுகிறது. இதனால் கையில் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்த கதையாக இல்லாது தனக்குள்ளே இருக்கும் சக்தியை புரிந்து அதை எதோடு இணைத்தால் இருள் விலகி வெளிச்சம் தெரியும் என்று உணர்ந்து வெற்றி பெறத்தான் இந்தப் புத்தகம்.

ஒவ்வொரு ஸ்தல வரலாறும் நீங்கள் படித்திருக்கலாம். அதில் உள்ளடங்கி இருக்கும் ஞான விளக்கம் தெரியாது போனால் கண்ணைக் கட்டிக் கொண்டு கண்ணாடி பார்த்த கதையாகிப் போய்விடும். கண்ணைக் கட்டிக்கொண்டால் எப்படி கண்ணாடியில் தன்னைப் பார்க்க முடியும் என்று கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

விஞ்ஞானிகள் காற்றை டயர், டீப்புக்குள் ஊதி, கார், மோட்டார் சைக்கிள், பிலேன் ஓட்டுகின்றனர். நாம் மெய்ஞான வழியில் 'ஊதுகின்ற ஊத்தையறிந்து' உத்தமனாகிய இறைவனை அடையவே காளகஸ்தி என்ற வாயுக் கோயிலில் இது மறைமுக ஞான விளக்கமாக உள்ளது.



# சிதம்பரம் - ஆகாயம்

சுவாமி : திருமூலட்டானேசுவரர்
அம்பிகை : சிவகாம சுந்தரி
தலமரம் : தில்லை மரம், ஆல்
தீர்த்தம் : சிவகங்கை, பரமானந்த கூபம்

சிதம்பரம் ஆகாயத்தைக் குறிக்கும் ஸ்தலமாகும். தமிழ்நாட்டில் ஐந்து பஞ்சபூதங்களில் இதுவே முக்தி அளிக்கும் இடமாக சூட்சகமாகக் காட்டப்பட்டுள்ளது.

ஆகாயம் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால் ஒவ்வொரு மனிதனுக்குள் இருப்பது சிதா ஆகாயமாகும். இது நமது தலைப்பகுதியில் இருக்கிறது.

நமக்குள் இருக்கும் சிதா ஆகாயத்தின் ரகசியத்தை ஞான குருமார்கள் காட்டுவர். பொதுவாக நல்லதை நம்புவதற்கும் நல்ல மனம் வேண்டும். நல்ல மனம் உள்ள ஸத்துவ குண அன்பர்களே இந்த ரகசியங்களை தனக்குள்ளே அறிந்து மகிழ்வர்.

'உள்ளம் பெரும் கோயில்' என்பதில் நமது தலைப்பகுதியைத்தான் சுட்டிக்காட்டிச் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதனின் தலைதான் அவனது எல்லா இயக்கத்திற்கும் தலைமை நிலையம். நமது உடம்பின் நாடி நரம்புகளின் தலைமை நிர்வாகி மூளைதான். இதுதான் உள்ளம். சிவனுடைய பஞ்சாட்சரம் ஓங்காரமாகையால் இங்கு ஐந்து படிகளாக உள்ளன. ஓங்காரம் உள்ளத்தின் இயக்க ஓசையாகும். மனம் அடங்கும்போது இந்த ஓசை கேட்கும்.

நமது தலைக்குள் தான் ஆகாயம் இருக்கிறது. இதன் ரகசியம் அறிந்தவர்கள் அவ்வளவு எளிதில் யாரிடமும் அவசரப்பட்டுக் கூறமாட்டார்கள். இதற்குப் பரிபக்குவம் வேண்டும். இறைவனை அடைய வேண்டும் என்ற லட்சியவாதிகளுக்கு இறைவன் கண்டிப்பாக அருள் செய்வார்.

நீரில் இருந்து ஆவியாகி ஆகாயத்தில் சென்று மேகமாக இருப்பதுபோல் நம் உடம்பில் உள்ள நீரின் தன்மையில் தோன்றும் சித்தம், சிதா ஆகாயமான நமது ஆனந்த சபையில் சேரும்போது தென்னாடு உடைய சிவனைப் பார்க்கலாம். இவைகளை ஞானப் பயிற்சியில் உள்ளவர்கள் உணர்வர். சிதம்பரம் ஞானத்தின் பூர்த்திக்கான ஸ்தலம். இதை நமக்குள் உணர்ந்து பார்த்து இப்பிறவிப் பயனை அடைய வேண்டும்.

'விந்து கட்டியவன் வீடுபேறு எய்துவான்' என்ற சித்தர்களின் வாசகத்தை சிந்தித்துப் பாருங்கள்.

ஆகாயம் என்பதே நமக்குமேலேதான் உள்ளது. இதைப்போன்று நமக்கு மேல் பகுதியும் தலைதான். நமது தலைக்குள்தான் ஆகாயம் இருக்கிறது என்பதில் சந்தேகப்பட வேண்டியதில்லை.

இதனால் இந்தக்கோயில் ஆகாயத்தை மையமாக வைத்துக் கட்டியிருப்பதால் இங்கு சென்று நாம் உணர்ந்து பார்த்தால் நம்மிடையே இருக்கும் உள்ளம் தட்டி எழுப்பப்படும். ஆனால் ஞான விபரம் தெரியாது சென்றால் குருடர்கள் யானையைத் தடவிப் பார்த்துவிட்டு உலக்கை, சுவர் என்று சொன்ன கதையாகிவிடும்.

நடராஜர் சிவசக்தியின் சேர்க்கை சிலை உருவமாகும். இங்கிருக்கும் நடராஜர் அர்த்த நாரீஸ்வரப் பான்மை உடையவர். வலதுபகுதி சிவம். இடது பகுதி சிவசக்தி. அத்துடன் அந்த சிவகாமி அம்மையார் ஜீவாத்மாவாகும். பரமாத்வாகிய சிவனுடன் சேர்வதற்கு சிவனை காமுற்று இருக்கிறாள். இதனால் சிவகாமி என்று பெயர் வந்திருக்க வேண்டும். ஒவ்வொருவருடைய மனமும் சக்தியாகிய பெண். அறிவு ஆணாகிய சிவன், இரண்டும் சேர்வதே முக்தி.

இங்கு 'ஓம் நமசிவாய வாழ்க! வாழ்க!' என்ற மந்திரம் சொல்லி பகல்பொழுது விரதமிருந்து ஓதுவது மிகச் சிறப்பாகும். உண்மையாக நின்று தியானித்து வருபவர்களுக்கு ஞானமும் செல்வமும் கைகூடும்.



கோயிலின் மதில்சுவர்




சிதம்பரம் கோயிலை தனது எண்ணத்தால் மனக்கண்ணால் தனக்குள்ளே சிதா ஆகாயத்தில் வைத்து மூலஸ்தானத்தில் சிவபெருமான் நிற்பதாக எண்ணி சுற்றி சுற்றி வந்து 'ஓம் நமசிவாய வாழ்க! வாழ்க!' என்று கூறி வந்தால் ஞானம் பெறுவீர்கள். உங்கள் எண்ணம் ஈடேறும்.

> உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும், உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.
>
> தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாததாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும். கீழ்த்தரமான தந்திரங்களால் இந்த உலகில் மகத்தான எதையும் சாதித்துவிட முடியாது. இது என் உறுதியான நம்பிக்கை.
>
> சுயநலம் அற்ற நன்மையின் அளவுதான், வெற்றியின் அளவை எல்லா இடத்திலும் நிர்ணயம் செய்கிறது. மனது அதிகமாக ஒருமுகப்படப்பட அதன் ஆற்றல் அதிகமாக ஓர் இடத்தில் செலுத்தப்படுகிறது. இதுதான் மனதின் ஆற்றலைப் பற்றிய இரகசியமாகும்.
>
> – சுவாமி விவேகானந்தர்

> சற்குரு தியானம்
> மனதை ஒரு நிலைப்படுத்தி
> சகல நன்மைகளையும் செய்யும்.

1. சத்துவ குணம் : இன்பம், பேரின்பம் இவற்றிற்குக் காரணமாக இருப்பவை
2. ரஜோ குணம் : பொருள் ஈட்டுவதிலேயே கவனமாக இருக்கும் இயல்பை இது வளர்க்கிறது.
3. தமோ குணம் : தவறுகளை உருவாக்குவதை பணியாகக் கொண்டிருக்கிறது.

'பொதுவாக நம்மிடம் உள்ள குணங்கள் இந்த அடிப்படையில்தான் செயல்புரிகிறது. இந்தக் குணங்களின் உண்மையான இயல்புத்தன்மை ஒரே நேரத்தில் வெளிப்படும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

திடீரென சத்துவகுணம் மட்டும் ஒரு சக்தியுடன் வந்து நம்மிடம் நின்று ஒளிவீசும். அந்த நேரத்தில் மற்ற இரண்டு குணங்களும் அடங்கி ஒடுங்கி நின்றுவிடும்.

சில சந்தர்ப்பங்களில் ரஜோ குணம் நம்மிடம் செயல்பட்டு மற்ற இரண்டு குணங்களையும் செயலற்றதாக்கிவிடும்.

ஒரு சில நேரத்தில் தமோ குணம் தோன்றி மற்ற இரண்டு குணங்களையும் விரட்டியடித்துவிட்டு இது மனதை ஆக்கிரமித்துவிடும்.

மனிதர்களிடம் நேர்மை, நல்ஒழுக்கம், அறிவு, மெய்ஞானம், உயர்ந்த பண்பு போன்றவைகள் தோன்றி உயர்த்துவதும், அத்துடன் கீழான செயலுக்கு உள்ளாக்குவதும் மேற்கூறப்பட்ட முக்குணங்கள்தான் என்பதை கீதை தெள்ளத் தெளிவாக வரைபடம் போட்டு நமக்குக் காட்டுகிறது.

நம்மிடம் இருக்கும் நல்ல குணமாகிய சத்துவகுணம் நிலைபெற்று பேரின்ப வாழ்வைப் பெற, சிறிது ரஜோகுணத்தால் உலகில் தொழில் செய்து ஜீவிக்க முயல்பவரே மனிதரில் சிறந்தவர். தமோ குணம் ஒழிய சத்துவகுணம் மேலோங்க



வழிபடும் இடமே உள்ளக் கோயில். அதாவது தனக்குள்ளே மானசீகமாக கோயில் கட்டி வழிபடுபவரே இம்மை மறுமை இரண்டிலும் வெற்றி பெறுபவர். வெளியில் உள்ள சிவாலயத்தை உள்ளத்தில் வைத்து வணங்க வேண்டும் என்பதே மரபு முறையாகும்.

பொதுவாக அறிவு வழியில் புலன்கள் பணியாற்றும்போது மனிதனின் சத்துவகுணம் அதிகரித்து நம்மை உயர்நிலைக்குக் கொண்டு செல்கிறது.

மனம் அறிவை விட்டு இறங்கிவிட்டால் ரஜோ குணம் செல்வாக்கு நம்மிடையே கூடி விடுகிறது. பேராசை நம்மை வந்து பிடித்துக் கொள்கிறது. பிறகு பகவானை தனக்குள்ளே தரிசனம் செய்து மந்திரம் சொல்லி இந்த நிலையில் இருந்து மாறுபட்டு நிற்க போராட வேண்டியிருக்கும்.

இந்த நிலையில் இருக்கும்போது நமது தியானம் குறைந்தால் உடனே சோம்பல், சோர்வு, மந்த இயல்பு, மயக்கம் போன்றவைகள் வந்து நம்மை தமோ குணத்தில் தள்ளிவிடும். நல்ல மனம் இருந்தால்தான் ஞானமார்க்கம் கைகூடும்.

சத்துவ குணத்தில் கலந்து இறைத்தொடர்புடன் இருக்கும்போது ஒருவருக்கு மரணம் ஏற்பட்டால் அவர் மகான்கள், பேரறிஞர்கள், ஞானிகள் வாழும் சூழலைச் சார்ந்துவிடுகின்றனர். நல்ல குருமார்கள் அறிவுரையால் நற்கதியை அடைவர்.

ஒருவர் மரணம் அடையும் காலத்தில் ரஜோகுணம் மனதில் கலந்திருந்தால் அவருடைய ஆத்மா தொழில் செய்பவர்களின் குடும்பத்தில் பிறவி எடுக்க நேரிடும்.

அதேநேரத்தில் ஒருவருக்கு தமோ குணம் மிகுதியாக இருக்கும்போது மரணமடைந்தால் அவருடைய ஆத்மா அறிவுத் தொடர்பற்ற முட்டாள்களிடம்தான் பிறப்பு எடுக்கும்.

பொதுவாக அனுதினமும் கடவுள் நாமம் சொல்வது, தனக்குள்ளே மானசீகமாக கோயில்கட்டி அடிக்கடி அதில்

சென்று வழிபடுவது எல்லாம், மேலான நிலைக்குச் செல்ல வழிகாட்டும். நல்ல குருநாதர் கிடைப்பார். பொதுவாக குரு கிடைப்பதற்கு முன் தீவிரமாக மனதில் கோயில் எழுப்பி அங்கு சிவபெருமானை வழிபட வேண்டும் என்பது இந்து மரபு முறையாகும். இப்படி வழிபடுவதால் சிறந்த நன்மை கிடைப்பது உறுதி. அதாவது கோயிலுக்குச் சென்று கோயிலை மனதில் படம்பிடித்து அடிக்கடி அங்கு சென்று வணங்கியதை உள்ளன்போடு நினைத்து நினைத்து வழிபட வேண்டும்.

## திரு மயிலாப்பூர்

சுவாமி : கபாலீசுவரர்

அம்பிகை : கற்பகாம்பாள்

சென்னையில் மயிலாப்பூர் தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஏனென்றால் கபாலீஸ்வரர் கோயில் ரொம்பவும் புகழ்பெற்றது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற திருத்தலம். இறை அன்பர் சிவநேசச் செட்டியார் இறைவனின் திருவருளால் பூம்பாவை என்னும் மகளைப் பெற்றார். ஆனால் 7வது வயதிலே பாம்பு கடித்து இறக்க நேர்ந்தது.

பெற்றோர்கள் குழந்தையின் உடலை எரித்து சாம்பலை ஒரு குடத்தில் வைத்திருந்தனர். திருஞானசம்பந்தர் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்கு வந்திருந்த போது பூம்பாவையின் உடலை எரித்த சாம்பல் உள்ள குடத்தை அவர் முன்னே வைத்தார். உடனே திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடி பூம்பாவையை உயிர்பெறச் செய்தார். 5 ஆண்டுகள் இறந்த இடைவெளியை கடந்து 12 வயது சிறுமியாக மாறித் தோன்றினாள்.

இங்கு பங்குனி உத்திர திருவிழாவும், அறுபத்து மூவர் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெறும். இந்தக் கோயில் சாந்தோம் கடற்கரையில் இருந்து ஏதோ கடல் கொந்தளிப்பு காரணமாக சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு மயிலாப்பூருக்கு மாற்றப்பட்டுள்ளதாக குறிப்பு இருக்கிறது. இந்தக் கோவிலில்



உள்ள விசேஷமான ஈஸ்வரனைப் பணிந்து தன் மனதிற்குள்ளே மானசீகமாக இக்கோயிலை நிலைநிறுத்தி அனுதினமும் வழிபட்டு வந்தால் சகல நன்மையும் கிடைக்கும். முக்திக்கும் வாய்ப்பு உண்டு.

## கோயம்பேடு

மூலவர் : சுயம்பு லிங்கம்

சுவாமி : செல்வபுரிசுவரர், குறுங்காலீசுவரர்

அம்பாள் : அறம் வளர்த்த நாயகி

கோயம்பேடு, புறநகர் பேருந்து நிலையம் இங்கு வந்ததால் திடீரென புகழ்பெற்றது. இங்கிருந்து பூந்தமல்லி செல்லும் ரோட்டில் முதல் இடப்பக்கத்தில் திரும்பும்போதே கோயிலைக் காணலாம்.

இங்கு ஸ்ரீ ராமர் புதல்வர்களாகிய லவன், குசன் பிறந்தார்கள் என்பதால் இத்தலத்திற்கு குசலவபுரம், கோசை நகர் என்றும் வழங்கப்படுகிறது. ஸ்ரீராமர் தனது வேள்விக்குதிரையைத் தேடி வரும்போது, இங்குள்ள ஆற்றின் கரையில் அமர்ந்ததால் 'அமர்ந்தகரை' என்னும் பெயர் வந்த பிறகு அது அமைந்தகரையாகி இன்று அமிஞ்சிகரை என அழைக்கப்படுகிறது. காலங்கள் மாறும்போது மக்கள் சொல், செயல் மாறினாலும் இறைவனின் அருள், திருத்தலங்களின் தன்மை மாறுவதில்லை.

இது அருணகிரிநாதர் திருப்புகழ் பாடப்பெற்ற தலமாகும். அத்துடன் இங்கு சுவாமி வடக்கு நோக்கி இருப்பது தனிச்சிறப்பாகும். இங்கு சென்று தனக்குள்ளே மனக்கண்ணில் பதிவு செய்து, அடிக்கடி இந்தக் கோயிலை மனதில் நிலைநிறுத்தி ஈஸ்வரனை வழிபட்டு வந்தால் சகல நன்மையும் நடக்கும்.

## திருவேற்காடு

சுவாமி : வேற்காட்டு நாதர், வேதபுரிசுவரர்
அம்பாள் : வேற்கண்ணி, பாலாம்பிகை
தீர்த்தம் : வேலாயுதத் தீர்த்தம்

இங்கு சுவாமிக்கு கிழக்கு நோக்கிய சந்நிதி. அத்துடன் அம்பிகை சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. இது முருகப் பெருமான் வழிபட்டதலம். நான்கு வேதங்களையும், வேலமரமாய் நின்று வழிபட்டார் என்பதால் இது வேற்காடு எனப் பெயர் பெற்று பிறகு திருவேற்காடு என்று அழைக்கப்பட்டு வருகிறது.

இக்கோவில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணத்தில் இடம் பெற்றுள்ளது. சென்னையிலிருந்து பூந்தமல்லிக்குப் போகும் சாலையில் உள்ளது. திருவேற்காடு செல்லும் வழியில் அழகான வளைவு அமைக்கப்பட்டுள்ளது. கருமாரியம்மன் கோயிலில் இருந்து 2½ கி.மீ. தூரம் மேற்கே சென்றால் இச்சிவாலயத்தை அடையலாம்.

இத்தலத்தில் உள்ள வேத தீர்த்தத்தில் நீராடி ஈசனை வழிபட்டு வந்தால் சகல நோய்களும் நீங்கும் என்று ஐதீகம் கூறுகிறது. இங்கு சென்று மானசீகமாக தன் மனதில் இத்தலத்தை நிலைநிறுத்தி உள்ளத்தில் வைத்து அடிக்கடி நினைத்து வழிபட்டால் சகல நன்மைகளும் பெற்று மறுமையிலும் நற்கதி அடையலாம்.

## திருவான்மியூர் (சென்னை)

சுவாமி : மருந்தீஸ்வரர், ஔஷத்ஸ்வரர்
அம்பாள் : திரிபுரசுந்தரி, சொக்கநாயகி
தீர்த்தம் : பாவநாசினி

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவராலும் பாடப்பெற்ற ஸ்தலம் இது. அகத்திய முனிவருக்கு சிவபெருமான் மருந்து வகைகளைப் பற்றி அருளிச்செய்த சிறப்புத்தலம். அத்துடன் தேவர்கள், சூரியன், பிருங்கி முனிவர் வந்து வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.



வால்மீகி முனிவருக்கு இறைவன் திருநடனக் காட்சியருளிய தலம். காமதேனு பால் சொரிந்து வழிபட்ட தலம். ஆகையால் இங்கு சென்று உண்மையாக மனதில் இந்த ஆலயத்தை நிலை நிறுத்தி வழிபட்டு வந்தால் சகல நன்மைகளும் கிடைக்கும்.

இராமபிரான், ஸ்ரீ கிருஷ்ண பகவான் இத்தலத்து இறைவனை வழிபட்டனர் என்று கூறப்படுகிறது. அருணகிரிநாதர் தனது திருப்புகழில் பாடியிருக்கிறார். பாம்பன் ஸ்வாமிகள் நற்பேறு பெற்ற தலம்.

இதனால் இங்கு செல்லும் பக்தர்கள் இக்கோவிலை மனதில் அடிக்கடி கொண்டுவந்து மானசீகமாக அங்குள்ள இறைவனை தினம் 100 தடவை பூஜித்து வந்தால் சகலமும் கைகூடும். மனம் அடங்கித் தெளிவு பெறுவீர்கள்.

## திருக்கச்சூர் (சென்னை)

சுவாமி : கச்சபேசர், விருந்திட்டவரதர் சுயம்பு லிங்கம்
அம்பாள் : அஞ்சனாட்சியம்மை
தீர்த்தம் : ஆமை கூர்ம தீர்த்தம்

'கச்சூர்' என்பதுதான் ஊரின் பெயர். திருபாற்கடலைக் கடையும்போது மத்தாக இருந்த மந்திர மலையை திருமால் ஆமை வடிவம் பெற்றுத் தாங்கினார். ஆனால் அதற்குரிய ஆற்றலை திருமால் இங்குள்ள சிவபெருமானைத் தரிசித்து பூஜித்துப் பெற்றதால் கச்சூர் எனப் பெயர் வந்தது. கச்சபம் என்றால் ஆமை எனப்படும்.

இந்த ஊர் நடுவே உள்ள கோயில் கச்ச பேசம் ஆகும். அடுத்து மலையடிவாரத்தில் உள்ள கோயில் சுயம்பு மருந்தீஸ்வரர் ஆகும். 'மாலை மதியே மலைமேல் மருந்தே' என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடியிருக்கிறார். தாம்பரம் செங்கல்பட்டு ரோட்டில் சிங்கப்பெருமாள் கோயிலில் இருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. சுந்தரர் பசித்திருந்தபோது

பகவான் அந்தணர் உருவில் வந்து உணவு கொடுத்து பசியைப் போக்கிச் சென்ற இடமாகும். இங்கு இருக்கும் கொடிமரத்தின் கீழ் இருக்கும் மண் திருநீரின் தன்மையுடன் இருக்கும்.

இத்தலத்தை தரிசித்து வணங்கி மானசீகமாக மனதினுள் இறைவனை நிறுத்தி 100 தடவை தனக்குள்ளே அன்றாடம் வழிபட்டு வந்தால் சகல கரும வினைகளும் நீங்கி முக்தி அடையலாம். அதற்கான குருமார்களின் தொடர்பும் கிடைக்கும். உலக வாழ்வை விரும்புபவர்களுக்கு துன்பம் நீங்கி நன்மை பெறுவர்.

## திருவாலங்காடு

சுவாமி : சிங்கப்பெருமான்

அம்பாள் : மிரமராளகாம்பாள்

தீர்த்தம் : முக்தி தீர்த்தம்

ஐந்து சபைகள் ஈஸ்வரனுக்கு உண்டு. அதில் திருவாலங்காடு இரத்தின சபை கொண்ட சிவஸ்தலமாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல்பெற்று, நான்கு பதிகங்களை உடைய ஸ்தலமாகும். சுயம்பு லிங்கமாகக் காட்சி தருகிறார். திருவள்ளூரில் இருந்து 16 கி.மீ. தூரத்தில் திருவாலங்காடு உள்ளது.

இங்கு காரைக்கால் அம்மையாருக்கு இறைவன் காட்சி கொடுத்து உயர்ந்த நிலை கொடுத்த வரலாறு உண்டு. சிவபெருமான் கிழக்கு நோக்கி திருக்காட்சியளிக்கிறார். அம்பிகை தெற்கு நோக்கி மக்களுக்கு அருள்புரிகிறார். கார்க்கோடர், முஞ்சிகேசர் முனிவர்களின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்கி திருநடனம் புரிந்து பத்திரகாளியின் ஆணவத்தை அடக்கினார் என்று ஸ்தல வரலாறு கூறுகிறது. அந்தத் தருணத்தில் சிவபெருமான் தனது இடது காலை தலை அளவு தூக்கி திருநடனம் செய்தார் என்ற பெருமையும் இந்த ஸ்தலத்திற்கு உள்ளது.



இங்கு சென்று மனதில் இத்தலத்தை நிறுத்தி, அடிக்கடி இறைவனை தினம் சுமார் 100 தடவையாவது துதித்து வழிபட்டு வந்தால் சகலமும் கைகூடும்.

## பூண்டி (திருவெண்பாக்கம்)

சுவாமி : ஊன்றீசுவரர் (மூலவர் சுயம்பு)

அம்பாள் : மின்னொளியம்மை

திருவள்ளூரிலிருந்து 12 கி.மீ. தூரத்தில் உள்ளது. இது சுந்தரர் பாடல் பெற்ற ஸ்தலம்.

## திருப்பாலைவனம்

சுவாமி : திருப்பாலீசுவரர்

அம்பாள் : உலகாம்பிகை

தீர்த்தம் : அமிர்த புஷ்கரணி

மூலவர் சுயம்பு லிங்கம் பொன்னேரியை அடுத்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது.

## திருமழிசை

சுவாமி : ஒத்தாண்டேசுவரர்

அம்பாள் : குளிர்ந்த நாயகி

பூந்தமல்லியிலிருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது.

## திரு இடைச்சுரம்

சுவாமி : இடைச்சுரநாதர்

அம்பாள் : இமயமடக்கொடி

இது திருஞான சம்பந்தர் பாடல் பெற்ற திருத்தலம். மூலவர் சுயம்பு மரகதலிங்கம்.

## திருப்பாசூர்

சுவாமி : பசுபதீசுவரர்

அம்பாள் : பசுபதி நாயகி

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் இருவராலும் பாடல் பெற்ற திருத்தலம். திருவள்ளூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

## திருமுல்லைவாயில்

சுவாமி : மாசிலாமணீசுவரர்

அம்பாள் : கொடியிடை நாயகி

சென்னை ஆவடி சாலையில் உள்ள இத்தலம் சுந்தரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும். மூலவர் சுயம்பு லிங்கம்.

## திருவலிதாயம் (பாடி)

சுவாமி : வல்லீசுவரர்

அம்பாள் : தாயம்மை ஜகதாம்பாள்

சென்னை ஆவடி சாலையில் வில்லிவாக்கத்தை அடுத்து உள்ளது.

‘கு’ என்னும் எழுத்து இருளைக் குறிக்கும்.

‘ரு’ என்னும் எழுத்து ஒளியைக் குறிக்கும்.

அஞ்ஞானத்தை விழுங்கும் பிரம்மம் குருவே என்பதில் சந்தேகமில்லை.

சரணாகதி என்னும் உணர்வுடன் நின்றால் சிவமார்க்கம் என்ற விளைச்சலைப் பெறலாம்.

இந்த உணவை உண்பதன் மூலம் ஈசனை அடையலாம்.



## ஆறுபடை வீடுகளும் ஞானமும்

தமிழ்நாட்டில் பக்தி ஞானம் வளர நமது ஞானிகள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நாம் என்ன கைமாறு செய்வது என்று ஒரு ஏக்கம் நமக்கு இருக்கத்தான் செய்கிறது.

மக்கள் இறைவனை உணர்ந்து புரிந்து கொள்ள அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு அளவே இல்லை. ஞான அர்த்தமுள்ள கோயில்களும், ஞான விளக்கம் தந்த நூல்களும் கொஞ்சமா! நஞ்சமா! ஆனால் அதைப் புரிந்து படிக்கத்தான் ஆள் இல்லை. அதில் அக்கறையும் இல்லை என்று கூடச் சொல்லலாம்.

பஞ்ச பூதங்களுக்கு கோயில் எழுப்பி ஞான விளக்கம் தந்து ஞானிகள் முருகு அழகு என்ற அறிவுக்கு ஆறுபடை வீடு என்று வகுத்தனர். ஆறறிவு கொண்ட மனிதன் தனது ஆறாவது அறிவால் இறைவனை உணரக் கடமைப்பட்டிருக்கிறான். அப்படி உணர்வுப் பாதையில் பயணிக்காவிட்டால் இறைவனின் ஆதரவு ஒரு துளியும் கிடைக்காது.

உணர்வுப்பூர்வமாக இருப்பவர்களுக்கு அவர்களிடம் உள்ள மும்மலங்களையும், அசுரத்தன்மையும் வெற்றி கொள்ள முருகன் படையோடு வருவார். அசுரர்களின் ஆதிக்கத்திலிருந்து தேவர்களைக் காப்பாற்றுவார் என்றதின் உட்பொருள், நம்மிடம் உள்ள ஆறு ஆதாரங்களும் ஆறுபடை வீடு என்பதாகும்.

தியானத்தால் உயரும்போது ஆறு ஆதாரங்களும் இறையருள்பெற்று சிறப்பாக வேலை செய்ய ஆரம்பிக்கும். இதனால் கெட்டவைகள் நம்மிடமிருந்து பின்வாங்கும். ஞானப்பிரகாசமாக ஞான ஒளியாக சிரசில் பிரகாசிக்கும். அப்படிப் பிரகாசிப்பவரே முருகன் அருள் பெற்றவராகிறார். எண்சான் உடலுக்கு நமது சிரசுதான் குன்றாகும். அங்கு ஞானப்பிரகாசம் இருப்பதால்தான் ‘குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கட்டும்’ என்று ஔவை பரிபாசையில் கூறியிருக்கிறார்.

திருமுருகாற்றுப்படை நூலாசிரியர் நக்கீரர் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்ற ஆறு குன்றுத் தலங்களையும் சிறப்பாக முருகனின் உறைவிடங்கள் என மொழிந்துள்ளார்.

முருகனைக் குன்றுதோறும் ஆடும் திருக்குமரன், சக்திகுமரன், சிவகுமரன் என நாம் போற்றுகிறோம். ஞானம் என்ற தெளிவு பிறந்து விட்டால் என்றும் உள்ளம் இளமையாக இருக்கும். ஆன்மாவிற்கு பிறப்பு இறப்பு என்பது ஒழியும். இப்படிப்பட்ட சக்தியை வழங்குபவரே குமரக்கடவுள்.

குறிஞ்சி நிலமாகிய குன்று தான் முருகப்பெருமானின் ஆதிக்கம் நிறைந்த இடமாக இருக்கிறது. அத்துடன் சிவபெருமான் இருக்குமிடம் இமாலயமாக இருக்கிறது. இதற்குள் மறைந்திருக்கும் கருத்து என்னவென்றால் தலையின் முற்பகுதி புருவமத்தி தான் சிற்சபை (குன்று) அதில் முருகன் இருக்கிறார்.

தலையின் கொண்டை, அதாவது தலையின் பின்பகுதிதான் உயர்ந்த மலை. இங்குதான் சிவபெருமான் இருக்கிறார். இது ஆனந்தசபை என்றும் தூரியாதீதம் என்றும் கூறப்படுகிறது. இவை இரண்டிற்கும் இடையில் இருப்பதே பொற்சபை, துரியம் சக்தி. உதாரணமாக அழகிய வாசமான மலர்தான் சிவபெருமான் என்றால், அதன் அழகே முருகன். அதன் வாசனையே சக்தி. மூன்றும் சேர்வதே முக்தியாகும். ஜோதி சிவபெருமான் என்றால் அதன் உஷ்ணம் சக்தி, அதன் சுவாலையான அழகே முருகன் ஆகும்.

‘துரியம் கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு.’

தூக்கம் விழிப்பு இரண்டும் கலந்த நிஷ்ட்டை நிலையில் மூலாக்கினியைக் கண்டுவிட்டால் பிறகு உயிர்க்குப் பிறப்பு இறப்பு இரண்டும் இல்லை. பேரின்ப வீடு அடைவதே இறுதி நிலை என்று அவ்வைக்குறள் கூறுகிறது. கோயில் காட்டும் பாடங்களை உணர்ந்து, அனுதினமும் இறைவனை நினைந்து மனதில் பூஜிக்க இன்றே முயலுங்கள். எல்லா நன்மையும் கிடைக்கும்.



# திருப்பரங்குன்றம்

**ஞான விளக்கம்**

**நுழை வாயில்**

திருப்பரங்குன்றம் என்றாலே இறைவன் இருக்கும் இடம் என்று பொருளாகும். இங்கு மச்சேந்திரர் என்ற பெரிய ஞானி சமாதியாயிருக்கிறார். பொதுவாகத் திருத்தலம் என்றாலே அங்கு உயர்ந்தவர் சமாதி இருக்கும். இதனால் அவர்களின் அருள் அங்கு பரவி மக்களுக்கு அருள்பாலிக்கும். பக்தர்களுக்கு அஞ்ஞானம் விலகி மெய்ஞ்ஞானம் கிட்டும். அத்துடன் பொருள், ஆரோக்கியம், குடும்பம் யாவும் உயரும்.

‘நாம் எங்கு சென்றாலும் நம்முடன் நம் இறைவன் உடன் வந்து கொண்டிருக்கிறார் என்று மனதில் பாவிக்க வேண்டும்’. இறைவன் இல்லாத இடமே கிடையாது என்றாலும், தியானிப்பவர்களின் உள்ளத்தில்தான் அவர் பிரகாசிக்கிறார். ‘உள்ளம் அறிந்தவர் உலகை அறிந்தவராகிறார்’. ‘‘மின்சாரம், மின்சாரக் கம்பிகளில் எல்லாம் பிரகாசிப்பதில்லை. அது மின்விளக்கில் மட்டும்தான் பிரகாசிக்கும்’’ என்பதை உணர்ந்து தியானத்தை பின்பற்றுங்கள்.

**ஸ்தல வரலாறு :** திருப்பரங்குன்ற மலை சிறிய மலையாக இருந்தபோதிலும் இதன் வடிவம் சிவலிங்கம் போன்றதாகும். சுமார் 320 அடி உயரம் கொண்ட இம்மலையை சிவாலயம் என்று வழிபட்டு திருஞானசம்பந்த சுவாமிகள் பாடிப் பரவசமடைந்துள்ளார். இங்கு சென்று வழிபட்டு வந்தால் சென்ற பிறவிப் பிணி அகலும் என்று கூறியிருக்கிறார்.

ஞானம் என்பதே ஒட்டுக்கேட்டு முன்னேற்றம் அடைவதில்லை. குரு வாயிலாக உபதேசம் பெற்று ஞான விளக்கங்கள் அறிந்து, புரிந்து, உணர்ந்து வருவதேயாகும். இறைவன் மிகுந்த அன்பும் கண்டிப்பும் உள்ளவர். ஆனால்

மன்னிப்பவர். இதை மையமாகக் கொண்ட சம்பவத்தைக் கவனியுங்கள்.

ஒரு முறை சிவபெருமான் உமாதேவிக்கு பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உபதேசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது தாயின் மடியிலிருந்த பாலமுருகன் அதைக்கேட்டு குழந்தையிலேயே மனதில் கெட்டியாகப் பிடித்து வைத்துக் கொண்டார்.

பாலமுருகன் தன் மனதில் மந்திரத்தை பதிய வைத்தது குற்றம் எனச் சிவபெருமாள் எண்ணினார். அத்துடன் புனிதம் வாய்ந்த மந்திரத்தின் உட்பொருளை ஒரு குரு வாயிலாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் ஞான சட்டம். ஒரு ஞான குரு இல்லாது மறைமுகமாக விளங்கிக் கொள்வது சாஸ்திர விரோதமானது என்று சிவபெருமான் திருவுளங்கொண்டார்.

சிவபெருமானின் உள் உணர்வை உணர்ந்து கொண்ட பாலமுருகன் தனது செயலுக்குப் புனிதம் தேடும் வகையில் திருப்பரங்குன்றம் வந்து தவம் மேற்கொண்டார். குமரனின் தவத்திற்கு மகிழ்ந்து சிவபெருமான் உமாதேவியாருடன் பரங்கிநாதர் – ஆவுடைநாயகி என்ற பெயரில் குருவாக வந்து காட்சி கொடுத்து வாழ்த்தினார்.

**ஞானக் கருத்து :**

1. இறைவனை வழிபட முறையான குரு தேவை என்பதை இக்கருத்து வலியுறுத்துகிறது.

2. தொடர்ந்து தவம் செய்யவும், தியானம் செய்யவும் இளமைப் பருவம்தான் மிகச் சிறந்தது என்பதையும் படம்பிடித்துக் காட்டுகிறது.

3. குழந்தையிலேயே பாலகுமாரனுக்கு மந்திர நுணுக்கங்களை அறிய ஆவல் இருந்ததால்தான் இன்றுவரை அவரின் சிறப்பு வளர்ந்தோங்கி முருகா என்ற சொல் வானை முட்டிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம்.



'ஆதியாம் மூல மறிந்து அஞ்செழுத்தினைப்
பேதியாது ஒது பினை'
பேதியாது – மாறுபடாது
பினை – பின்னை

ஆதிமூலமாகிய பரம்பொருளை எண்ணிப்பிறகு அவருடைய ஐந்தெழுத்து மந்திரமாகிய 'சிவாயநம' என்னும் சொல்லை மாறுபாடின்றி மனம் ஒன்றி ஓதுவாயாக என்ற அவ்வைக் குறள் நமக்கு குரல் கொடுக்கிறது.

இவ்வாறு நாம் மந்திரம் சொல்லி மனதினில் அவரை இறுக்கிப் பிடித்து பூஜித்து வந்தால் முன் செய்த பாவமும், தற்பொழுது செய்த பாவமும் விலகி புனிதம் பெறுவதோடு இந்த உலகில் எல்லா நலமும் பெற்று வாழலாம் என்பதில் எந்த மாறுபடும் இல்லை.

ஸ்தல வரலாறு : சூரபத்மனை அழித்து தேவர்களைக் காத்து உதவிய முருகப் பெருமான் திருச்செந்தூரில் சிவ பூஜையை முடித்துவிட்டு தனது மயில் மீது ஏறி படை பரிவாரங்களோடு திருப்பரங்குன்றம் நோக்கிப் புறப்பட்டார். திருப்பரங்குன்றத்தில் தவம் செய்து கொண்டிருந்த தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்கரபாணி, மாலி ஆகிய முனிவர்கள் முருகப்பெருமானின் வருகையை உணர்ந்து அவரை வரவேற்க ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்தனர்.

இந்திரன் தனது தேவதச்சர்களைக் கொண்டு திருப்பரங்குன்றத்தின் உச்சியிலே செம்பொன் ஆலயம் ஒன்றை கட்டினார். பிரம்ம தேவன், இந்திரன், முனிவர்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கு சம்மதித்து கருணையே உருவான முருகக்கடவுள் திருப்பரங்குன்றத்தின் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த சிவன் கோயிலுக்கு எழுந்தருளி காட்சி தந்தார்.

அப்பொழுது இந்திரன் முருகபெருமானிடம் பணிந்து வணங்கி 'முருகப்பெருமானே, எங்களது அன்பு

வேண்டுகோளை ஏற்று சூரபத்மனை அழித்து விண்ணகத்தின் ஆட்சிப் பொறுப்பை மீண்டும் எனக்களித்ததோடு, தேவர்களின் இடர்களையும் தீர்த்து பேரருள் செய்தீர்கள். இதனால் அருள் கூர்ந்து எனது அருமை மகள் தேவ குஞ்சரியை தாங்கள் ஏற்று மணம் புரிந்து அருள் செய்ய வேண்டும்' என வேண்டினான்.

தேவேந்திரா, என்னைச் சரணடைந்து சரவணப் பொய்கையிலே தவம் செய்யும் தேவ குஞ்சரியை ஆட்கொள்ள வேண்டிய நல்ல நேரம் வந்து விட்டதால் திருமணம் செய்து கொள்வோம்' என முருகப்பெருமான் வாக்குறுதி கொடுத்தார். இந்திரன் தனது அன்பு மகளை முருகப்பெருமானுக்கு தாரைவார்த்துக் கொடுக்கிறார். பிறகு குறித்த நேரத்தில் தேவகுஞ்சரியைத் திருமணம் செய்து கொண்டார். அதுவே பங்குனி உத்திர திருநாளாகும்.

**ஞான விளக்கம் :**

இறைவனை அடைய முயற்சிக்கும் ஒவ்வொரு மனிதரையும் முன்னேற விடாது தடுக்கும் அரக்கத் தன்மையில் ஒன்றுதான் சூரபத்மன் என்ற தன்மையாகும். இது எல்லா மனிதர்களிடமும் உண்டு. இறைத் தன்மையுடைய முருகப்பெருமான் சூரபத்மனை அழித்துவிட்டு வருவதை தனது தியான சக்தியால் முனிவர்கள் தனக்குள்ளே பார்த்துவிடுகின்றனர்.

ஒவ்வொருவரும் தனக்குள்ளே எண்ணத்தால் இறைவனுக்கு மனக்கோயில் எழுப்பி இறைவனை தனக்குள்ளே உள்ள கோயிலுக்கு அழைக்க வேண்டும் என்பது மறைபொருள் விசயமாகும்.

இதைத்தான் செம்பொன் ஆலயம் என்று ஸ்தலவரலாற்றில் கூறப்படுகிறது. நமக்குள் உள்ள எல்லா அசுரத்தன்மைகளையும் அழித்து நன்மை செய்ததால் நமது மனமாகிய பெண்ணை அறிவாகிய கடவுளுக்குத் திருமணம் செய்து வைப்பதைக் காட்டுவதே தேவ குஞ்சரியை மணம் புரிதலாகும்.



மனம் நீண்டகாலமாக தவம் புரியும்போது அதைத் தடுத்துவந்த அசுரர்களை அழித்து உதவிய இறைவனையே ஒவ்வொருவரும் மானசீகமாகத் திருமணம் செய்து கொள்ளும் முறைதான் திருக்கல்யாணம் என்று அழைக்கப்படுகிறது. மனதை தேவேந்திரன் இறைவனுக்கே, அதாவது அறிவுக்கே தாரை வார்த்துக் கொடுத்ததால், மனம் அறிவோடு சேர்ந்து பரிசுத்தமாகிவிடுகிறது என்பதுதான் ஞான விளக்கம்.

மயிர்முனையில் பாதி மனத்தறிவு உண்டேல்
அயிர்ப்புண்டு அங்கு ஆதிநிலை.

உரோம முனையில் பாதியளவு அதாவது மிகச் சிறிய— குறைந்த அளவு அறிவு இருந்தாலும் போதும். அப்படிப்பட்ட அறிவுடைய மனதில் ஆதியாகிய பரம் பொருள் நிலை தோன்றும் என்று அவ்வைக்குறள் கூறுகிறது.

இறைவனைச் சிறிது நேரம் அவ்வப்போது நினைக்கப் பழகினால் அது பெரிய நன்மைகளை இம்மைக்கும், மறுமைக்கும் செய்து விடும்.

ஸ்தல வரலாறு : திருப்பரங்குன்ற கோயில் திருமுருகனைத் தரிசிக்கும் முன்னர் குருவாக வந்து காட்சியளித்து வாழ்த்திய பரங்கிநாதர் ஆவுடை நாயகி ஆலயத்தை வழிபட்டே உள்ளே செல்ல வேண்டும். இது இன்று மீனாட்சி – சுந்தரேஸ்வரர் ஆலயம் என அழைக்கப்படுகிறது.

அடுத்து கிரிவலம் வந்து ஆறுமுகக் கடவுளை வணங்க வேண்டும். பிரம்ம கூபம் என்ற தீர்த்தம் இங்கு உள்ளது. இதை சன்னியாசிக் கிணறு தீர்த்தம் என்றும் கூறுவர். இத்தீர்த்தத்தில் நீராடி நீரை அருந்துவோர்க்கு நீரழிவு நோய் குணமாகி விடுகிற்து என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. இந்த தீர்த்தத்தை இங்கு அபிஷேகத்திற்குப் பயன்படுத்துகின்றனர்.

இங்குள்ள மகா மண்டபத்திற்கு படிக்கட்டில் ஏறித்தான் மேலே செல்ல வேண்டும். படிக்கட்டின் அருகில் முனிவர்களும், சந்நிதியில் பூதகணத்தலைவர்களும் உள்ளனர். இதில் அண்ட பராபரணர், உக்கிரர் என்ற பூதகணத் தலைவர்கள்தான் திருப்பரங்குன்றத்தில் காவல் தெய்வங்கள் என கூறப்படுகிறது.

மகா மண்டபத்தின் கீழ்ப்பாகத்திலே இருக்கும் திருக்கோயிலில் ஆறுமுகப்பெருமான் வள்ளி, தேவகுஞ்சரி காட்சி தருகின்றனர். மகா மண்டபத்திலிருந்து அர்த்த மண்டபத்திற்குச் செல்லுவதற்கு ஆறுபடிகளைக் கடக்க வேண்டும். இந்தப்படிகளைச் சடாட்சரப்படிகள் என்றும் ஆறெழுத்துப் படிகள் என்றும் ஆறுவர்.

ஞான விளக்கம் : திருப்பரங்குன்ற திருமுருகனைத் தனக்குள் தரிசிக்க நல்ல குருநாதரைச் சந்தித்து உள் உணர்வு முறையறிந்து அவரை தனக்குள்ளே வழிபட வேண்டும். அவரது நேத்திர தீட்சையால் இறைவனை அடையும் பயணம் வெற்றி பெரும். மீன் தனது முட்டைகளை பார்வையால் தான் குஞ்சாகப் பொறிக்கின்றன. இதைப்போன்று குருவின் நேத்திர தீட்சையால் மன அழுக்கு அகன்று இறைவனை உள்ளத்தில் தரிசிக்கலாம்.

கிரி என்றால் மலை. அந்த மலையை வலம் வரும் ஐதீகம் என்னவென்றால் நமது உடலுக்குக் குன்றாக விளங்கும் தலைக்குள் இறைவனை, காவடி போன்று தோளில் சுமந்து வலம் வரவேண்டும் என்பதாகும்.

உயர்ந்த ஞானிகளிடம் அதாவது பிரம்ம நிலையில் இருப்பவர்களின் ஆசீர்வாதத்தால் கிடைக்கப்படும் தீர்த்தமே பிரம்ம கூபத்தீர்த்தம் எனப்படும். இப்படிப் பெறும் தீர்த்தம் தான் சர்க்கரை வியாதியைக் குணப்படுத்தும்.

இறைவனை அடைய நமக்குப் பல படிகள் இருக்கின்றன. இதில் ஏறி ஏறித்தான் செல்ல வேண்டும். இதற்கு செல்ல முற்படும் நமக்கு பாதுகாப்பாக முனிவர்களும், இறைவனால் ஏற்படுத்தப்பட்ட பூதகணங்களும் இருக்கின்றனர்.

உள்ளே சென்று இறைவனை அடையும் இடத்தில் சாமர்த்தியமாக நமது ஆறாவது அறிவைப் பயன்படுத்தி இடைவிடாது மந்திரம் சொல்லிக் கொண்டே உள்ளே நுழைய வேண்டும். ஆறாவது படியை தடையில்லாது தாண்டிவிட்டால் ஏழாவது நிலை இறைவனோடு கலத்தலாகும்.

குறிப்பு : எந்தக் கோயிலையும் மேலோட்டமாக வழிபட்டு நமது இந்து முறையில் கொடுக்கப்பட்ட உள் நோக்கத்தைப்



புரிந்து கொள்ளாத காரணத்தால் தான் இறை சக்தியைப் பலர் அடைய முடிவதில்லை.

இதனால் மேலோட்டமாக இருக்காது. ஆழ்ந்து உணர்ந்து கொடுக்கப்பட்ட விளக்கங்களைப் புரிந்து தனக்குள்ளே கோயிலை அமைத்து வழிபட முயலுங்கள். வெற்றிவேலன் நீங்கள் தான்.

# திருச்செந்தூர்

**ஞான விளக்கம்**

**நுழை வாயில்**

திரு என்றால் இறைவன். செந்தூர் என்றால் உயர்ந்த மருந்து. இறைவனை அடைய, சாகா வரம் பெற மாமருந்தாக திருமுருக்கடவுள் இருக்குமிடம் தான் திருச்செந்தூர்.

''தப ஸ்வாத்யாயேச்வர ப்ரணிதானானி க்ரியாயோக''

தப என்றால் தவம். சுயதேவைகளைக் குறைத்துக் கொண்டு பிறர் முன்னேற்றம், நலன், தியானம் உயர வாழவேண்டும். இதுவே தவ வாழ்க்கை.

ஸ்வாத்யாயேம் என்றால் தன்னை உணர்தல், நல்ல விசயங்களைக் கற்றுணர்தல். தான் கற்றதில் பெற்றதை மற்றவர்களுக்குச் சொல்லுதல், மந்திரம், ஜபம் ஆகியவற்றைத் தவறாது செய்தல்.

ஈசுவர ப்ரணிதானம் இதன் விளக்கம், நாம் பகவான் மேல் பேரன்பு செலுத்தி பகவானையே சரணடைதலாகும். இதனால் சகலமும் கைகூடும்.

இந்தியாவின் வடக்கில் கார்த்திகேயன் என்றும் தெற்கில் முருகன் என்றும் அழைக்கப்படும் திருமுருகக்கடவுள் மனிதர்களின் காவலர். அரக்கர்களை அழித்து நல்லவர்களுக்கு நன்மை பயக்கும் நாயகர் என்றெல்லாம் போற்றிப் புகழப்படுகிறார். இறைவன் மனித ரூபத்தில் வந்தால் அதுவே அவதாரம்.

**ஸ்தல வரலாறு :** திருச்செந்தூரில் உள்ள முருகப்பெருமானின் ஆலயம் தொன்மைச் சிறப்பு வாய்ந்ததாக உயர்ந்து நிற்கிறது. இதை திருச்சீரலைவாய் எனச் சிறப்பாக அழைக்கின்றனர். இது கடற்கரை கோவில் என்பது குறிப்பிடத்தக்கது.

கடல் அலைகள் எப்பொழுதும் இருப்பதால் இக்கோயிலை திருச்சீரலைவாய் என்ற காரணப்பெயர் கொண்டு அழைக்கின்றனர். முருகப்பெருமான் சூரபத்மனை வெற்றி கொண்ட இடமாதலால் இதற்கு ‘ஜெயந்திபுரம்’ என்ற வடமொழிப் பெயரும் உண்டு.

அசுரர்களின் கொடுமைக்கு ஆளாகிப் பெருந்துயரடைந்த தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான் தமக்கு அருகே அமர்ந்திருந்த முருகப் பெருமானை நோக்கி குமரா, அதர்மத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து தர்மத்தை நிலை நாட்ட வேண்டிய பொறுப்பினை நீ மேற்கொள்ள வேண்டும். நல்லவர்களுக்குக் கெடுதலும், கொடுமையும் செய்து வரும் சூரபன்மனையும் அவன் சகாக்களையும் அழித்து தேவேந்திரனுக்கு அவன் நாட்டை மீட்டளித்து நல்லது செய்து திரும்புவாயாக’’ என அன்புடன் ஆணையிட்டார்.

சிவபெருமானின் ஆணையை ஏற்று உமாதேவியின் ஆசியினைப் பெற்று, பூத கணங்கள் தேவகணங்கள் உடன்வர சக்தி வாய்ந்த போர்க்கருவிகளுடன் முருகப்பெருமான் போருக்குப் புறப்பட்டார்.

ஆகாயத்தில் வாயுதேவனால் செலுத்தப்பட்ட தேரில் தனது படைகள் புடைசூழ செல்லும்போது சூரபத்மன் தம்பியாகிய தாரகாசுரன் ஆளுகைக்கு உட்பட்ட இடத்தை கடக்க வேண்டிதாயிற்று.

மாயமந்திரங்கள் செய்யும் கிரௌஞ்ச மலையை குறுக்கிடும்போது எல்லோரும் அஞ்சி நடுங்கினர். முன்னரே இந்த மலையின் ரகசியங்களைப் பற்றி நாரதமுனிவர்



முருகப்பெருமானிடம் சொல்லி வைத்திருக்கிறார். ‘இந்த மலை மாயாஜாலங்கள் பல புரிந்து தன்னருகில் வந்தவர்களைக் கொல்வதே தொன்று தொட்டு செய்துவரும் தன்மையாகக் கொண்டுள்ளது. தாரகாசூரன் இந்த மலை அருகில் மாயாபுரிதனில் இருந்து ஆட்சி புரிகிறான். இவனை முடித்துவிட்டால் சூரபன்மன் சக்தி பாதி காணாமல் போய்விடும்’ என்று நாரத முனிவர் கூறினார்.

தாரகனைக் கொன்று வருமாறு முருகப்பெருமான் வீரபாகுவுக்கு உத்தரவு பிறப்பித்தார். இருவருக்கும் நடந்த சண்டையில் தாரகன் வீரபாகுவை மாய வஞ்சத்தால் வெல்ல எண்ணி புறமுதுகு காட்டி ஓடுவதுபோலப் பாசாங்கு செய்து கிரௌஞ்ச மலையை நோக்கி ஓடினான்.

வீரபாகுவும் அவரது சகாக்களும் மலையின் குகைக்குள் நுழைந்தபோது வாசலை மூடிவிட்டு எல்லோரையும் மயக்கமுறச் செய்து விட்டு தப்பிவிட்டான். இந்த நிலையை தனது ஞானதிர்ஷ்டியால் பார்த்த முருகப்பெருமான் தாரகனுடன் நேரடிப் போரில் இறங்கினார்.

கடும்போர் நடந்தது. தாரகன் தப்பி ஓடி கிரௌஞ்ச மலையில் மறைந்து மாயஜாலங்கள் புரிந்து முருகப்பெருமானை எதிர்த்தான். மலை வடிவில் மாயம் புரிந்து போரிட்ட தாரகனை நோக்கி முருகப் பெருமான் தனது வேலாயுதத்தை ஏவி விட்டார். மலை இரண்டாகப் பிரிந்தது. தாரகன் இறந்தான்.

பிறகு திருச்செந்தூரில் தேவதச்சன் அழகுடன் அமைத்திருந்த கடல் அலைகள் ததும்பும் கோயிலில் முருகக் கடவுள் எழுந்தருளினார். குருபகவான் வாயிலாக சூரபதுமனின் வரலாற்றையும், வீரத்தையும், பலத்தையும் அவனால் தேவர்கள் முனிவர்கள் பட்டதுன்பங்களையும் முருகப்பெருமான் தெரிந்துகொண்டார்.

சூரபதுமனுக்கு சமாதானத்தூது அனுப்பியும் அவன் கேட்கவில்லை. போர் மூண்டது. பெரும்போர் நடந்தது. 10

நாட்கள் நடந்த போரை முடிக்க நினைத்த முருகப்பெருமான் வேலாயுதத்தை எடுத்து ஏவினார். அது தீயை கக்கிக் கொண்டு சென்று மாமரமாகத் தோற்றத்தை மாற்றி நின்ற, சூரனை இரண்டாகப் பிளந்து தள்ளியது. ஒன்று மயிலாகவும், மற்றொன்று சேவலாகவும் மாறியது. இதை வாகனமாகவும், வெற்றிக்கொடிச் சின்னமாகவும் வைத்துக் கொண்டார்.

**ஞான விளக்கம் :** கடல் அலையும், மன அலையும் ஒய்வதில்லை. அலைபாயும் மனதை அடக்கித் தருபவரே திருமுருகக் கடவுள். ஒருவர் தியானம் செய்யும் போது அந்த சூழல் அவருக்கு ஒத்துப்போய்விட்டால் அங்கே மனம் அமைதிபெறும்.

பொதுவாக தேவர்கள், முனிவர்கள்கூட மனதினில் இருக்கும் அசுரத்தன்மையை அடக்க போராடி இறைவனிடம் கெஞ்சி மன்றாடித்தான் வெற்றி கொண்டிருக்கின்றனர். இதைத்தான் திருச்செந்தூர் கோயில் தத்துவம் விளக்குகிறது.

ஒவ்வொரு மனிதர்களிடத்தும் உள்ள நல்லது உடனே மறைந்து நிற்கும். ஆனால் கெட்டது அவ்வளவு எளிதில் அழியாது. மீண்டும் மீண்டும் தோன்றிக்கொண்டே இருக்கும். மனம் மாயாஜாலம் செய்து நல்லதுபோல் நடித்து கெட்டவற்றில் மாட்டிவிட்டு வேடிக்கை பார்க்கும். நல்லதை நோக்கிச் செல்லும் மனிதன்கூட வழியில் கெட்டதில் விழுந்து விடுவான்.

கெட்டது எவ்வளவு வேகமாக மனிதன் வழியாகச் செல்கிறதோ அதைப் போன்று நல்லதையும் அதே மனதின் வழியில் கொண்டு அறிவுடன் சேர்க்க நடப்பதே போர். எவ்வளவுதான் கெட்டவைகள் வளர்ந்து வந்தாலும் உண்மை என்றும் அழியாது. அது எப்படியும் ஜெயிக்கும். உண்மைக்கு இறைவனின் பாதுகாப்பு உண்டு. ஆனால் நாம் அந்த உண்மையாகிய இறைவனை அடைய உள்ளுணர்வால், உணர்ந்து போராடி அடைய வேண்டும். அதற்கு அனுதினமும் நிமிடத்திற்கு நிமிடம் இறைவனை நினைப்பது தான் சரியான வழி. இதனால் பேராசை, பயம், குரோதம் காணாமல் போய்விடும்.



இறைவனை மனப்பூர்வமாக விரும்பி வழிபட வேண்டும். இது உடனே வராது. தினந்தோறும் செய்யும் பயிற்சியால்தான் வரும். அறிவு நிலையில் மேம்பட்ட பெரியவர்கள் தங்கள் செயல்களுக்காக கிடைக்கும் லாபத்தைத் துறந்து, பிறப்பினால் பூட்டப்பட்ட விலங்குகளை நீக்கி பேரானந்த நிலையை எட்டுகிறார்கள்.

‘மோகம் என்பது ஒரு வகையான குழப்பம். உன்னுடைய அறிவு அதைக் கடந்து விடுமானால் அப்போது உனக்கு வேதனை நிலையே ஏற்படாது’ என்று பகவான் கூறுகிறார்.

## பழனி

**ஞான விளக்கம்**

**நுழை வாயில்**

பூ, பிஞ்சு, காய் முதிர்ந்து பழமாகிறது. எந்தக் கலையிலும் ஒருவர் படிப்படியாக உயர்ந்து விட்டால் அவரை ஞானப்பழம் என்று கூறும் பழக்கம் நம்மிடையே உள்ளது. தெளிந்த அறிவே ஞானமாகும். ஆய கலை அறுபத்து நான்கில் ஞானக்கலைதான் உயர்ந்தது. இது இறைவனை உணரும் கலையாகும். என்றும் இளமையாக இந்தக் கலையில் உயர்ந்து நிற்பவரே தண்டாயுதபாணி.

> ‘உன்னுடைய அறிவு’, கெட்ட செய்திகளால் சற்றும் கலங்கிடாமல் சலனமற்று – வலிமையுடன் சமாதி நிலையில் நிற்கும்போது உனக்கு யோக நிலை கை கூடி வரும்.’

என்று பகவத் கீதை கூறுகிறது. மனதால் எல்லாவற்றையும் இழந்து உலகில் கடமைகளைச் செய்து வருபவருக்கு உலக அழுக்கு உள்ளத்தில் ஒட்டாது. யோகம் என்று பகவான் சொல்வது, தான் செய்யும் எதையும் திறமையாகச் செய்வதே. அத்துடன் மனப்பூர்வமாகச் செய்வதே. இப்படிப்பட்டவர்கள்தான் யோகி ஆகிவிடுகிறார்கள்.

> ‘நன்மை தீமை இரண்டுக்கும் அப்பாற்பட்டு எப்பொழுதும் உண்மைக்காகப் போராடும் சுத்த வீரனாக, பயன்களைக் கருதாமல் ஆத்மாவை தன் வயப்படுத்தியவனாக ஆகிவிடு’

என்று பகவான் கூறியது பழனி முருகனுக்கே சரியாகும். இன்றும் இதைக் கடைப்பிடிக்கும் மாமனிதர்கள் நம்மிடையே ஒதுங்கி நின்று வெற்றி பெற்றுவிடுகின்றனர்.

பழனியில் முருகப்பெருமானின் காட்சி புலனடக்கத்தைக் காட்டுகிறது. ஆமை அவசியம் ஏற்படும்போது தனது உறுப்புக்களை ஓட்டுக்குள் இழுத்துக் கொள்வதுபோல் ஐந்து புலன்களையும் நாம் அடக்கி நிற்க வேண்டும் என்ற தத்துவத்தைக் குறிக்க பழனியில் முருகப்பெருமான் கோவணத்தோடு துறந்து காட்சி கொடுக்கிறார்.

> **‘‘தீயாக உள்ளே தெளிவுற நோக்கினால்**
> **மாயாது பின்னை உடம்பு’’**

உள்ளத்தின் ஒளிச்சுடராய் இருக்கின்ற இறைவனைத் தெளிவாகத் தரிசிக்க முடிந்துவிட்டால் பிறகு உடல் சாகாது என்று அவ்வைக்குறள் கூறுகிறது.

> **‘‘அப்பன் பழனி அப்பனடா – அவன்**
> **அரும்பெரும் திரவியக் கப்பலடா’’** என்ற கால்நடைப்

பயணப் பாடல்கள் நமது நெஞ்சம் நிறைந்தவைகள்.

**ஸ்தலவரலாறு :**

நாரதர் கொடுத்த மாங்கனியால் வந்த தகராறுதான் பழனி உருவாகக் காரணமாக அமைந்தது. பொதுவாக சிவபெருமானின் ஒவ்வொரு திருவிளையாடலும் மக்களின் ஆன்மா விழிப்படைய நல்ல பாடமாக அமையும்.

இந்த அடிப்படையில் தன் குழந்தைகளை நோக்கி, ‘என் அன்புக் குழந்தைகளே என் கையில் இருப்பதே ஒரே ஒரு கனி. ஆனால் முழுமையாக வேண்டும் என்று இருவரும்



போட்டி போடுகிறீர்கள். உங்களுக்கு ஒரு போட்டி வைக்கிறேன், அதில் யார் வெற்றி பெறுகிறீர்களோ அவர்களே இந்த பழத்தைப் பெற தகுதியானவர்கள் எனத் தீர்மானிக்கலாம்’ என்று மொழிந்தார்.

உலகத்தை யார் முதலில் சுற்றி வருவது என்பதே போட்டி. பாலகுமாரன் தமது மயில் மீது ஏறி கற்பனைக்கும் எட்டாத வேகத்தில் பிரபஞ்சத்தை வலம் வந்து சிவபெருமான் முன்னே வந்து நின்றார்.

ஆனால் வினாயகரோ, சர்வ லோகங்களும் அண்ட சராச்சரங்களும் சர்வேஸ்வரனாகிய சிவபெருமானிடம் தானே இருக்கிறது என்ற உண்மையை அறிந்து வலம் வந்து கனியைப் பெற்று விட்டார். உணர்வே பிரம்மம் – என்ற தத்தவத்தை உணர்ந்து விட்டார்.

இதனால் வஞ்சித்த இடத்தில் எனக்கு வேலை இல்லை என்று கூறி தனக்கென்று ஒரு தகுதியை உண்டு செய்து வாழ்வேன் என்று கூறி பாசங்களை உதறித்தள்ளிவிட்டு பழனி மலையை நோக்கி வரும்போது நெல்லிவனத்தில் இலட்சுமி, பூமாதேவி, காமதேனு, சூரியன், அக்கினி ஆகியோர் கடும் தவமாற்றுவதைக்கண்டார்.

அவர்களின் தவத்தின் நோக்கத்தை அறிந்து அவர்கள் குறை அகலத் திருவருள் புரிகிறார். சாப விமோச்சனம் பெற்று முருகப்பெருமானைப் போற்றி வணங்கிவிட்டு அனைவரும் புறப்பட்டனர். பழனிக்கு ‘திருவாவினன்குடி’ என்ற பெயரும் உண்டு.

இடும்பன் சூரபத்மனுக்குப் போர்ப் பயிற்சி அளித்து வந்தான். ஆனால் தன்னிடம் போர்ப்பயிற்சி வாயிலாகப் பெறுகின்ற வல்லமையை அழிவு வழியிலும் அதர்மநோக்கத்துடனும் சூரபத்மன் பயன்படுத்துவதைக் கண்டு இடும்பன் அவனை வெறுத்தான். இதனால் அகத்திய முனிவரை நாடி அவர் சீடனாக இருந்து பணியாற்றி வந்தான். சிவகிரி–சக்திகிரி என்ற இரு சிகரங்களையும் வழிபாட்டு நோக்கத்திற்காக கொண்டு வருமாறு அகத்திய முனிவர் கூறினார்.

இடும்பன் இரண்டு மலைகளையும் காவடிபோல் தொங்கவிட்டுத் தோளில் சுமந்து திரும்பினான். இந்த இரண்டு மலையும் முருகப்பெருமானுக்கு உரியதாகக் கருதப்படும் கந்த மலையைச் சேர்ந்ததாகும். இதைப் பார்த்த முருகக் கடவுள் திருவாவினன்குடியிலேயே இரு மலைகளையும் நிலைபெறச் செய்ய எண்ணினார். அத்துடன் பக்திமானாகிய இடும்பனுக்கும் அருள்புரிந்து அவனை ஆட்கொள்ளத் திட்டமிட்டார். முருகப்பெருமானின் திருவிளையாடல் காரணமாக இடும்பனுக்கு வழிதெரியாது போய்விட்டது. எந்தத் திசையில் சென்றாலும் புறப்பட்ட இடத்திற்கே வந்து கொண்டிருந்தான். மயக்கமும் குழப்பமும் அவனைத் திக்குமுக்காட வைத்தது.

அவன் முன்னால் முருகக் கடவுள் குதிரை வீரனைப்போல் காட்சி கொடுத்தார். அவனுக்கு வழிகாட்டுவதாகக் கூறி திருவாவினன்குடி வந்ததும் காவடியை இறக்கி வைத்து சிறிது நேரம் களைப்பாறிச் செல்லுமாறு ஆலோசனை கூறினார். இடும்பன் சிவகிரி, சக்திகிரி மலைச் சிகரங்களைக் கொண்ட காவடியை பூமியில் இறக்கி வைத்துவிட்டு இளைப்பாறிய பின் காவடியை மீண்டும் தூக்க முயற்சிக்கும்போது முடியவில்லை. மலைகள் இரண்டும் பூமியில் பதிந்து கொண்டது. சிறிது நேரத்தில் மலையின் உச்சியில் ஒரு சிறுவன் கிண்டலாக சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். 'யார் நீ? எதற்காக என்னைப் பார்த்து சிரிக்கிறாய்?' என்றான் இடும்பன். ''எனது மலையில் நான் இருக்கிறேன். நீ யார் என்னைக் கேட்பதற்கு'' என்று கூறி சிறுவனாக நின்ற முருகப்பெருமான் சிரித்தார்.

கோபம் கொண்ட இடும்பன் முருகப்பெருமானைத் தாக்க முயன்றான். அடுத்த கனமே உயிரிழந்து வீழ்ந்து விட்டான். இந்தக் காட்சியைக் கண்ட இடும்பனின் மனைவி அழுதாள். இதை ஞானதிஷ்டியில் கண்ட அகத்திய முனிவர் ஓடோடிவந்தார். முருகப்பெருமானை பலவாறு போற்றி வணங்கிய அகஸ்தியர் அவனை மன்னித்து உயிர்கொடுக்குமாறு வேண்டிக் கொண்டார். அவர் வேண்டுகோளுக்கிணங்க உயிர் பெற்றான். அதுமட்டுமின்றி தமது காவல் தெய்வமாகத் திகழும் பாக்கியத்தையும் அளித்தார்.



**ஞான விளக்கம்**

பாலமுருகன், வினாயகர் இருவருக்கும் மாங்கனியால் வைக்கப்படும் போட்டியின் முடிவு நமக்கு அளிக்கும் பாடம். அது என்னவென்றால், உலகம் எனக்குள் அடக்கம். என்னைச் சுற்றி வந்தால் உனக்கு ஞானம் கிடைக்கும். இதனால் மனக்கோயில் கட்டி என்னை உள்ளே சுற்றிவா என்பதுதான் ஞான ரகசியமாகும். இதை வினாயகர் மூலமாக உணர்த்துகிறார் சிவபெருமான்.

அதே நேரத்தில் எண்ணத்தின் வலிமையால், உலகையும் அண்டசராசரத்தையும் நொடிப்பொழுதில் சுற்றி வர முடியும் என்று முருகப்பெருமான் வாயிலாக நிரூபிக்கிறார். இரண்டும் சிவபெருமானின் செயலேயாகும்.

அரிசி என்ற ஒரே மூலப் பொருளை பல வகையான உணவாக மாற்றி சமைத்து உண்ணுவது போல நமக்கு இறைவன் பல வகையான தோற்றம் கொடுத்து நம்மை வணங்க வைக்கிறார். எல்லாம் ஒன்றே என்று புரிந்து உணர்ந்தால் எல்லாம் கைகூடும். குருவடிவாக இறைவன் வந்து சகல ஞான ரகசியங்களையும் போதிப்பார்.

இடும்பன் அரக்கனாக இருந்தபோதிலும் உண்மை எது என்பதை உணர்ந்து அகத்திய முனிவரிடம் சிசியனாகச் சேர்ந்து இறைநிலையை உணர்ந்த பக்தனாக மாறியதால் முருகப்பெருமான் காட்சி கொடுத்து நல்வழிப்படுத்துகிறார். 'தவறை உணரும்போது மன்னிக்கப்படுகிறான்' உண்மைக்கும் பக்திக்கும் என்றும் இறையருள் உண்டு. இறைவனின் அரவணைப்பும் கிடைக்கும்.

உண்மையை உணர்ந்த அரக்கனுக்கே காவல் தெய்வமாகும் நிலை என்றால் மனிதனாக வாழும் நாம் பக்தி, தியானம் மேற்கொண்டு மானசீகமாக அனுதினமும் எல்லா வேலைகளுக்கிடையில் பகவானை வழிபட்டால் எல்லா நன்மையும் கிடைக்கும் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.

''மனம் இறைவனை நினைக்காமல் வெளியே ஓடும்போது துன்பம் வருகிறது' என்பதை உணர்ந்து விட்டால் பிறகு ஏன் பிரச்சனை.

'கூட்டத்தில் கூட ஒருவன் ஏகாந்தமாக இருக்கிறான் என்றால் அவன் உள்ளத்தில் இறைவனோடு ஒன்றி இருக்கிறான்' என்பதே உண்மையாகும்.

## சுவாமி மலை

**ஞான விளக்கம்**

**நுழை வாயில் :**

நாம் தூங்கும்போது நான் என்னும் எந்த நினைப்பும் இல்லை. அகங்காரம், ஆணவம் எதுவும் இல்லை. மன ஓட்டம் நிற்கும்போது அந்த ஆணவம் வேலை செய்யவில்லை. இதனால் நமது மனதை, விழித்திருக்கும்போது இறைவன் பக்கம் செலுத்தினால் ஆணவம் நம்மை பலவீனப்படுத்திவிடாது. அன்பும், தெளிவும், முன்னேற்றமும் படிப்படியாக கூடிக் கொண்டே செல்லும். இதனால் மகா சக்தியான பகவானிடம் நம்மை ஒப்படைத்துவிட்டு கடமையாற்ற வேண்டும்.

'ஈஸ்வர ஸ்வரூபம் இன்னதென்று அறியாததால் அவனை எப்போதும் பார்த்துக் கொண்டிருந்தும் பார்க்காதவர்கள் ஆகிறோம்' இந்த அடிப்படையில்தான் ஆணவம் தோன்றும் போது கண்ணில் கேட்ராக்ட் என்ற லேசான தோல் திரை தோன்றி பார்வையை மறைப்பது போன்று இறைவன் தோற்றத்தை நம்மிடம் இருந்து மறைத்துவிடுகிறது. இதனால் மயக்கம், குழப்பம் தோன்றிவிடுகிறது.

குருவின் உபாசனையின்போது மந்திரமோ, ஜபமோ கூடவே செய்ய வேண்டியதில்லை. அவர் கூறுவதை கவனித்து உணர்ந்தாலே போதுமானது.

பொதுவாக வெளி விவகாரங்கள் நிலையானவையல்ல, அழிந்து விடுவது என்பதை உணர்ந்தால் விரக்தி உண்டாகும்.



இதனால், நமக்கு சுய விசாரணை வேண்டும். இந்த விசாரணை வாயிலாக உலக இன்பங்கள், செல்வம், புகழ் முதலியவற்றில் துச்ச புத்தி ஏற்படும். இப்படி விசாரணையால் விரக்தியடைந்த புத்திக்கு 'நான் யார்? என்னும் விசாரணை வழியே ஞானத் தெளிவு கிடைக்கும்.

**ஸ்தல வரலாறு :** கைலாயத்தில் ஒருநாள் பாலமுருகன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது சிவபெருமானை வழிபட வந்த இந்திராதி தேவர்கள் பாலமுருகனையும் வணங்கிச் சென்றனர். ஆனால் பிரம்மதேவர் மட்டும் குழந்தைதானே என நினைத்து வணங்காமல் சென்றுவிட்டார்.

இதைக்கண்ட பாலமுருகன் பிரம்மாவின் செருக்கை அடக்க நினைத்தார். உடனே வீரபாகுதேவரை அனுப்பி பிரம்மாவை அழைத்துவரச் செய்தார். அவர் வந்ததும் 'பிரம்மதேவரே! பொருளுணர்ந்து சரியான வேதத்தை ஓதுகின்றீரா?' என்றார். 'ஆம்' என்றார் பிரம்மதேவர். அப்படியானால் 'ஓம்' என்ற பிரணவமந்திரத்திற்குப் பொருள் கூறுமாறு கேட்டார்.

மயக்கமும் குழப்பமும் அடைந்த பிரம்ம தேவர் சரியான பொருள்கூற முடியாமல் திகைத்தார். உனக்குப் படைப்புத் தொழிலைச் செய்வதற்குத் தகுதியில்லை என்று நான்கு தலைகளில் கைகளினால் குட்டி சிறையிலடைத்தார். படைப்புத் தொழிலைத் தானே செய்யத் தொடங்கினார்.

இதனை அறிந்த சிவபெருமான் பிரணவத்தின் உட்பொருளைத் தமக்கு உபதேசித்து அருளுமாறு கேட்டுக் கொண்டார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற குருநாதர் ஸ்தானத்திலிருந்து தந்தைக்குப் பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உபதேசம் செய்தார். இவ்வாறு பரம்பொருளாம் பரமேசுவரனுக்கே உபதேசம் செய்யும் பெரும்பேற்றினைப் பெற்றதால் முருகன் சுவாமிநாதன் என்றும் குருநாதர் எனவும் கொண்டாடப் பெறுகின்றார். சுவாமியாகிய சிவபெருமானுக்கு முருகப் பெருமான் நாதனாக – குருவாக இருந்து உபதேசித்த திருத்தலம் சுவாமி மலை என அழைக்கப்படுகிறது.

இறை உணர்வு சிறிது குறைந்தாலும் ஏதாவது ஒரு கெட்டது புகுந்து நம்மைக் குதறி சீரழித்துவிடும். இதனால் கொஞ்சம் விழிப்புணர்ச்சியாக இருந்தால் நமக்கு இறைவன் உதவி செய்து விடுவார். இறைவன் அருகில் இருந்தும் இறைவனை மனதில் நினைக்காவிட்டால் கடலில் பயணிக்கும் மாலுமி தண்ணீர் தாகத்தால் துன்பப்பட்ட கதைதான் ஆகிவிடும். இதைத்தான் சுவாமி மலையில், முருகக்கடவுள் அதன் ஸ்தல வரலாறு வாயிலாக பாடம் புகட்டுகிறார்.

படைத்தல் தொழில் செய்பவரே, குழந்தை என்று முருகப்பெருமானை ஏளனமாக நினைத்துவிட்டார். ‘குழந்தையும் தெய்வமும் ஒன்றே’ என்று நினைக்க மறந்ததற்கு காரணம் அங்கே ஆணவம் வந்து மறைத்துவிட்டது. ஆணவம் வந்ததற்கு காரணம் அங்கே அவர் மனதில் இறை நினைப்பு இல்லாததுதான் என்பதே இந்த நிகழ்ச்சி நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

‘உன்னைவிடச் சிறியவராக இருந்தாலும் அறிவில் சிறந்தவரிடம் கைகட்டி வாய்பொத்தி நல்லதைத் தெரிந்து கொள்’ என்ற பாடமும் இங்கு சிவபெருமான், முருகப்பெருமான் வாயிலாக அறிகிறோம்.

சோம்பல் பல விசயத்தில் நாம் செயலற்றுப் போகக் காரணமாக இருக்கிறது. ஞானிகள் உள்ளே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர். புலன் வழிப்பட்ட ஆசைக்கு இலக்கானவன் மனம் நேர்வழியில் செயல்பட மீண்டும் மனதை இறைவன் பக்கம் திருப்பிவிட வேண்டும். மனம் இறைவன் பக்கம் செல்லும்போது அவர் அன்புடன் குருவாய் வந்து உபதேசம் செய்வார்.

## திருத்தணி

**ஞான விளக்கம்**

‘உலகத்தில் பட்ட உயிர்க்கெல்லாம் ஈசன்
நிலவுபோல் நிற்கும் நிறைந்து’



உலகத்தில் இருக்கின்ற உயிர்கள் எல்லாவற்றிற்கும் இறைவன் அருள் நிலாப்போல் எங்கும் பரவி நின்று இன்ப ஒளியை வழங்கும் என்பது அவ்வைக்குறள்.

பொதுவாக உலகத்தில் வாழும் உயிர்களுக்கெல்லாம் அழியாத பொருளாக இருப்பது இறைவன்தான். இதனால்தான் ‘ஈசன் அடி போற்றி’ என்ற வாசகம் எல்லோருடைய மனதிலும் நிலைத்து நிற்கிறது. ஒவ்வொரு காரியமும் அவருடைய காரணமாக விளங்குகிறது.

‘ஆசை காரணமாக பலனை எதிர்பார்த்துச் செய்பவன் அந்தச் செயலுக்குள்ளேயே கட்டுப்பட்டு விடுகிறான். பலன் தனக்குத் தேவையில்லை என்று செயல்புரிவதை ஒரு யோகமாகக் கொண்டவன் நிலையான புகழை அடைகிறான்’ என்ற கீதை வாசகம் முருகப்பெருமானுக்கே பொருந்தும்.

எதைக் கண்டும் ஆசைப்படாமலும், அதிர்ச்சி யடையாமலும் யாருடைய மனம் பற்றற்ற நிலை கொண்டு திகழ்கிறதோ அந்த மனத்துக்கு உரியோர், இகத்திலேயே பிறப்பு இறப்பு அறுத்தவர்களாகி விடுவார்கள். அத்தகைய சமநோக்குக் கொண்டவர்கள் ஈசுவரனுக்கும் சமானமாகி விடுகிறார்கள். அறிவுள்ளவன் அழியக்கூடிய பொருள்களில் சிந்தனையைச் செலுத்தமாட்டான்.

முருகப் பெருமானின் பணிகள் யாவும் மீட்டிக் கொடுப்பதாகவே இருந்துள்ளது. இதனால் அவரை வணங்கினால் நம்மையும் நல்வழிப்படுத்தி, இந்த மாயா உலகில் வாழும் நம்மை மீட்டிக் காப்பாற்றி பேரின்ப உலகில் நிலையான ஈசனடி சேர்ப்பார்.

**ஸ்தலவரலாறு :** மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள சரவணப் பொய்கை முருகப் பெருமானால் வரவழைக்கப்பட்டதால் குமாரதீர்த்தம் என்று வழங்கப்படுகிறது. மலைப்பாதையில் பிரமதீர்த்தத்தின் அருகில் விநாயகப் பெருமானும், பிரம்மலிங்கமும் இருப்பதைக் காணலாம்.

வைகாசி மாத விசாக நட்சத்திரத்தில் இந்த தீர்த்தத்தில் நீராடி பிரமலிங்கத்தையும், ஆறுமுகக் கடவுளையும் வழிபட்டால் தோஷமும், குஷ்டம் போன்ற பிணிகளும் நீங்கும்.

பூசை காலங்களில் முஸ்லீம் கலைஞர்களும் வாத்தியம் வாசிப்பார்கள். ஒரு சமயம் முஸ்லீம் நவாப் நோய்வாய்பட்டிருந்ததைக் கண்டு அந்நோயை முருகப்பெருமான் நீக்கினாராம். தெற்கே இந்திரன் நீர்ச்சுனை உள்ளது. இங்கு உள்ள நீர் முருகப்பெருமானின் அபிஷேகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

இந்திரன் ஒரு தடவை இந்த சுனையில் கருங்குவளை கொடியை வளர்த்து அதில் பூத்தமலர்களால் முருகப்பெருமானை பூசித்து சங்க நிதி, பதுமநிதி, சிந்தாமணி, காமதேனு போன்ற செல்வங்களைப் பெற்றதாக வரலாறு கூறுகிறது.

**விஷ்ணு தீர்த்தம்**

தாரகாசுரன் என்ற அரக்கன் திருமாலின் சக்ராயுதத்தைக் கவர்ந்து செல்ல, திருமால் முருகப் பெருமானை வழிபட்டு அதை திரும்பப் பெற்றாராம். சூரசம்காரத்தின்போது தாரகாசுரன் திருமாலின் சக்கரத்தை முருகப்பெருமான்மீது ஏவ முருகர் தம்மார்பில் தாங்கிக் கொண்டார். திருமால் தனது சக்கரத்தைப் பெற முருகனை எண்ணி வழிபாடு நடத்தியதால் சக்ராயுதத்தை மீண்டும் கொடுத்தாராம்.

மார்பில் சக்ரம் இருந்த இடம் இன்றும் அடையாளம் காணப்படுகிறது. அபிஷேக காலத்தில் அடையாளத்தைக் காணலாம்.

**நாகதீர்த்தம்**

தேவர்கள் அமுதம் கடைந்த காலம் மேருமலையை மத்தாகவும் வாசுகியைக் கயிறாகவும் பயன்படுத்தினார்கள். வலியைப் போக்க வாசுகி நீராடி முருகனை வழிபட்டு வலி நீங்கப்பெற்றதாக வரலாறு கூறுகிறது. இந்த தீர்த்தமே



நாகதீர்த்தம். இந்திரன் ஐராவதத்தை சீதனப்பொருளாக முருகப்பெருமானிடம் அனுப்பி வைத்தார். அந்த யானை வந்ததால் தேவலோபத்தில் செல்வம் குன்றியது. இதனால் ஐராவதத்தை தேவர்கள் வாழும் கிழக்கு திசை நோக்கி நிற்குமாறு செய்து தேவலோகத்தில் செல்வ வளம் கொழிக்கச் செய்தாராம் முருகப்பெருமான்.

சூரபதுமன் முதலான அசுரர்களுடனும், வள்ளியம்மனின் சுற்றத்தாரான வேடர்களுடனும் போர் செய்து கோபம் தணிந்து முருகப் பெருமான் எழுந்தருளிய இத்தலம் திருத்தணி எனப் பெயர் பெற்றது.

சினம் தணிந்து முருகப்பெருமான் சாந்தத்துடன் அமைதியுடன் எழுந்தருளியிருப்பதால் இங்கு சூரசம்கார விழா நடைபெறுவதில்லை.

**ஞானவிளக்கம் :**

திரு என்ற இறைவன் உலகில் உள்ள அராஜகங்களை அடக்க வீறுகொண்டு எழுந்து அவைகளை அழித்துச் சாம்பலாக்கிவிட்டு திரும்ப சாந்தமாக தணிவதே தணிகை

திரு + தணிகை = திருத்தணிகை

இந்தத் திருத்தலத்தில் பல ஞானிகளும் வந்து வழிபட்டு தியானத்தில் இருந்திருக்கின்றனர். தாரகாசுரன் கவர்ந்து சென்ற சக்ராயுதத்தை மீட்டி திருமாலுக்கே கொடுக்கிறார் என்ற வரலாறு நம்மை சிந்திக்க வைக்கிறது. கெட்டவன் பக்தியால் கிடைக்கப்படும் பொருள் மீண்டும் பறிக்கப்படும் என்பதுதான் இதன் விளக்கம். உயர்ந்த பொருளைப் பெறுவது பெரிதல்ல. அதைப் பாதுகாத்து தக்க வைத்துக் கொள்வதே வெற்றியாகும்.

ஐராவதம் என்ற வெள்ளையானையைப் பரிசுப் பொருளாகப் பெற்று வந்த முருகப்பெருமான் அதனைக் கொடுத்தவர்கள் அதிர்ஷ்டம் குன்றாமலிருக்க அவர்களைப் பார்த்து யானையை நிற்கவைத்து அவர்களை வளப்படுத்தியது அவர் பெருந்தன்மையைக் குறிக்கிறது. ‘நம்பியவர்களைக்

கைவிடமாட்டேன்' 'யாமிருக்கப் பயம் ஏன்' என்ற வாசகங்களை உண்மையாக்குகிறார்.

இதனால் மாசிலாமணியாக விளங்கும் இறைவனை நமது மனதால், உள்ளத்தால் கோயில் கட்டி மானசீகமாக அடிக்கடி பூசை செய்து உயர முயலுவது நமது கடமையல்லவா!

## பழமுதிர்ச்சோலை - 6

**ஞான விளக்கம்**

**நுழைவாயில் :**

'சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையில் ஈசனை
மிக்க மலத்தை விடு'

உறுதியாக உள்ளத்தில் இறைவனைப் பற்றிக்கொள். பிறவிப் பெருந்துயருக்குக் காரணமான மன மாசை நீக்கிக் கொள் என்ற அவ்வையின் சொல் நம் மனதில் கல் எறிந்த மாதிரி இருக்கிறதல்லவா.

ஆத்மாவிற்கு விளக்கம் தேவையென்றால் ஆகாயத்தை அன்னாந்து பாருங்கள். அது எதில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஆகாயம் எதிலும் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை. அதற்கு உருவமும் உண்டு. உருவமும் இல்லை. அதுபோன்ற ஒரு கலவைதான் நமது உடல், உயிர், ஆன்மாவும் ஆகும்.

'ஆகாயம் எப்படி எதிலும் தொடர்பற்று நிற்கிறதோ அதேபோல் ஆத்மாவும் உடலுடன் ஒரு தொடர்பும் இல்லாமல் பற்றற்று நிற்கிறது. சூரியன் உலகத்துக்கு ஒளி தருவதுபோல் ஆத்மா உடலுக்கு ஒளிதருகிறது' என்று கீதை நமக்குப் பாதை காட்டுகிறது.

நமது உடல், மனம், ஆத்மா இவைகள் வெவ்வேறாகும். நீங்கள் ஆத்மாவை அறிவதற்கு தியானம் செய்து பக்குவப்பட்டு ஆத்மாவை அறிய வேண்டும். தனது தத்துவ அறிவாலும், காரிய சிந்தனையாலும் ஆத்மாவை அறிந்து கொள்கின்றனர். ஒரு சிலர் கேள்வி ஞானத்தால் ஆத்மாவை



அறிந்து கொள்கிறார்கள். இப்படிப்படடவர்கள் பிறப்பு, இறப்பு இல்லாது முக்தியை அடைவார்கள்.

இது ஆறாவது படை வீடு – முருகன் தலங்களில் இது சிறப்பு வாய்ந்தது. மலை அடிவாரத்தில் திருமால் கோயிலும், மலை உச்சியில் குமரப்பெருமான் கோயிலும் உள்ளது. நச்சினார்க்கினியர் பழமுதிர்ந்த சோலை என்றும், பழம் உதிர் சோலை என்றும் பொருள் கூறுவார்.

ஒருசமயம் ஔவையார் என்னும் புலவர் இந்தச் சோலை வழியாக நடந்து வந்தார். களைப்பு மிகுதியால் நாவல் மரத்தில் ஒரு சிறுவன் இருப்பதைப்பார்த்து, குழந்தாய் நாவல் பழங்களைப் பறித்துப் போடு என்று கேட்டார் – சிறுவன் நாவல் மரத்தின் கிளையை உலுக்கினான். கீழே விழுந்த பழங்களில் மண் ஒட்டிக் கொள்ளவே எடுத்து ஔவையார் ஊதினார். உடனே சிறுவன் 'பாட்டி பழம் சுடுகின்றனவா – முன்னமே சொல்லியிருந்தால் சுடாத பழங்களைப் போட்டிருப்பனே' என்று கூறினான். தன் சிறுமையை எண்ணி வெட்கப்பட்டு ஏறிட்டுப் பார்த்தார் ஔவையார். சிறுவனைக் காணவில்லை. எதிரே முருகப் பெருமான் காட்சி கொடுத்தருளினார். தம் அறிவை சோதிக்க சிறுவனாக வந்த முருகப் பெருமான் மீது பாக்கள் பாடிப்போற்றினார். பழம் முதிர்சோலை என்பதற்குப் பொருத்தமான வரலாறு இது ஆகும்.

மலையடிவாரத்தில் திருமாலின் திருக்கோயிலுக்கு மூன்று கோபுரங்கள் உள்ளன. இக்கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. வாசல் கதவுகளில் காவல் தெய்வமாகிய கருப்பண்ணசாமி இருப்பதாகக் கருதப்படுகிறது. இந்த சன்னதியில் பொய் சொன்னால் தண்டனை பெறுவர் என்ற நம்பிக்கையில் யாரும் பொய் சொல்வதில்லை. பல வழக்குகளை நீதிமன்றத்துக்குச் செல்லாமலே தீர்த்துக் கொள்கிறார்கள்.

**ஞான விளக்கம் :** முருகப்பெருமானை துதிப்பவர் களுக்கு ஆறாவது அறிவு பளிச்சினு பிரகாசமாகிவிடும். அறிவை அடிப்படையாகக் கொண்டு ஆசையை அறுத்தெறிந் தவர்கள் அனைவரும் நற்கதியை அடைந்திருக்கிறார்கள்.

'உள்ளத்தில் ஒட்டியிருக்கும் கெட்டவைகள் நீ ஊதினாலும் கழுவினாலும் போகாது. என்னை உள்ளத்தில் வைத்துப்பார். நான் உன்னை பரிசுத்தமாக்குவேன்' அதைத்தான் 'பாட்டி நீ கேட்டிருந்தால் உனக்கு சுடாத பழம் போட்டிருப்பேனே' என்று முருகப்பெருமான் கூறுகிறார். காசுபணம் இருந்தாலும் கடைக்குச் சென்று பொருளைக் கேட்டால்தானே வாங்க முடியும்.

## மதுரை

## பாண்டிய நாட்டு மரபுக் கோயில்கள்

'ஈசனடி போற்றி
எந்தையடி போற்றி
மாசப்பிறப்பருக்கும் மன்னனடிபோற்றி

**நுழைவாயில் :**

எதையாவது ஒன்றை மனிதன் உணர்ச்சிப்பூர்வமாக நினைக்கும்போது அவனுக்கு அதில் ஒருவகைப் பற்று ஏற்படுகிறது. அந்தப் பற்று பின்னர் ஆசையாக விஷ்வரூபம் எடுக்கிறது. ஆசை அதிகமாகும்போதும், இயலாமை தடுக்கும்போதும் கோப உணர்ச்சி அதிகமாகிறது.

மனிதனின் மன மயக்கத்திற்கு கோபம் அடிப்படையாக அமைகிறது. மன மயக்கம் ஏற்படும்போது அறிவும், மனமும் தடுமாறுவதால் அறிவு சீர்கேடு அடைகிறது. அறிவு கெட்டவுடன் மனிதன் நோயாலும், சண்டையாலும் அழிவுக்கு உள்ளாகிறான். அறிவுதான் சற்குரு, சற்குருதான் கடவுள் என்ற தத்துவம் புரிந்தவர்கள் உண்மையை அறிந்து கொள்வார்கள். மனதை அறிவுப் பக்கமே வைத்து உணர்வு பெறுவார்கள்.

உண்மையை அறிய முற்படும்போது புலன்களை மனதால் ஆட்டிப் படைக்கவிடாமல் தனக்குத்தானே நல்ல வழியை வகுத்துக் கொண்டு நடப்பவர் நிம்மதியடைகிறார்.



நிம்மதி என்று ஒன்று வந்துவிட்டால் நாம் துன்பங்களிலிருந்து முழு அளவில் விடுதலை பெறுகிறோம். மன அமைதியானது அறிவை ஒரு முகப்படுத்தி விடுகிறது. அறிவு தெளிவு இல்லாதவர்களுக்கு நிலையான சிந்தனை இருக்காது. அத்துடன் அவர்களுக்கு பேரின்ப நிலை சித்திக்காது.

ஐம்புலன்கள் நிலை கெட்டு வெளியில் திரியும்போது மனமும் தறிகெட்டு ஓடித்திரியும். புலன்களை அடக்கி ஆள்பவனுடைய நிலை நிலையானதும், சக்தியுடையதாகவும் ஆகிவிடுகிறது. இதனால் இறைவனை வணங்கி உயர்வு பெறத்தான் ஆங்காங்கே கோயில்கள் உருவாக்கப்பட்டது. இனி நாம் அன்றைய பாண்டிய நாட்டுக்குப் போகலாம்.

**மதுரை :**

மதுரையின் முதல் எழுத்தை எடுத்து விட்டால் 'துரை' என்று வரும். இதன் பொருள் அரசன் என்பதாகும். நடுவில் உள்ள 'து' என்ற எழுத்தை எடுத்துவிட்டால் 'மரை' என்ற மானைக் குறிக்கும். கடைசி எழுத்தான 'ரை'யை எடுத்துவிட்டால் மது என்ற பொருள் வந்துவிடும். ஒன்றில் மூன்று பொருள் கலந்து நிற்கும் மதுரையை சிவபெருமானாகிய சொக்கநாதர், மீனாட்சி மூலமாக ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறார். 'ஞான மது'வை உண்டு உணர்ந்து, மரையாகிய மான் போன்று துரிதமாக ஓடி, துரையாகிய அரசன் சிவபெருமானை அடையும் இடமே மதுரை''

தன்பால் அறியும் தவம் உடையார் நெஞ்சகத்துள்
அன்பாய் இருக்கும் அரண்

தன்னை அறிந்து, 'தான்' அடங்கி இருக்கும் தவப்பயிற்சியும் சித்தியும் அடைந்தவர்கள் உள்ளத்தின் உள்ளே அன்புருவாய் வீற்றிருப்பான் சிவபிரான் என்று அவ்வைக்குறள் சொல்லுகிறது.

'பத்துத் திசையும் பரந்த கடல்உலகும்
ஒத்து எங்கும்நிற்கும் சிவம்''

பத்துத் திசைகள் எனப்படுவது 1. கிழக்கு, 2. மேற்கு, 3. வடக்கு, 4. தெற்கு, 5. வடகிழக்கு, 6. வடமேற்கு, 7. தென்கிழக்கு, 8. தென்மேற்கு, 9. மேல், 10. கீழ் என்பனவாகும்.

இந்தப் பத்து திசைகளிலும் விரிந்துபரந்து கடலால் சூழப்பட்ட இந்த உலகம் எங்கும், எதிலும் நீக்கமற, நிறைந்து கலந்திருக்கும் சிவ பரம்பொருள் என்று அவ்வைக்குறள் கூறுகிறது.

1. வெள்ளி சபை – மதுரை
2. இரத்தின சபை – திருவாலங்காடு
3. பொற்சபை – சிதம்பரம்
4. தாமிர சபை – திருநெல்வேலி
5. சித்திர சபை – திருக்குற்றாலம்

நடராஜப் பெருமான் திருநடனம் செய்து சிறப்புப் பெற்ற ஐந்து தலங்களில் மதுரை வெள்ளி சபையாகும். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த இடம் இது. இங்கு சிவபெருமான் பல திருவிளையாடல்கள் புரிந்துள்ளார். மங்கையர்க்கரசியார், குலச்சிறைநாயனார், நீர்நெடுமாற நாயனார் இருந்த இடம், திருஞானசம்பந்தர் அனல் வாதம், புனல் வாதங்கள் புரிந்து சமணர்களை வெற்றி கொண்ட இடம் மதுரை. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் பாடல் பெற்ற தலம் இது. இங்குள்ள மூலவர் சுயம்பு மூர்த்தியாகும்.

**சுவாமி** : சோமசுந்தரக் கடவுள், சொக்கலிங்க நாதர்
**அம்பாள் :** மீனாட்சியம்மை, அங்கயற்கண்ணி

**சபை :** சபை என்பது நமக்குள்ளே உள்ளத்தில் இருப்பதாகும். இந்த சபை இறைவனுடன் நமது ஆன்மா கலந்து உரையாடவும் தெளிவு பெறவும் நிறுவப்பட்டுள்ளது. தீர்த்தம் என்பது உயர்ந்த நிலையை அடைந்த ஞான



குருமார்களின் வாயிலாகப் பெரும் ஞான அமிர்த மருந்தாகும். இதை பரிபாசையில் மறைத்துக் கூறியுள்ளனர். குருவின் வாயிலாக உண்மையை அறிந்து பின்பற்றி உணரவேண்டும்.

உமாதேவியார் தடாதகைப் பிராட்டியாக பூலோகத்தில் மதுரையில் உதித்து அரசு புரிந்தார். இறைவன் சோமசுந்தரராக வந்து திருமணம் புரிந்து மதுரையை அரசாட்சி புரிந்தார். இந்திரன், வருணன், திருமால் முதலியோர் பூசித்து வணங்கிய இடம் இது.

மதுரைக்குப் பூலோகக் கயிலாயம், கடம்பவனம், கூடல், நான் மாடக் கூடல், சிவராச தானி என்ற பெயர்களும் உண்டு. கோயிலின் பெயர் – ஆலவாய். இது ஊரின் நடுப்பகுதியில் உள்ளது. மிகப்பெரிய கோயில் என்பது மட்டுமல்லாது இதன் உள்ளே ஆயிரம்கால் மண்டபம் தனிச் சிறப்பு வாய்ந்தது.

இக்கோயிலுக்கு வடதிசையில் வடதிரு ஆலவாய்க் கோயில் – சொக்கநாதர் மீனாட்சியம்மை சந்நிதி உள்ளது. இதை ஆதி சொக்கநாதர் கோயில் என்று அழைக்கின்றனர். இத்துடன் மேலமாசிவீதியில் இம்மையில் நன்மை தருவார் அம்பிகை நடுவூர் நாயகி கோயில் உள்ளது.

இரட்டைப் புலவர்கள் இருந்தனர். அதில் ஒருவருக்கு கண் தெரியாது. மற்றொருவருக்கு காது கேட்காது. இருவரும் இணைந்தேதான் எங்கும் செல்வர். அப்பொழுது மதுரை மீனாட்சி சொக்கநாதர் கோயில் உள்ளே உள்ள பொற்றாமரைக் குளத்தின் படியில் இறங்கி கண் தெரியாத புலவர் நிற்கும்போது அவருடைய கலிங்கம் என்ற துண்டு தண்ணீரில் விழுந்து மூழ்கியது. அதைக் காது கேட்காதவர் பார்த்து கலிங்கம் தண்ணீரில் போகுது என்று பதட்டமாகக் கூறினார்.

அதற்குக் கண் தெரியாத புலவர்,

'இக்கலிங்கம் போனாலென்ன ஏகலிங்க
மாமதுரைச் சொக்கலிங்கம் உண்டே துணை'

என்று பாடினார். இப்படிப் பல புலவர்களால் பாடப்பெற்ற தலம் இது.

**ஞான விளக்கம் :**

மதுரை நடுவில் அமைந்த இந்த கோயிலுக்கு நான்கு திசைகளிலும் வாயில்கள் உண்டு. இதைப்போன்று நமது தலைக்கும் நான்கு திசைகள் உள்ளது. நமது வலது காதுப் பக்கம் கிழக்கு, இடது காதுபக்கம் மேற்கு, கொண்டைப் பகுதி தெற்கு, நெற்றிப் பகுதி வடக்காகும்.

இந்த நான்கு வழிகளிலும் நமது புலன்கள் வழியாக கெட்டவைகள் புகுந்து இறைவனை நினைக்க விடாது செய்துவிடாமல் இருப்பதற்காகத்தான் கோயிலில் காவல் தெய்வங்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஒரே இறைவன்தான் என்ற போதிலும் நமது மூலஸ்தானத்தில் இருக்கும் மூலவரிடம் நம் மனம் மாறாது நிலைத்து நிற்கத்தான் பல வடிவில் இறைவன் பாதுகாப்பளிக்கிறார்.

'உள்ளத்தில் என்னை எடுத்த எடுப்பிலே நினைவில் நிறுத்துவது உனக்கு சிரமமாக இருந்தால், என்னைப் பக்தி செய்யப் பயிற்சி செய்து பழகு' என்று பகவான் கூறுகிறார்.

ஒருவரை ஒரு தடவை பார்த்துவிட்டு சில மாதங்கள் சென்று சந்திக்கும்போது கூட நீங்கள் மறந்து விடலாம். ஆனால் அடிக்கடி சந்தித்து அன்புகாட்டுபவரின் முகம் மறக்குமா? உள்ளத்தில் நிலைத்து நின்று விடும். ஏனென்றால் மனதிற்குப் பயிற்சி கிடைத்துவிட்டது. இதைப்போன்று இறைவனை உருவத்தின் வாயிலாக உள்ளத்தில் கொண்டுவந்து மானசீகமாக அடிக்கடி பூஜிப்பதே உண்மையான பூஜையாகும்.

''தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்க வேண்டாம்
அதன் மூலம் மனிதன் தான் விரும்பியபடி ஆகிறான்.''

என்று மகாகவி பாரதியார் கூறியிருக்கிறார். அப்படி தியானம் செய்ய மரபு வழியாக வந்த இந்த கோயில் நமக்கு



உதவுகிறது. பொதுவாக வெளியில் இறைவனைப் புகழ்ந்து பாடும் பாடல்கள் யாவும் உள்ளத்தில் வைத்து இறைவன் பாதத்தில் நின்று செய்ய வேண்டியதாகும். எவ்வளவுக்கு எவ்வளவு தனது மனதை உள் முகமாகத் திருப்பி தனக்குள்ளே இறைவனை தரிசித்து வணங்கி வருகிறார்களோ, அவர்கள் அவ்வளவுக்கு அவ்வளவு இறைவனை எளிதில் அடைவர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

''மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே''

என்று மதுரை சொக்கநாதரைப் போற்றிப் புகழ்ந்து ஆழ்ந்து அநுபவித்து திருஞானசம்பந்தர் பாடுகிறார்.

''நினைப்பும் மறப்பும் இல்லாதவர் நெஞ்சம்
தனைப் பிரியாது சிவம்''

நினைவு மறதி என்ற நிலை கடந்தவர்கள் நெஞ்சில் நீங்காது இருப்பான் சிவபெருமான். நினைப்பும் மறப்பும் இல்லாத நிலையாவது – சிவனையே சிந்தித்திருக்கின்ற வேறு எதுபற்றியும் எண்ணாத யோக நிலையாம் என்று அவ்வைக் குறள் கூறுகிறது.

எல்லாவற்றிற்கும் முதல் துவக்கமாகவும் முடிவுமாகவும் இறைவன் தோன்றி நிற்பது குருமூலமாகத்தான். குரு வழிகாட்டாவிட்டால் ஞான சாம்ராஜ்ஜியத்தில் நுழையவே முடியாது. கோயில்களின் தாத்பரிய உண்மை விளக்கங்கள் ஒருபோதும் புலப்படாது; புரியாது; தெரியாது என்பதுதான் உண்மையிலும் உண்மையாகும்.

தனது சுக துக்கங்களை இழக்காதவன் குருவாக முடியாது. எதிலும் எப்பொழுதும் இறைவனைக் காண்பவரும், அவருடன் ஒன்றரக் கலந்து இருப்பவருமே குரு எனப்படுவார். ஆடை, வேசங்கள் என்ற நிலையைக் கடந்து சராசரி மனிதரூபத்திலும் இருக்கலாம். பிச்சைக்காரர் வடிவிலும்

இருக்கலாம். விதி இருப்பவருக்கு உண்மைக் குருவின் தொடர்பும், நம்பிக்கையும் கிடைக்கும் உங்களுயை காசு பணத்திற்கு ஆசைப்படாதவர்களாகவே இருப்பர்.

''குருவின் அடிபணிந்து கூடுவது அல்லார்க்கு
அருவமாய் நிற்கும் சிவம்.''

குரு என்ற வழிகாட்டியாகிய ஞானாசிரியனை அடைந்து அவர் மூலம் சிவனருள் கூடப் பெறாதவர்களுக்கு சிவனின் காட்சி கிடைப்பது இல்லை.

''தலைப்பட்ட சற்குருவின் சந்நிதியில் அல்லால்
வலைப்பட்ட மான் அதுவே ஆகும்.''

ஞானாசிரியன் வழிகாட்ட, சற்குருவின் அருள் பெற்றவர்கள் அல்லாத மற்றவர்கள் வலையில் சிக்கிய மான் போல உலகில் கிடந்து உழல வேண்டி வரும் என்று அவ்வைக்குறள் கூறுகிறது.

குறிப்பு : இறைவனிடம், 'உள்ளும் புறமும் இறைவா உங்களை அடைய எனக்கு நல்ல வழிகாட்டியைக் காட்டிக் கொடுங்கள்,' என்று வேண்ட வேண்டும். உலகம் தோன்றத் தோன்ற வழிகாட்டிகள் இருந்து கொண்டேதான் இருப்பர். அவர்கள் துணையுடன்தான் உணர்வுப் பாதை தெரியும். கடவுள் இருக்கும் இடத்தைப் புரிய வைப்பர். பிறகு நீங்கள் அங்கும், இங்கும் வெற்றி பெறுவீர்கள்.

## திருவாதவூர்

சுவாமி : திருமறைநாதர்
அம்பாள் : ஆரண வல்லியம்மை

இங்கு மூலவர் சுயம்பு லிங்கமாகும். மதுரை மேலூர் அருகில் உள்ள ஸ்தலமாகும். இங்கு மாணிக்கவாசகர் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு உள்ள ஸ்தல மரம் மகிழமரம். தீர்த்தம் பைரவ, பிரம தீர்த்தங்கள். இங்கு மாணிக்கவாசகருக்குத் தனிக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது.



இங்கு மாணிக்கவாசகருக்கு சிவபெருமான் கால் சிலம்பொலிகாட்டி மகிழச் செய்த ஸ்தலமாகும்.

## திருப்பத்தூர்

சுவாமி : திருத்தணிநாதர்
அம்பாள் : சிவகாமியம்மை

மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இது காரைக்குடி அருகில் உள்ளது. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். அகத்தியர், கௌரி, பிரம்மன், வால்மீகி முனிவர், பிருகு முனிவர், பூமாதேவி, பைரவர், சயந்தன், குஜகேசன் போன்றோர் வழிபட்டு வணங்கி நல்வழிப்பட்ட பாண்டியநாட்டு ஸ்தலம்.

## ஸ்ரீ வில்லிபுத்தூர்

சுவாமி : வைத்தியநாதன்
அம்பாள் : மனோன்மணியம்மை

இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். மதுரையிலிருந்து சுமார் 73 கி.மீ. தூரத்தில் உள்ளது பெரிய கோவில். இங்கு சூரியன், சந்திரன், வழிபட்டு சென்றதாக ஸ்தல வரலாறு கூறுகிறது.

## திருச்சுழி

சுவாமி : பூமிசுவரர்
அம்பாள் : சகாயவல்லி

இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். சுந்தரரால் பாடல் பெற்ற ஸ்தலம். மதுரையிலிருந்து சுமார் 45 கி.மீ. தூரத்தில் உள்ளது. தீர்த்தம் பாவகரி, குண்டாறு ஆகும். பூமாதேவி, பிரம்மன், இந்திரன், திருமால், கௌதமர், அகலிகை, சூரியன், அர்ஜுனன் போன்றோர் வணங்கி வழிபட்ட ஸ்தலம்.

## குன்றக்குடி

சுவாமி : தேனாற்று நாதர்
அம்பாள் : அழகம்மை

சிறிய குன்று மீது உள்ள ஸ்தலம். மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இது மலை அடிவாரத்தில் உள்ளது. மயூரநகரம், அரசவனம், மயில் மலை என பெயர்கள் உண்டு. மலையின் உச்சியில் படியேறிச் சென்றால் சண்முகப்பெருமாள் கோயில் உள்ளது.

## பிள்ளையார்பட்டி

சுவாமி : மருதீசர்
அம்பாள் : வாடாமலர் மங்கை

மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். காரைக்குடி திருப்பத்தூர் அருகில் உள்ளது. இங்கு கற்பக விநாயகர் பிரசித்தி பெற்றதாகும். இதற்கு திருவீங்கைக்குடி, மருதங்குடி, கணேசபுரி, எருக்காட்டூர் என பல பெயர்களும் உண்டு.

## திருக்களம்பூர்

சுவாமி : வைத்தீசுவரர், கதலிவனேசுவரர்
அம்பாள் : காமகோடிஸ்வரி
ஸ்தலமரம் : வாழை (கதலி)

மூலவர் சுயம்பு லிங்க மூர்த்தியாகும். பாண்டிய மன்னரால் கட்டப்பட்ட ஸ்தலம். இந்த கோயில் மதில் உள்ளே 1000 ஆண்டுகளுக்கு முன் உள்ள வாழை காடு அழியாது இன்றும் உள்ளது. தண்ணீர் பாய்ச்சுவதும் கிடையாது. பழங்களை யாரும் எடுத்து உண்பது இல்லை. அபிஷேகம் செய்தபின் இது வழங்கப்படுகிறது. பாண்டிய மன்னர் குதிரையில் செல்லும்போது லிங்கத்தில் குதிரைக் குளம்புபட்டதால் கண் தெரியாது குதிரையும், பாண்டியனும் நிற்க பிறகு இறைவனை வேண்டியபின் கண் தெரிந்ததாக ஸ்தல வரலாறு உள்ளது. சிங்கம்புணரி பொன்னமராவதிக்கு



இடையில் இந்த ஸ்தலம் உள்ளது. நோய் நீங்குதல், ஞானம் பெறுதல் இங்குள்ள சிறப்பம்சமாகும்.

## பிரான்மலை

சுவாமி : திருக்கொடுங்குன்றநாதர்
விசுவநாதர்
மங்கைபாகர்

அம்பாள் : அமிர்தேஸ்வரி
விசாலாட்சியம்மை
தேனம்மை

மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும். இக்கோயில் மலை அடிவாரத்தில் உள்ளது. பாரிவள்ளல் ஆண்ட பறம்பு மலை என வழங்கப்படுவதும் இதுவே. மதுரை, மேலூர், சிங்கம்புணரி மார்க்கத்தில் உள்ளது. இங்கிருந்து திருக்களம்பூர் மிக அருகாமையில் உள்ளது. பெரிய மதில் சுவர் கொண்ட இக்கோயிலில் மூன்று பகுதியாக கோயில்கள் அமைந்துள்ளது. உள்ளே குளம், மலைக்கோவில் எல்லாம் உள்ளது.

**குருதத்துவம்**

எவர் குருவோ அவரே சிவன் எனப்படுகிறார். எவர் சிவனோ அவரே குரு என அழைக்கப்படுகிறார். இவர்களுக்கிடையில் வேறுபாடு கற்பிக்கக் கூடாது.

பிரம்மத்தை தவிர குரு வேறானவர் அல்லர். இது இரண்டு முறையும் சத்தியம்.

ஒருவன் செய்யும் ஜபம், தவம், விரதம், தீர்த்தம், யாகம், தானம் ஆகியவை குரு தத்துவத்தை அறிந்து கொள்ளாவிட்டால் வீணாகிவிடும்.

**– சற்குரு போதம்**

# சேர நாட்டு மரபுக் கோயில்கள்

''நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!''

**நுழைவாயில்**

பேராசை, பயம், கோபம் போன்ற கெட்டவைகள் மனித மனதில் மண்டிக்கிடக்கும் களைகள். இவைகளை இறைவனிடம் வேண்டுவதாலும் குருமார்களின் அருள் உரையாலும், நாம் செய்யும் தொண்டாலும், தியானத்தாலும்தான் போக்க முடியும். தியானம் தொடர்ந்து செய்வது மிகமிக அவசியமாகும்.

கோபம் ஆத்திரமாக உருவெடுத்து விட்டால் அறிவும் கண்ணை மூடிக்கொண்டு விடும். புத்தி செயல்படாது. காரண காரியங்களை ஆராய முயற்சிக்காது. இதனால்தான் தானத்திலே சிறந்தது நிதானம் என்று சொல்லப்படுகிறது.

சிவமாகிய ஆதி முதலானவரை நமது நாட்டில் உயர்த்திக்காட்டவே பல ஊர்களில் ஆங்காங்கே உள்ள மக்கள் பலன்பெற கோயிலாகக் கட்டி பக்தி, ஞானம் வளர்த்தனர். இதில் சேர நாட்டு மன்னர்களும் தனது இறைத்தொண்டை இயன்றவரை செய்துள்ளனர். உள்ளத்தில் கோயில் கட்டி அங்கு இறைவனின் பாதத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

இப்பிறப்பில் புண்ணியஞ் செய்தவர்கள் ஒளியுலகமாகிய புண்ணியலோகஞ் சென்று இன்பத்தை நுகர்ந்து முடிவில் கலப்பு கன்மங்களை அனுபவிக்கப் பூவுலகில் உயர்ந்த பிறப்பாகத் தோன்றுவார்கள்.

சுகதுக்கத்துக்கு ஏற்றவாறு அவரவர் முன் செய்த வினை ஆன்மாக்களுடன் நிழல்போல் தொடர்ந்து வரும். நின்றால் நிற்கும். சென்றால் தொடரும். படுத்தால் படுக்கும். எல்லாம் தானே அறிகின்ற இறைவன் அவரவர் செய்த வினைகளை ஊட்டிவிக்கின்றார்.



புண்ணிய உலகில் ஆன்மாக்கள் பூதசார உடம்புடன் சுகங்களை நுகரும். சுவர்க்கத்தில் பசி தாகம் கிடையாது. கிழத்தனம் இல்லை. வேர்வை, மலம் இல்லை. இளைப்பு இல்லை. இன்பமேதான். இந்த உலகில் ஆன்மா பூதபரிணாம உடம்புடன் சுகதுக்கங்களை மாறி மாறி நுகரும். நரக உலகில் ஆன்மா கொடிய துன்பங்களை நுகரும். ஆனால் தீவினைகள் செய்தோர் இம்மை, மறுமை என்ற இருஉலகங்களிலும் நன்மையடைய மாட்டார்கள்.

ஆனால் தவஞ் செய்தவர்கள் உத்தம கதியை அடைவார்கள். விண்ணில் பறவைகளின் பறக்கும் அடிச்சுவடும், நீரில் மீன்கள் நீந்தும் அடிச்சுவடும் எவ்விதம் காணப்படுவதில்லையோ அதைப்போன்று ஞானிகள் சென்ற வழி காணப்படுவதில்லை.

நிலத்தில் எதனை விதைக்கின்றானோ அதனையே அறுவடை செய்கின்றான். வேம்பை விதைத்தவன் கரும்பை அறுவடை செய்ய மாட்டான். இதைப்போல் பாவம் செய்தவர்கள் துன்பத்தையே அடைவார்கள். பாவத்தைச் செய்யாது புண்ணியத்தைப் பயன்கருதாது செய்தல் வேண்டும் என்பது பீஷ்மர் தருமருக்கு சொன்ன சாந்திபருவ உபதேசமாகும்.

பொதுவாக தியானம், தவம் செய்யத் தேவையானது இறைபக்தியாகும். பக்தி செலுத்த கோயில் என்ற ஒன்று தேவைப்படுவதால்தான் ஆலய வழிபாடு, சிலை வழிபாடு உருவாக்கப்பட்டது. இனிமேல் சேர நாட்டு மரபு கோயில்களைப் பற்றிப் பார்ப்போம். சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்கு ஒரு முறையான ஆட்சி எல்லை இருப்பதில்லை. காரணம் ஒரு அரசன் படை பலம் மிகுந்தவனாக மாறும்போது நாடு மற்றவரின் ஆக்கிரமிப்பில் சென்று விடுவதுதான் காரணமாகும். இதனால் நாம் நிரந்தரமாக உள்ள எல்லையை வைத்தும் சேர, சோழ, பாண்டிய மரபு, பேச்சு வழக்கங்களை வைத்தும் கோயில்களைப் பிரித்துக் காட்டியுள்ளோம்.

**திருநெல்வேலி**

சுவாமி : நெல்லையப்பர்
அம்பாள் : காந்திமதியம்மை

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு பெரிய மண்டபங்கள் உள்ளன. அதில் ஆயிரம்கால் மண்டபமும் உள்ளது. சிந்துபூந்துரை, சொர்ணபுஷ்கரிணி, பெற்றாமரைக்குளம் போன்ற தீர்த்தங்களும் உள்ளது. திருநெல்வேலிக்கு தாருகாவனம், பிரமவிருந்தபுரம், சாலிவேலி, நெல்லூர், சாலிவாடி, சாலிநகர் என்ற பெயர்களும் உண்டு.

இங்கு திசைத் தூண்களும், மூன்று தெப்பக்குளங்களும் இருக்கின்றன. நடராஜரின் ஐந்து சபைகளில் இங்கு தாமிரசபை உள்ளது.

**சங்கரன்கோயில்**

சுவாமி : சங்கரலிங்கம்
அம்பாள் : கோமதியம்மை

இதன் மூலவர் சுயம்பு லிங்கமாகும். இங்கு இந்திரன், அகத்தியர், பைரவர், சூரியன், அக்கினி போன்றவர்கள் வழிபட்ட ஸ்தலமாகும். இங்கு சிவனா, திருமாலா என்ற குழப்பவாதங்களைப் போக்க சங்கரநாராயணராக காட்சி தந்து தெளிவுபடுத்திய ஸ்தலமாகும். புன்னைவனம், நாகவனம், வரராசை, கூழைநகர், இராசை, சீராசை என்ற பல பெயர்களும் இதற்கு உண்டு.

**அம்பாசமுத்திரம்**

சுவாமி : திருகாசிபேசுவரர்
அம்பாள் : மரகதவல்லியம்மை

இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இது தாமிரபரணி ஆற்றின் அருகில் இருக்கும் ஸ்தலமாகும். ஏழு தீர்த்தங்கள் இங்கு உள்ளன. அகத்தியர், காசிபமுனிவர் பூசித்த ஸ்தலமாகும்.

**பிரமதேசம்**

சுவாமி : கைலாசநாதர்
அம்பாள் : பெரியநாயகி

இங்கு மூலவர் சுயம்பு. இதற்கு அயனீச்சரம் என்ற பெயரும் உண்டு. பெரிய கோயில். இதன் அருகில் அம்பாசமுத்திரம் என்ற பெரிய ஊர் உள்ளது.



**பாபநாசம்**

சுவாமி : பாபவிநாசர்
அம்பாள் : லோகநாயகி

இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இங்கு கல்யாண தீர்த்தம் உள்ளது. மாதவ சிவஞான யோகி தோன்றிய இடம். அம்பாசமுத்திரத்திலிருந்து இங்கு செல்லலாம்.

**திருக்குற்றாலம்**

சுவாமி : குற்றாலநாதர், திரிகூடநாதர்
அம்பாள் : குழல் வாய்மொழியம்மை

நடராஜருக்கு ஐந்து சபைகளில் இது சித்திரசபை, அகத்தியர் வழிபட்ட ஸ்தலம். சித்திரசபை இந்தக் கோயிலின் அருகில் கலை நுட்பங்கள் நிறைந்ததாக உள்ளது. இங்கு நடராஜர் தெற்கு நோக்கி இருக்கிறார். சிவமதுகங்கை, வடஅருவி, சித்திரா நதி என்ற மூன்று தீர்த்தங்கள் உள்ளன.

**களக்காடு**

சுவாமி : சத்தியவாகீசர்
அம்பாள் : கோமதியம்பாள்

மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருநெல்வேலி, நாங்குநேரி இதன் வழியாக களக்காடு செல்லவேண்டும். பெரிய ராஜகோபுரம் உள்ளது. ராமர், லட்சுமணர், காசிப முனிவர் பூசித்து வணங்கிய ஸ்தலமாகும். இங்குள்ள தூண்களைத் தட்டிப்பார்த்தால் பல சத்தங்கள் வரும். இங்குள்ள சுவாமிக்கு ஏகப்பட்ட பெயர்களும் உண்டு.

**சுசீந்திரம்**

சுவாமி : தாணுமாலயன்
அம்பாள் : அறம்வளர்த்த நாயகி

மூன்று கடல்கள் ஒன்று சேரும் இடத்தில் இது இருக்கிறது. சிவன், திருமால், அயன் மூவரையும் இங்கு லிங்க அமைப்பில் பார்த்து வணங்கலாம். அனுசுயாவின்

குருபக்தியையும், கற்பின் சிறப்பையும் பரிசோதிக்க வந்த மும்மூர்த்திகளும் குழந்தைகளாக்கப் பெற்று பின்பு மூன்று தேவிமார்களும் கையில் ஏந்திப் போற்றினர். இதனால் மும்மூர்த்திகளும் பேரருள் புரிந்து ஆசீர்வதித்தனர் என்று ஸ்தல வரலாறு உள்ளது. இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். நாகர்கோவிலுக்கு அருகில் உள்ளது.

### திருப்புடைமருதூர்

சுவாமி : நாறும்பூநாதர்

அம்பாள் : கோமதி அம்மை

இதன் மூலவர் சுயம்பு லிங்கமாகும். அம்பாசமுத்திரத்திற்கு அருகில் உள்ளது. சந்திரன், அகத்தியர், உமாதேவி, சரஸ்வதி, திருமகள் ஆகியோர் வழிபட்ட ஸ்தலம்.

**குருதத்துவம்**

ஒருவன் குருவிற்குச் செய்யும் தொண்டால் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு பரிசுத்தமடைகிறான். அவன் தீர்த்தங்களில் நீராடுவதால் ஏற்படும் புண்ணிய பலனை அடைகிறான்.

ஒருவன் தன் குருவைப்பற்றி சிந்திப்பது சிவபெருமானைப் பற்றி சிந்திப்பதற்கு சமமாகும்.

சற்குருவின் வடிவத்தை எப்போதும் தியானம் செய்ய வேண்டும். சற்குருவின் நாமத்தை எப்போதும் ஜபம் செய்ய வேண்டும். குருவின் கட்டளையை எப்போதும் நிறைவேற்ற வேண்டும். சற்குருவைத் தவிர வேறு எதையும் நினைத்து தியானிக்கக் கூடாது.

சற்குருவைப்பற்றி சிந்தனை செய்பவர்களுக்கு உத்தமமான ஆத்ம சுகம் எளிதில் கிடைக்கும். ஆகையால் எல்லா வகையிலும் முயற்சி செய்து சற்குருவை ஆராதனை செய்.

– சற்குரு போதம்



# சோழ நாட்டு மரபுக் கோயில்கள்

''ஓங்கார நாதம் நீயே
உண்மைப் பொருளும் நீயே
எங்கள் அருள் ஜோதியே
எங்கும் ஒளி வீசவே
இந்தப் புவியோர்க்கு அருள் செய்வாயே''

**நுழைவாயில்**

வணங்குதலும், சரணாகதியடைதலும்தான் இறைவனை அடையத் துவங்கும் முதல் முயற்சியாகும். அடிக்கடி இறைவனை நினைப்பது இறைவனை நோக்கிப் பயணம் செய்தலாகும். வணக்கத்தில் பலவகை உண்டு. மனதில் கோயில் அமைத்து அங்கே இறைவனை வணங்கும் முறையைப் பாருங்கள்.

1. **ஏகாங்க நமஸ்காரம் :** இது தலையால் மட்டும் இறைவனை வழிபடுவதாகும்.

2. **துவிதாங்க நமஸ்காரம் :** தலைமேல் வலதுகரத்தை குவித்து வணங்குவதாகும்.

3. **திரிவிதாங்க நமஸ்காரம் :** தலைமேல் இரண்டு கரங்களையும் சேர்த்து குவித்து வணங்குவதாகும்.

4. **பஞ்சாங்க நமஸ்காரம் :** தலை, இரண்டு முழங்கால் இரண்டு உள்ளங்கைகள் ஆகிய ஐந்து உறுப்புக்கள் பூமியில் பட வணங்குவதாகும்.

5. **அஷ்டாங்க நமஸ்காரம் :** இரண்டு கால்கள், இரண்டு கைகள், இரண்டு காதுகள், நெற்றி, மார்பு ஆகிய எட்டு உறுப்புகளும் தரையில் பட வணங்குவதாகும்.

6. **சாஷ்டாங்க நமஸ்காரம் :** நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்குவதாகும். இது முழு சரணாகதியாகும்.

பொதுவாக ஆசை காரணமாக பலனை எதிர்பார்த்து செயல்படுபவன் அந்தச் செயலுக்குள்ளேயே கட்டுப்பட்டு விடுகிறான். பலன் தனக்குத் தேவையில்லை என்று

செயல்புரிவதை ஒரு யோகமாகக் கொண்டவன் நிலையான மனநிம்மதியை அடைகிறான்.

எதைக் கண்டும் ஆசைப்படாமலும், அதிர்ச்சி யடையாமலும் யாருடைய மனம் பற்றற்ற நிலை கொண்டு திகழ்கிறதோ அந்த மனதிற்கு உரியவர் பூமியிலேயே பிறப்பு– இறப்பு அறுத்தவராகிவிடுகிறார். அத்தகைய சமநோக்குக் கொண்டவர்கள் ஈஸ்வரனுக்கு சமானமாகி விடுகிறார்கள்.

ஆசைப்பட வேண்டிய விஷயங்களில் எப்பொழுது ஒருவருக்கு மனதில் வெறுப்பு ஏற்படுகிறதோ அப்பொழுதே அவருக்கு யோகநிலைக்கேற்ப மனப்பக்குவம் ஏற்பட்டுவிட்டதாக உணரவேண்டும்.

உடலால் இல்லாது, அறிவால் அறியப்படுவதுதான் சுகம் என்ற உண்மையை உணர்ந்து கொள்வதும், எந்தவிதத் துக்கம் வந்தாலும் சற்றும் அசையாத மனநிலைதான் பரிபூரண யோகநிலை.

''மனச்சலனமின்றி மனத்தின் அச்சமின்றி மனதை ஒரு நிலைப்படுத்தி பகவானிடம் மட்டுமே லயித்து நிற்பவன் யோகநிலையை அடைந்தவனாகிறான்'' என்று கீதை கூறுகிறது.

வயிறு புடைக்கச் சாப்பிடுவதாலோ, வயிறைக் காலியாக்கி பட்டினி கிடப்பதாலோ, எப்போதும் விழித்திருப்பதாலோ அல்லது உறங்கிக் கொண்டிருப்பதாலோ யோகநிலையை அடைந்துவிட முடியாது.

எல்லா விசயங்களிலும் ஒரு அளவான நிலையைக் கையாளுவதே ஒருவித யோகந்தான். சோழ நாட்டில் ஞான வேட்கையுடையவர்கள் பயன்பெரும் வகையில் ஆங்காங்கே சிவன்கோயில்கள், சிவலிங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால் சுயம்புலிங்கம் என்பது மனித ரூபத்தில் சற்குருவாக வந்து அருள்புரிந்து இறைவனே அங்கு வியாபித்திருப்பதாகும். மின்சார இலாக்கா ஆங்காங்கே ஒரு டிரான்ஸ்பார்மர் வைத்து மக்களுக்கு மின்சாரம் அளிப்பது போல் இறைவன் ஆங்காங்கே தன் சக்தியை நிறுவி மக்களுக்கு ஞானம் வழங்கி வருகிறார்.



### தஞ்சை பெரிய கோயில்

சுவாமி : பிரகதீசுவரர், பெருவுடையார்
அம்பாள் : பெரியநாயகி

தஞ்சை பெரியகோயில் வரலாற்றில் புகழுடன் நிலைத்து நிற்பவை. இதன் மூலஸ்தான கோபுர நிழல் தரையில் விழுவதில்லை. 28 அடி உயரம் கொண்ட மாபெரும் லிங்கம்தான் இங்கு மூலவர். அத்துடன் 1008 லிங்கங்கள் கொண்ட சந்நிதிகள் உள்ளன. இங்குள்ள நந்தி மிகப்பெரியது.

### திருவேதிகுடி

சுவாமி : வேதபுரீசுவரர்
அம்பாள் : மங்கையர்க்கரசி

இது தஞ்சாவூரிலிருந்து சுமார் 7 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடப்பெற்ற ஸ்தலம் இது. மூலவர் சுயம்பு மூர்த்தி.

இங்கு 108 சிவலிங்கங்கள், நடராஜர், தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், சப்தஸ்தானலிங்கங்கள் முதலிய சந்நிதிகள் உள்ளன.

### திருச்சி - திரிசிராமலை

சுவாமி : தாயுமானவர், தாயுமானேசுவரர்
அம்பாள் : மட்டுவார் குழலி

மலைக்கோட்டை என்று அழைக்கப்படும் இக்கோயில் 273 அடி உயரம் கொண்டது. இதன் உச்சியில் பிள்ளையார் கோயில் இருப்பதால் உச்சிப்பிள்ளையார் கோயில் என்ற காரணப்பெயர் வந்தது. இந்த மலையின் நடுவில் தாயுமானவர் சந்நிதியும், அடிவாரத்தில் மாணிக்க விநாயகர் சந்நிதியும் உள்ளது.

ஒரு பெண்ணின் பிரசவ நேரத்தில் தாய்போல் உருவத்தில் வந்து பிரசவம் பார்த்து உதவியதால் சுவாமிக்கு தாயுமானவர் என்ற பெயர் வந்தது. தென் கயிலாயம் என்றும் அழைக்கப்படுகிறது. சடாயு, பிரம்மன், இந்திரன், சப்தரிஷிகள், திரிசரன், சாரமா முனிவர், மௌனகுரு தாயுமானசுவாமிகள் முதலியோர் வழிபட்ட ஸ்தலமாகும்.

**முக்கீச்சரம் (உறையூர்)**

சுவாமி : பஞ்சவர்ணேஸ்வரர்
அம்பாள் : காந்திமதியன்னை

உறையூர் என்று வழங்கப்படும் இவ்வூர் திருச்சியைச் சேர்ந்தது. ஒரு காலத்தில் சோழ மன்னர்களின் தலைநகராக விளங்கியது. முக்கீச்சரம் என்பது கோயிலின் பெயர். திருஞான சம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம்.

உதங்க முனிவருக்கு இறைவன் ஐந்து காலங்களில் ஐந்து வண்ணங்களுடன் காட்சி தந்த ஸ்தலம். கலை சிற்பங்கள் நிறைந்த கோயில்.

**திருவாரூர்**

சுவாமி : வான்மிகநாதர்
அம்பாள் : கமலாம்பிகை

திருவாரூருக்கு கமலாயபுரம், முசுகுந்தபுரம், சக்திபுரம் போன்ற 14 பெயர்கள் உண்டு. இறைவன் சுந்தரருக்காகப் பரவையார் மனைக்குத் தூது சென்ற தலம் – திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இக்கோயிலுக்குள் பல சன்னதிகள் உள்ளன.

**தேஹூர்**

சுவாமி : தேவபுரீசுவரர் – கதலிவனம்
அம்பாள் : தேன்மொழியம்மை

தேவர், இந்திரன், குபேரன், வியாழபகவான், சூரியன் முதலானோர் வழிபட்ட இடம். குபேரன் சங்கநிதி, பதுமநிதி பெற்ற தலம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம். மூலவர் சுயம்பு மூர்த்தி.

**திருத்துறைப்பூண்டி**

சுவாமி : பவ ஔஷதீஸ்வரர்
அம்பாள் : பிருகந் நாயகி

இங்கு பல சன்னதிகள் உண்டு. வில்வவனம் என்று பெயர் பெறும். மூலவர் – சுயம்பு மூர்த்தி



**நாகப்பட்டினம்**

சுவாமி : காயா ரோகன நாதர்
அம்பாள் : நீலாயதாட்சி

தசரதன் சனிப் பிரதிஷ்டை செய்து வழிபட்ட இடம். பல சன்னதிகள் உள்ளன. மூவராலும் பாடப்பெற்ற தலம். மூலவர்–சுயம்பு மூர்த்தி

**திருவையாறு**

சுவாமி : பஞ்சநாதேசுவரர்
அம்பாள் : அறம் வளர்த்த நாயகி

சுந்தரருக்குக் காவிரி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி வழியுண்டாக்கித் தரிசிக்கச் செய்து அற்புதம் நிகழ்த்திய இடம். மாணிக்கவாசகரால் பாடப்பெற்றது. மூலவர் சுயம்பு மூர்த்தி.

**திருவீழிமிழலை**

சுவாமி : வீழிநாதேசுவரர்
அம்பாள் : சுந்தரகுஜாம்பிகை

திருஞானசம்பந்தருக்கு இறைவன் தாம் சீர்காழித் தோற்றத்தை விண்ணிலிருந்து விமானத்தில் காட்டிய தலம். திருமால் தேவலோகத்திலிருந்து விமானத்தை தருவித்து பூஜித்த தலம். கார்தியாயன முனிவரின் திருப்புதல்வியாகத் தோன்றிய உமையம்மையை மணம் கொண்ட தலம். மூலவர் சுயம்புமூர்த்தி.

**கும்பகோணம்**

சுவாமி : கும்பேசுவரர்
அம்பாள் : மங்களாம்பிகை

இத்தலம் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் இருவராலும் பாடல் பெற்றது. இதில் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். சுவாமி கிழக்கு நோக்கி சந்நிதியில் விளங்குகிறார். அம்பாள் சந்நிதி தனியாகக் கிழக்கு நோக்கி உள்ளது. மற்றும் வில்வம் சிவலிங்கமான தலம் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது. இப்படி பல கோயில்கள் இங்கு உள்ளது.

**சாக்கோட்டை**

சுவாமி : அமிர்தகலசநாதர்

அம்பாள் : அமிர்தவல்லி

திருக்கலயநல்லூர் இப்பொழுது சாக்கோட்டை என்று மறுவி வழங்கப்படுகிறது. மூலவர் சுயம்புமூர்த்தி, கோட்டைச் சிவன் கோயில் எனப்படும். பிரம்மன் சிவபெருமானைப் பூஜித்து பேறு பெற்ற தலம். தட்சிணாமூர்த்தி தனித்தன்மையுடைய மூர்த்தியாகும். கும்பகோணம் அருகில் உள்ளது.

**திருச்சிவபுரம்**

சுவாமி : சிவபுரநாதர்

அம்பாள் : சிங்காரவல்லி

இங்கிருக்கும் நடராஜர் மூர்த்தம் மிகச் சிறப்புடையது. சுவாமி கிழக்கு திசை நோக்கியும், அம்பாள் தெற்கு திசை பார்த்தும் இருக்கிறார்கள். திருமால் வெள்ளைப் பன்றி வடிவில் வந்து பூஜித்துப் பேறு பெற்ற ஸ்தலம். குபேரபுரம், பூகயிலாயம் என்ற பெயர்களும் இதற்கு உண்டு. கும்பகோணம் அருகில் உள்ளது.

**திருக்கருக்குடி**

சுவாமி : கருக்குடி நாதர், சற்குணலிங்கேசுவரர்

அம்பாள் : கல்யாண நாயகி

சிறிய கோயில். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற சுயம்பு மூர்த்தி ஸ்தலம். கும்பகோணத்தின் அருகில் உள்ளது.

**திருப்பந்துரை**

சுவாமி : சிவாணந்தேசுவரர்

அம்பாள் : மங்களாம்பிகை

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற சுயம்பு மூர்த்தி ஸ்தலம். நாச்சியார் கோயிலுக்கு அருகாமையில் சுமார் 2½ கி.மீ. தூரத்தில் உள்ளது.



**குடவாயில்**

சுவாமி : கோணேசுவரர்

அம்பாள் : பெரியநாயகி

கும்பகோணத்திலிருந்து சுமார் 14 கி.மீ. தூரத்தில் உள்ளது. இங்கு அமிர்த தீர்த்தம் உள்ளது. திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்புமூர்த்தியாகும். இங்கு வாழைதான் ஸ்தல மரமாகும்.

**திரு இன்னம்பர்**

சுவாமி : சுயம்பு மூர்த்தி, தான்தோன்றீசர்

அம்பாள் : சுகந்த குந்தளாம்பிகை

இந்த ஸ்தலம் கும்பகோணத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தூரத்தில் உள்ளது. அகத்திய முனிவர் வழிபட்டு இலக்கண உபதேசம் பெற்ற ஸ்தலம். அத்துடன் ஐராவதம் பூசித்து வீடுபேறு பெற்ற ஸ்தலம். நடராஜர் சந்நிதியும் உள்ளது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவராலும் பாடல் பெற்ற ஸ்தலம்.

**திருப்புறம்பயம்**

சுவாமி : சாட்சிநாதேசுவரர்

அம்பாள் : கரும்பன்ன சொல்லி

இந்த ஸ்தலத்தின் தீர்த்தம் பிரம்ம தீர்த்தம். அகத்தியர், விசுவாமித்திரர், சனகர், சனந்தனர், புலஸ்தியர் ஆகியோர் வணங்கி அருள்பெற்ற இடம். திருஞானசம்பந்தர் வணிகப் பெண்ணொருத்திக்கு திருமணம் செய்து வைக்கும்போது சிவலிங்கம், வன்னிமரம், கிணறு சாட்சி சொன்ன அற்புதம் இங்கு நடந்தது. இந்த ஸ்தலம் கும்பகோணம் அருகில் வடமேற்காக 10 கி.மீ. தூரத்தில் உள்ளது. இதன் மூலவர் சுயம்புமூர்த்தியாகும்.

### திருவலஞ்சுரி

சுவாமி : வலஞ்சுழிநாதர்
அம்பாள் : பெரிய நாயகி

கடல்நுரைகொண்டு இந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரம்மன், திருமால், உமாதேவியார், ஆதிசேஷன், ஏரண்டமுனிவர் வழிபட்டு உயர்நிலை பெற்ற ஸ்தலம். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். கும்பகோணத்திலிருந்து 3½ கி.மீ. தூரத்தில் உள்ளது.

### பட்டீச்சரம்

சுவாமி : பட்டீச்சுவரர்
அம்பாள் : ஞானாம்பிகை

மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். ஞான தீர்த்தம் கொண்ட ஸ்தலம். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றது. காமதேனுவின் புதல்வி பட்டி வணங்கி அருள் பெற்ற ஸ்தலம். இதில் முக்கியமாக விசுவாமித்திரர் தவம் செய்து பிரம்மரிஷி பட்டம் பெற்ற ஸ்தலம். ராமர் பூஜித்த ஸ்தலமானதால் இங்கு ராமலிங்க கோடி தீர்த்தம் தனியாக உள்ளது. திருஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தர் அளித்த ஸ்தலம்.

### திருப்பாலைத்துறை (பாபநாசம்)

சுவாமி : பாலைவனேசுவரர்
அம்பாள் : தவளாம்பிகை

சுவாமி இங்கு சுயம்பு மூர்த்தியாக இருக்கிறார். வசிஷ்டர், திருமால், பிரம்மன் தேவர்கள் வழிபட்ட ஸ்தலம். தாருகா வனத்து முனிவர்கள் அனுப்பிய புலியின் தோலை உரித்து ஈசன் அணிந்து கொண்ட ஸ்தலம்.

### திருவைகாவூர்

சுவாமி : வில்வனநாதர்
அம்பாள் : வனைக்கை நாயகி

கும்பகோணத்திலிருந்து இங்கு செல்லலாம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். சுயம்பு மூர்த்தி, சுவாமி கிழக்கே பார்த்து இருக்கிறார். வேடன் ஒருவன் வேட்டையாடச் சென்றபோது புலிக்கு அஞ்சி வில்வ மரத்திலேறி அமர்ந்து கொண்டு இறைவனை நினைத்து வில்வ



இலையைப் பறித்துப் போட்டபின் இறைவன் சாட்சியளித்து வேடனுக்கு அருளிய ஸ்தலம்.

### திருமறைக்காடு (வேதாரண்யம்)

சுவாமி : மறைக் காட்டீசர், வேதாரண்யேஸ்வரர்
அம்பாள் : விணாவாதவிதூஷணி

இங்குள்ள தீர்த்தத்திற்கு வேத தீர்த்தம் என்று பெயர். இதன் தலமரம் வன்னி, புன்னை மரமாகும். விளக்கை நன்கு எரிய தூண்டக் காரணமாக இருந்த எலியை மறுமையில் மாவலி சக்கரவர்த்தியாகப் பிறக்குமாறு வரம் அளித்த ஸ்தலம். அகத்தியர், வசிஷ்டர், கௌதமர், விசுவாமித்திரர், நாரதர் வழிபட்ட ஸ்தலமாகும்.

அடைத்திருந்த கோயிலை திருநாவுக்கரசர் சுவாமிகள் திறக்கச் செய்தும், பிறகு திறந்த கதவை திருஞானசம்பந்தர் மூடச்செய்தும் பாடி, அற்புதம் செய்த ஸ்தலம் இது.

### திருக்கோடி (கோடிக்கரை)

சுவாமி : அமிர்தகடேசுவரர்
அம்பாள் : மையார்தடங்கண்ணி

மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இங்கு இருக்கும் தீர்த்தத்திற்கு அமிர்தத்தீர்த்தம் என்ற பெயராகும். திருப்பாற் கடலிலிருந்து தோன்றிய அமிர்தத்தை வாயுதேவன் கொண்டு செல்லும்போது சிதறி கீழே விழ, அதுவே சிவலிங்கமாயிற்று என்பது வரலாறு,

### திங்களூர்

சுவாமி : கயிலாசநாதர்
அம்பாள் : பெரியநாயகி

இத்தலம் திருநாவுக்கரசரால் பாடப்பெற்றது. அப்பூதி அடிகளின் புதல்வன் பாம்பு கடித்து இறக்க, திருநாவுக்கரசர் திருப்பதிகம்பாடி உயிர் பெறச் செய்த ஸ்தலம். இங்கு திருநாவுக்கரசர் பெயரில் தண்ணீர் பந்தல் வைத்து அப்பூதி அடிகள் நடத்தினார். சூரியன் சந்திரனின் கதிர்கள் படும்

சிறப்புடைய ஸ்தலம். சந்திரன் வழிபட்டுச் சென்ற ஸ்தலம் என்பது வரலாறாகும். திருவையாற்றுக்கு அருகில் உள்ளது இந்த ஸ்தலம்.

### திருச்சோற்றுத்துறை

சுவாமி : ஒதனவனேசுவரர் (மூலவர் சுயம்பு மூர்த்தி)
அம்பாள் : அன்னபூரணி

'அண்ட முதல்வன் அமலன் இடமாம் திருச்சோற்றுத் துறை' என்று சுந்தரர் தேவாரத்தில் பாடப்பட்டுள்ளது. பகவான் அடியவர்களின் பசிப்பிணியைத் தீர்த்த ஸ்தலம். அத்துடன் இந்திரன், கௌதம முனிவர் வழிபட்ட இடம். திருவையாற்றை மையமாகக் கொண்ட ஏழு தலங்களுள் ஒன்று.

### திருப்பழனம்

சுவாமி : ஆபத் சகாயர்
அம்பாள் : பெரிய நாயகி

திருவையாற்றுக்கு அருகில் உள்ளது. தலமரம் வாழை. இதன் தீர்த்தம் மங்கள தீர்த்தமாகும். அரக்கனிடமிருந்து சிறுவனைக் காப்பாற்றியதால் 'ஆபத்சகாயர்' என்று பெயர் வந்தது. சந்திரன் வழிபட்ட இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

### திருநெய்த்தானம்

சுவாமி : நெய்யாடியப்பர்
அம்பாள் : பாலாம்பிகை

திருவையாற்றில் சேர்ந்த தலங்களுள் ஒன்று. தில்லை ஸ்தானம் என்று வழங்கப்படும். திருநெய்த் தானத்தை பற்றி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடியிருக்கிறார்கள். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். கௌதமர் வழிபட்ட ஸ்தலம்.

### பெரும்புலியூர்

சுவாமி : வியாக்கிரபுரீசுவரர்
அம்பாள் : சௌந்தர நாயகி



திருவையாற்றுக்கு அருகில் உள்ளது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்புவாகும். வியாக்கிரபாதர் பூசித்த ஸ்தலமாகும்.

### மேலைத் திருக்காட்டுப்பள்ளி

சுவாமி : தீயாடியப்பர்
அம்பாள் : அழகம்மை

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இது திருவையாற்றுக்கு மேற்கே 16 கி.மீ. தூரத்தில் உள்ளது. இதன் தலமரம் வள்ளி. தீர்த்தம் அக்கினி தீர்த்தமாகும். பகீரதன், அக்கினி, உரையூர் சோழனின் மனைவி வழிபட்ட இடம்.

### திரு ஆலம்பொழில்

சுவாமி : ஆத்மநாதேசுவரர்
அம்பாள் : ஞானாம்பிகை

மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருவையாற்றுக்கு அருகில் உள்ளது. திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும்.

### திருப்பூந்துருத்தி

சுவாமி : புஷ்பவனேசுவரர்
அம்பாள் : சௌந்தர நாயகியம்மை

இது திருவையாற்றைச் சேர்ந்த ஏழு ஸ்தலங்களில் ஒன்றாகும். திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும். இதன் தீர்த்தம் சூரிய தீர்த்தமாகும். காசிபர் வழிபட்ட ஸ்தலமாகும். திருஞானசம்பந்தர் ஏறிவந்த பல்லக்கை அப்பர் சுவாமிகள் தோளிற் சுமந்த ஸ்தலமாகும்.

### திருக்கண்டியூர்

சுவாமி : வீரட்டேசுவரர்
அம்பாள் : மங்கள நாயகி

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும். இங்குள்ள மூலவர் சுயம்பு லிங்கமாகும். தீர்த்தம் நந்தி தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், தட்ச தீர்த்தம் என்ற

மூன்று தீர்த்தம் உள்ளது. பஞ்சபூதலிங்கம் உள்ளது. திருவையாற்றுக்கு அருகில் உள்ளது. பிரம்மனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்து நான்முகனாக மாற்றிய ஸ்தலம் இது.

**திருக்கானூர்**

சுவாமி : செம்மேனி நாதர்
அம்பாள் : சிவலோக நாயகி

மூலவர் சுயம்பு மூர்த்தி. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். அனல் பிழம்பாக அம்பிகைக்குக் காட்சி தந்த ஸ்தலமாகும். இங்குள்ள தீர்த்தத்திற்கு வேதீர்த்தம் என்று பெயர்.

**தென்குடித்திட்டை**

சுவாமி : வசிட்டேசுவரர்
அம்பாள் : உலக நாயகி

இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும். இதன் தீர்த்தம் சூல தீர்த்தமாகும். இங்கு வசீஷ்டர், கௌதமர், ஆதிசேடன் ஆகியோர் பூஜித்துப் பேறு பெற்ற ஸ்தலமாகும். தஞ்சாவூரிலிருந்து வடக்கே உள்ளது.

**பரிதிநியமம்**

சுவாமி : பாஸ்கரரேசுவரர்
அம்பாள் : மங்களாம்பிகை

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்த நாடு அருகில் உள்ளது. திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். சூரியன் வழிபட்டு தனது பிணியை நீக்கிக்கொண்ட ஸ்தலம். இதன் தீர்த்தம் சந்திர, சூரிய தீர்த்தமாகும். நடராஜர் சபை இங்கு உள்ளது.

**அரித்துவார மங்கலம்**

சுவாமி : பாதாளேசுவரர்
அம்பாள் : அலங்காரவல்லி



திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலம். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். தஞ்சாவூரின் அருகில் உள்ளது. இதன் தீர்த்தம் பிரம்மதீர்த்தமாகும். இங்கு காசிவிசுவநாதர், லிங்கோற்பவர் முதலிய சந்நிதிகள் உள்ளன.

**அவளிவள்நல்லூர்**

சுவாமி : சாட்சிநாதர்
அம்பாள் : சௌந்தரநாயகி

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவரால் பாடல் பெற்ற ஸ்தலம். இங்குள்ள தீர்த்தம் சந்திரதீர்த்தமாகும். தஞ்சாவூரிலிருந்து மன்னார்குடி சாலையில் இக்கோயில் உள்ளது.

இத்தலத்தில் பூஜித்து வணங்கி வந்த ஆதி சைவர் தனது மூத்த புதல்வியை ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்தார். மருமகன் காசியாத்திரை சென்று வருவதற்குள் மனைவிக்கு அம்மை பார்த்து கண் கெட்டு முக அமைப்பு மாறி விட்டதால் இவள் எனது மனைவி இல்லை என்று இரண்டாவது மகளைத் தன் மனைவி என்று ஆதிசைவரிடம் வாக்குவாதம் செய்தான். அவர் இறைவனிடம் முறையிட்டு அழவேண்டியதாயிற்று. அந்த நேரத்தில் இறைவன் தோன்றி அவள் இவள் தான் என்று காட்ட அவளுடைய கண்தெரிந்து தோற்றமும் பழைய மாதிரி மாறிவிட்டது. இதனால் அவளிவள்நல்லூர் என்று பெயர் வந்தது.

**உய்யக்கொண்டான் திருமலை**

சுவாமி : உச்சிநாதர், கற்பகநாதர்
அம்பாள் : அஞ்சனாட்சி

சுந்தரர் பாடல் பெற்ற ஸ்தலம். திருச்சியின் அருகில் உள்ளது. கோவில் மலை மீது உள்ளது. இங்கு எண்கோண தீர்த்தம், நற்கோண தீர்த்தம் என்று இருக்கிறது. மார்க்கண்டேயர், அருணகிரிநாதர் வழிபட்ட ஸ்தலம்.

### திருப்பராய்த்துறை

சுவாமி : தாருகாவனேசுவரர்
அம்பாள் : பசும்பொன் மயிலாம்பாள்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவராலும் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்பு மூர்த்தி, திருச்சி கரூர் செல்லும் வழியில் உள்ளது. இதன் தீர்த்தம் காவிரித்தீர்த்தமாகும். இறைவன் பிட்சாடணராகச் சென்று தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அடக்கிய ஸ்தலமாகும். குபேரன், இந்திரன், சப்தரிஷிகள் வழிபட்ட ஸ்தலம்.

### திருஆனைக்காவல்

இது திருச்சியிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ளது. இதைப் பற்றி பஞ்சபூத ஆலயத்தில் ''திருஆனைக்காவல் – நீர்'' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கவும்.

### திருப்பாற்றுறை

சுவாமி : ஆதிமூலேசுவரர்
அம்பாள் : மேகலாம்பிகை

திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற ஸ்தலம். இதன் மூலவர் சுயம்புமூர்த்தி. திருச்சியிலிருந்து 13 கி.மீ. தூரம் உள்ளது. இதன் தீர்த்தம் கொள்ளிடம். மார்க்கண்டேயர், சூரியன் வழிபட்ட இடமாகும்.

### திருநெடுங்களம்

சுவாமி : நெடுங்களநாதர்
அம்பாள் : மங்களநாயகி

இதன் மூலவர் சுயம்பு, அகத்தியர் வழிபட்ட தலம். ஆடி மாதம் காலை நேரத்தில் சூரிய கதிர்கள் சுவாமி மீது பதியும் காட்சியினைக் காணலாம். இதன் தீர்த்தம் அகத்திய தீர்த்தம், சுந்தர தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. திருஞான சம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம்.

### திருவெறும்பூர்

சுவாமி : எறும்பீசர், மதுவனேஸ்வரர்
அம்பாள் : சௌந்தரநாயகி



இக்கோயில் திருநாவுக்கரசரால் பாடப்பெற்றது. மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். மலைமேல் உள்ள கோயில். திருச்சிக்கு அருகாமையில் உள்ளது. இதன் தீர்த்தம் குமார, பிரம்ம, பதும தீர்த்தங்களாகும். இதற்கு தென்கயிலாயம், பிரமபுரம், மதுவனபுரம் என்ற பெயர்களும் உண்டு.

### திருமாந்துரை

சுவாமி : ஆம்ரவனேஸ்வரர், சுத்தரக்னேஸ்வரர்
அம்பாள் : அழகம்மை, பாலாம்பிகை

மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இது திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும். திருச்சி லால்குடி அருகில் உள்ளது. இதன் தீர்த்தம் காயத்திரி நதியாகும். சுவாமி கிழக்கு நோக்கியும், அம்பாள் தெற்கு நோக்கியும் அருள்புரிகிறார்கள். ஆம்ரவனம், பிரமானந்தபுரம் என்ற பெயர்களும் உண்டு.

### திருத்தவத்துறை (லால்குடி)

சுவாமி : சப்தரிஷ்வரர்
அம்பாள் : பெருந்திருப் பிராட்டியார்

இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருச்சி அருகில் உள்ள லால்குடியில் இத்தலம் உள்ளது. முருகப் பெருமானால் சாபம் பெற்ற அத்திரி, பிருகு, புலத்தியர், வசிஷ்டர், கௌதமர், ஆங்கீரசு, மரீசி போன்றவர்கள் வழிபட்டு பூஜித்த ஸ்தலமாகும். இதன் தீர்த்தம் சிவகங்கை, சக்கர தீர்த்தமாகும்.

### திருமழபாடி

சுவாமி : வச்சிரதம்பேஸ்வரர், வைத்தியநாதர்
அம்பாள் : சுடந்தராம்பிகை

சுந்தரர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும். இலக்குமி தீர்த்தம் உள்ளது. சுவாமி கிழக்கு நோக்கியும், அம்பாள் தெற்கு நோக்கியும் அருள்புரிகிறார்கள். இந்திரன் வழிபாடு செய்த ஸ்தலம். நந்திதேவர் திருமணம் செய்து கொண்ட ஸ்தலம். நடராஜர் சபை உள்ளது.

### திருப்பழுவூர் - கீழைப்பழுவூர்

சுவாமி : வடமூலேசுவரர்
அம்பாள் : அருந்தவநாயகி

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இது அரியலூருக்கு 12 கி.மீ. தூரத்தில் உள்ளது. பரசுராமர் தன் தாயைக் கொன்ற பழி தீரும் வகையில் தவம் செய்து வழிபட்ட ஸ்தலம். அத்துடன் திருமால், பிரம்மன், இந்திரன், பஞ்சபாண்டவர், அகத்தியர், வசிஷ்டர், வியாசர் வழிபட்ட ஸ்தலம்.

### திருப்பைஞ்ஞீலி

சுவாமி : நீலகண்டேசுவரர்
அம்பாள் : விசாலாட்சியம்மை

இதன் மூலவர் சுயம்பு மூர்த்தி. திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு அப்பர் தீர்த்தம் உள்ளது. திருநாவுக்கரசருக்கு பொதி சோறு அளித்துப் பசியைப் போக்கிய ஸ்தலம். மணச்சநல்லூருக்கு வடக்கில் 10 கி.மீ. தூரத்தில் உள்ளது. உமாதேவி வழிபட்ட ஸ்தலம். கிழக்கு நோக்கிய கோயில்.

### திருசாவி

சுவாமி : சமீவனேஸ்வரர்
அம்பாள் : பாலாம்பிகை

திருஞானசம்பந்தர், சுந்தரர் இவர்களால் பாடல் பெற்ற ஸ்தலம். கொல்லி மழவன் என்னும் மன்னன் மகளின் கொடிய நோயை திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடி தீர்த்து அருள் செய்த ஸ்தலமாகும். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இங்கு சிலம்பாறு தீர்த்தம் உள்ளது. சுவாமி கிழக்கு நோக்கியும் அம்பாள் மேற்கு நோக்கியும் அருள் செய்கிறார்கள். அகத்திய முனிவர், கொல்லி மழவன் வழிபட்டு நற்பேறு பெற்ற ஸ்தலம்.

### அன்பில்

சுவாமி : சத்தியவாகீஸ்வரர்
அம்பாள் : சௌந்தரநாயகி



இதில் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். லால்குடிக்கு அருகில் உள்ளது. சந்திர தீர்த்தம், காயத்திரி தீர்த்தம் உள்ளது. குளத்தில் ஐந்து கிணறுகள் உள்ளது.

### திருவிங்கநாதமலை

சுவாமி : மரகதநாதர், மரகதாசலேசுவரர் (மரகதலிங்கம்)
அம்பாள் : மரகதவல்லியம்மை

இங்கு அகத்தியர் ஈ வடிவத்தில் வந்து இறைவனை பார்த்து வணங்கிய ஸ்தலம். இங்கு அமிர்ததீர்த்தம் உள்ளது. இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாவார். முசிறிக்கு வடக்கே சுமார் 8 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம்.

### குளித்தலை

சுவாமி : கடம்பவனேஸ்வரர்
அம்பாள் : பாலகுஜாம்பாள்

திருநாவுக்கரசர் பாடல் பெற்ற ஸ்தலம். இதன் மூலவர் சுயம்பு. இதற்கு கடம்பந்துறை கடம்பவனம் என்ற பெயர்களும் உண்டு. திருச்சியிலிருந்து 33 கி.மீ. தூரத்தில் உள்ளது. கண்ணுவ முனிவர், பிரம்மன், திருமால், முருகப்பெருமான் அகத்தியர் வழிபட்ட ஸ்தலமாகும்.

### ரத்தினகிரி

சுவாமி : ரத்தின கிரீசர்
அம்பாள் : சுரும்பார் குழலி

இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். கோயில் மலையின் மீது உள்ளது. திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். குளித்தலைக்கு 10 கி.மீ. அருகில் உள்ளது. இந்திரன், சூரியன், உரோமேசர், துர்க்கை, அகத்தியர் ஆகியோர் வழிபட்ட ஸ்தலம்.

### திருவிசயமங்கை

சுவாமி : விஜய நாதர்

அம்பாள் : மங்கைநாயகி, மங்களாம்பிகை

திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடல் பெற்ற ஸ்தலமாகும். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். அர்ச்சுனதீர்த்தம், மண்ணியாறு, கொள்ளிடத் தீர்த்தம் உள்ளது. அர்ச்சுனன் வணங்கி பூஜித்து உயர்வு பெற்ற ஸ்தலம்.

### திருக்களாவூர்

சுவாமி : கர்ப்ப புரிசுவரர்

அம்பாள் : கருக்காத்த நாயகி

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவராலும் பாடல் பெற்ற ஸ்தலம். இதில் மூலவர் சுயம்புமூர்த்தியாகும். முல்லைவனம், மாதவிவனம், கர்ப்பபுரி என்ற பெயர்களும் உண்டு. விருத்த, பிரம, சத்தியகூப தீர்த்தங்கள் இருக்கின்றன. ஆதரவற்ற அனாதைப் பெண்ணிற்கு அம்பிகை வைத்தியம் பார்த்து அவளின் கருவைக் காத்தமையால் கருகாவூர் எனப் பெயர் பெற்றது. நித்துவ முனிவர் பூஜித்தலிங்கம், நடராஜசபை உள்ளது.

### திருநல்லூர்

சுவாமி : பஞ்சவர்ணேசுவரர்

அம்பாள் : கல்யாணசுந்தரி

இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். சப்த சாகரதீர்த்தம் இங்கு உள்ளது. அமல் நீதி நாயனால் முக்தி பெற்ற ஸ்தலம். பிருங்கி முனிவர் வண்டு உருவம் கொண்டு பூஜித்து வழிபட்ட ஸ்தலம். ஆதிசேடன் திருக்கைலாயத்தை தன் ஆயிரம் தலைகளாலும் இறுக மூடிக் கொண்டார். இதைக் கண்டு தேவர்கள் பயந்தனர். வாயுதேவன் பெருங்காற்றை வீசினார். பிடிதளர்ந்ததனால் இரு சிகரங்கள் பெயர்ந்து கொண்டு தென்திசையில் வீழ்ந்ததால் இத்தலம் உருவானது என்பது வரலாறு.



### ஆவூர் (ஆவூர்ப்பசுபதீச்சரம்)

சுவாமி : பசுபதீசுவரர்

அம்பாள் : மங்களாம்பிகை

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். இதில் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இதில் பிரம்மதீர்த்தம், காமதேனு தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் உள்ளது. இங்கு சங்ககாலத்துப் புலவர் ஆவூர் கிழார், மூலங்கிழார் வாழ்ந்து சிறப்புச் செய்தனர். தசரத சக்கரவர்த்தி, திருமால், சப்த ரிஷிகள், பிரம்மன், காமதேனு வழிபட்டு பூஜித்த ஸ்தலமாகும்.

### ஐயம்பேட்டை (சக்கரப்பள்ளி)

சுவாமி : சக்கரவாகேஸ்வரர்

அம்பாள் : தேவநாயகி

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற சுயம்பு மூர்த்தி ஸ்தலமாகும். பாபநாசத்திற்கு மேற்கு திசையில் சுமார் 11 கி.மீ. தூரத்தில் உள்ளது. இதில் சுவாமி கிழக்கு நோக்கியும். அம்பாள் தெற்கு நோக்கியும் இருந்து அருள் புரிகின்றனர். இங்கு திருமால் தவம் செய்து சக்கராயுதம் பெற்றதாக வரலாறு கூறுகிறது. சப்தரிசிகள் வழிபட்ட ஸ்தலம். இங்குள்ள தீர்த்தத்திற்கு காக தீர்த்தம் என்று பெயர்.

### பசுபதிகோயில் (திருப்புள்ள மங்கை)

சுவாமி : பிரம்புரீசுவரர்

அம்பாள் : அல்லியங்கோதை

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். ஐயம்பேட்டைக்கு மேற்கு திசையில் 2 கி.மீ. தூரத்தில் இந்த ஸ்தலம் உள்ளது. பாற்கடலில் வந்த விஷத்தை சிவபெருமான் அமுது ஆக்கிய ஸ்தலம். இங்கு சிவதீர்த்தம் உள்ளது.

### ஆண்டார் கோயில் (கடுவாய்க்கரைபுத்தூர்)

சுவாமி : சொர்ணபுரீசுவரர்
அம்பாள் : சொர்ணாம்பிகை

திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். இதில் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். குடமுருட்டி ஆற்றின் தெற்குக் கரையில் உள்ள ஸ்தலமாகும். ஊரின் மத்தியில் கோயில் அமைந்துள்ளது. திருசூலகங்கை என்ற தீர்த்தம் உள்ளது. காசிப முனிவர், முசுகுந்த சக்கரவர்த்தி, கண்ட தேவர் பூசித்த ஸ்தலம்.

### ஆலங்குடி (திரு இரும்பூளை)

சுவாமி : ஆப்தசகாயேசுவரர்
அம்பாள் : ஏலவார் குழலி

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இதில் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இங்கு ஞான கூபம், பிரம்மதீர்த்தம், அமிர்தபுஷ்கரிணி போன்ற தீர்த்தங்கள் உள்ளது. இங்கு சுவாமி கிழக்கு நோக்கியும், அம்பாள் தெற்கு நோக்கியும் அருள் செய்கிறார்கள். தட்சிணாமூர்த்தி ஸ்தலமாக புகழ்பெற்றுள்ளது. விசுவாமித்திரர், முசுகுந்த சக்கரவர்த்தி, வீரபத்திரர் தவம் செய்த ஸ்தலம். அம்பிகை கடும் தவம் செய்து திருமணம் புரிந்து கொண்ட ஸ்தலம்.

### தருமபுரம்

சுவாமி : தருமபுரீசுவரர்
அம்பாள் : மதுரமின்னம்மை

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். தருமதீர்த்தம், பிரம்மதீர்த்தம் இங்குள்ளது. இங்கு மூலவர் சுயம்புமூர்த்தி. கிழக்கு நோக்கிய கோயில். திருநள்ளாறு சென்று அங்கிருந்து காரைக்கால் செல்லும் சாலையில் சுமார் 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. யாழ்முரி என்னும் பெயரும் உள்ளது. நான்முகன், இமயன் இருவரும் தவம் செய்து அமைதி பெற்ற ஸ்தலம்.



### வேட்டகுடி

சுவாமி : சுந்தரேசுவரர்
அம்பாள் : சௌந்தரநாயகி

இது திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலமாகும். இதற்கு கிழக்கு நோக்கியுள்ள வாயில். அர்சுனன் தவம் செய்து அருள்பெற்ற ஸ்தலம். அதாவது சிவபெருமான் வேடனாகவும் அம்பாள் வேட நாயகியாகவும் வெளிப்பட்டு அர்ச்சுனனுக்கு பாடம் புகட்டி அருள் ஆசி வழங்கிய இடமாகும். தேவதீர்த்தம் கோயிலின் எதிரில் உள்ளது. இதன் ராஜகோபுர சிற்பங்கள் அழகு கொண்டது.

### கோவில்பத்து

சுவாமி : பார்வதீசுவரர்
அம்பாள் : பார்வதியம்மை

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். காரைக்காலில் உள்ள இதற்கு சமீவனம் என்ற பெயரும் உண்டு. இங்கு சூரிய புஷ்கரணி, குகதீர்த்தம், தவத்தீர்த்தம் உள்ளன. இங்கு பிரம்மன் வந்து வழிபட்டதால் பிரம்மலிங்கம் என்ற பெயரும் உண்டு.

### அன்னியூர் (திருவன்னியூர்)

சுவாமி : அக்கினபுரீசுவரர்
அம்பாள் : கௌரியம்மை

இது அக்கினிதேவன் தவம் செய்து நல்வழிப்பட்ட ஸ்தலம். அம்பாள் தவம் செய்து சுவாமியை மணம் புரிந்த ஸ்தலம். மூலவர் சுயம்பு மூர்த்தியாவார். திருநாவுக்கரசர் பாடல் பெற்ற ஸ்தலம். கும்பகோணத்திலிருந்து செல்ல பஸ் வசதி இருக்கிறது. 'ஞானம் காட்டுவர் நன்னெறி காட்டுவர்' என்று இத்தலத்தைப் பற்றி தேவாரம் கூறுகிறது. இங்குள்ள தீர்த்தம் அக்கினித் தீர்த்தமாகும்.

### கருவேலி

சுவாமி : சற்குருநாதேசுவர்
அம்பாள் : சர்வாங்க நாயகி

ஸ்தலத்தின் பெயர் குருவிலி கொட்டிடையாகும். கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். கிழக்கு நோக்கிய சந்நிதியாகும். இங்குள்ள இமயத்தீர்த்தம் உயர்வானது.

### திருவாஞ்சியம்

சுவாமி : வாஞ்சிநாதேசுவர்
அம்பாள் : மங்கள நாயகி

இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல் பெற்ற ஸ்தலம். காசிக்கு இணையாகக் கூறப்படும் இந்த ஸ்தலம் நன்னிலத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருமால் தியானித்து உயர்வு பெற்ற ஸ்தலமாகும். இந்திரன், பராசரர், அத்திரி யாவரும் வழிபட்டு வணங்கிய ஸ்தலமாகும். இங்குள்ள நடராஜர் சபை சிறப்புமிக்கது.

### திருக்கொண்டீச்சரம்

சுவாமி : பசுபதி நாதர்
அம்பாள் : சாந்த நாயகி

திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும். காமதேனு வழிபட்ட ஸ்தலம். இங்கு உமாதேவியார் பூஜித்து உயர்வு பெற்ற ஸ்தலம். இது நன்னிலத்திற்கு அருகில் உள்ளது.

### திருப்பானையூர்

சுவாமி : சௌந்தரேசுவர்
அம்பாள் : பெரிய நாயகி

இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருஞானசம்பந்தர், சுந்தரரால் பாடல் பெற்ற ஸ்தலம். சுவாமி மேற்கு நோக்கியும், அம்பாள் தெற்குப் பார்த்தும் அருள் புரிகின்றனர். சுந்தரருக்கு



பகவான் நடனக் காட்சியளித்த ஸ்தலம். இங்கு ஏழு சிவலிங்கங்கள் உள்ளன. சப்தரிசிகள், பராசர முனிவர் வழிபட்ட ஸ்தலம். பராசரதீர்த்தம், திருமகள் தீர்த்தம் இங்கு உள்ளது. நன்னிலம் அருகில் உள்ளது.

### திருவிற்குடி

சுவாமி : வீரட்டானேசுவரர்
அம்பாள் : ஏலவார் குழலம்மை

இங்கே திருமால் பூசித்து வழிபட்டுச் சென்ற ஸ்தலம். சுவாமி மேற்கேயும், அம்பாள் தெற்கேயும் பார்த்து, அருள்புரிந்து வருகின்றனர். மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். 'சலந்தாரசுரனை' அழித்த ஸ்தலம். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு சங்கர தீர்த்தம், சங்கு தீர்த்தம் உள்ளது.

### திருப்பயற்றூர் - திருப்பயத்தங்குடி

சுவாமி : திருப்பயற்றுநாதர்
அம்பாள் : காவியங்கண்ணி

நன்னிலம் அருகில் உள்ளது இத்தலம். திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். சுவாமி கிழக்கு நோக்கி உள்ளது. பைரவ மகரிஷி பூசித்து வணங்கிய ஸ்தலம். பிரம்மதீர்த்தம், கருணாதீர்த்தம் இங்கு உள்ளது. மூலவர் சுயம்பு மூர்த்தியாகும்.

### திருப்புகலூர்

சுவாமி : அக்கினிபுரீசுவரர்
அம்பாள் : சூளிகாம்பாள்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரால் பாடல் பெற்ற ஸ்தலம். இதன் மூலவர் சுயம்பு. இங்கு சுவாமி கிழக்கேயும், அம்பாள் தெற்கேயும் பார்த்து அருள் புரிகிறார்கள். திருநாவுக்கரசர் முக்தி பெற்ற ஸ்தலம். முருகநாயனார் அவதரித்த ஸ்தலம். சுந்தரருக்குச் செங்கல்லைப் பொன்னாக்கி அற்புதம் நிகழ்த்திய ஸ்தலம்.

**கண்ணபுரம்**

சுவாமி : ராமனதீசுவரர்
அம்பாள் : குளிகாம்பாள்

இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தி. நன்னிலத்திலிருந்து சுமார் 12 கி.மீட்டர். தூரத்தில் உள்ளது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு ராமதீர்த்தம் உள்ளது. சுவாமி கிழக்கு நோக்கியும், அம்பாள் தெற்கு நோக்கியும் அருள்புரிந்து வருகின்றனர்.

**திருச்செங்காட்டங்குடி**

சுவாமி : உத்தராபதீசுவரர்
அம்பாள் : குளிகாம்பாள்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். இக்கோயிலுக்கு, கணபதி பூசித்தமையால் கணபதீச்சம் என்ற பெயரும் வந்தது. இதில் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். பகவான் பைரவர் வேடத்தில் வந்து சிறுத்தொண்ட நாயனாரிடம் பிள்ளைக்கறியமுது கேட்டு அருள்புரிந்த ஸ்தலம். சத்தியதீர்த்தம், சூரிய தீர்த்தம், அக்கினி தீர்த்தம், இமயத் தீர்த்தம் என்று 9 வகையான தீர்த்தங்கள் உள்ளது.

**திருமருகல்**

சுவாமி : ரத்னகிரிசுவரர்
அம்பாள் : ஆமோதள நாயகி

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். இலக்குமி தீர்த்தம் இங்கு உள்ளது. கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்ட கோயில். இங்கு வந்து தங்கியிருந்த திருமணமாகவேண்டிய தம்பதிகளின் முறை மாப்பிள்ளை பாம்பு கடித்து இறந்து விட்டார். அழுகைக் குரல் கேட்டு அங்கிருந்த திருஞானசம்பந்தர் உயிர்பெற்று எழச்செய்தார். இங்கு இறைவன் தன் திருக்கோலத்தை திருஞான சம்பந்தருக்குக் காட்டிய இடம். நன்னிலம் அருகில் உள்ள ஸ்தலம் இது.



**சீயாத்தமங்கை**

சுவாமி : பிரமபுரீசுவரர்
அம்பாள் : உபய புஷ்பவிலோசனி

திருநீலநக்கநாயனார் பிறந்த ஸ்தலம். மூலவர் சுயம்புமூர்த்தி. திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். நன்னிலம் அருகில் உள்ளது. இங்கு முடிகொண்டான் ஆறு ஓடுகிறது. சூரியதீர்த்தம், சந்திரதீர்த்தம் உள்ளது. திருநள்ளாறு மிக அருகில் இருக்கிறது.

**திருப்பள்ளி முக்கூடல்**

சுவாமி : முக்கண் நாதர், முக்கூடல் நாதர்
அம்பாள் : அஞ்சனாட்சியம்மை

திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருவாரூக்கு அருகில் உள்ளது. முக்கூடல் தீர்த்தம் இங்குள்ளது. ஸ்ரீராமர், மூர்க்க மகரிஷி பூஜித்த ஸ்தலம். ஜடாயு நற்கதியடைந்த ஸ்தலமானதால் இதை குருராமேஸ்வரம் என்று அழைப்பர். அரசிக்கு அம்பாள் குழந்தையாக வந்து பிறக்க இறைவன் வேதியராக வந்து திருமணம் புரிந்து கொண்ட ஸ்தலம்.

**கரையபுரம்**

சுவாமி : கரவீரேசுவரர்
அம்பாள் : பிரத்தியட்ச மின்னம்மை

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். அனவரத தீர்த்தம் இங்குள்ளது. கௌதமர் பூஜித்து வணங்கிய ஸ்தலம். திருவாரூர் கும்பகோணம் சாலையில் இந்த ஊர் உள்ளது. இக்கோயிலுக்கு கரவீரம் என்ற பெயர் உண்டு. இதன் ஸ்தல மரம் அலரியாகும். சிறிய ஊரானாலும் கோயிலும், திருவுருவமும் பெரிதாக உள்ளது.

## மணக்கால் ஐயன்பேட்டை

சுவாமி : பிரியா ஈசுவரர்
அம்பாள் : அபிமின்னாம்பிகை

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு மூலவர் சுயம்பு. பிருங்கி முனிவர், கௌதமர் பூஜித்த ஸ்தலம். சுவாமி இங்கு கிழக்கு நோக்கி இருக்கிறார். திருமால் மோகினி அவதாரம் பெற்று வழிபட்ட ஸ்தலம். இதன் இயற்பெயர் திருப்பெருவேளூர் ஆகும். நன்னிலத்திலிருந்து சுமார் 9 கி.மீ. தூரம் உள்ளது. சரவணப் பொய்கை தீர்த்தம் இங்கு உள்ளது. இந்தக் கோயில் கோச்செங்கட் சோழன் கட்டியது. இதன் அருகில் பல சிவதலங்கள் உள்ளது.

## தலையாலங்காடு

சுவாமி : நடனேசுவரர்
அம்பாள் : உமாதேவி

திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு மூலவர் சுயம்புமூர்த்தியாகும். கபில முனிவர் வழிபட்ட ஸ்தலமாகும். இங்குள்ள சங்கு தீர்த்தம் நோய் தீர்க்கும் சக்தி கொண்டது. நன்னிலத்திற்கு அருகில் உள்ளது.

## கொட்டாரம்

சுவாமி : ஐராவதீசுவரர்
அம்பாள் : சுகந்த குந்தளாம்பிகை

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். குமார புவனேசுவரர், அகத்தியர் வெள்ளை யானையை வழிபட்டு வணங்கிய ஸ்தலம். அத்துடன் இங்கு சபமகரிஷி தேனீ வடிவம் கொண்டு வணங்கிச் சென்ற இடம் என்று சொல்லப்படுகிறது. இக்கோவில் பேரளத்திலிருந்து சுமார் 12 கி.மீ. தூரத்துக்குள் இருக்கும்.



## அம்பல்

சுவாமி : பிரமபுரீசுவரர்
அம்பாள் : சுகந்த குந்தளாம்பிகை

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். கோச்செங்கட் சோழன் திருப்பணி செய்த ஸ்தலம். சோமாசி மாற நாயனார் வாழ்ந்த இடம். பிரம்மன் இங்கு வந்து வழிபட்ட ஸ்தலமாகும். இதன் இயற்பெயர் பெருந்திருக்கோயில்.

## திருமானம்

சுவாமி : மகாளேசுவரர்
அம்பாள் : பட்சயாம்பிகை

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இதில் மூலவர் சுயம்பு. அம்பர் அருகில் உள்ளது. கோமாசி மாற நாயனார் சோமயாகம் செய்த ஸ்தலம். இவருக்கு இறைவன் வேடனாகவும், அம்பாள் வேடுவச்சியாகவும் வந்து காட்சி தந்து அருள்புரிந்த ஸ்தலம். அம்பர் மாகாளம் என்ற பெயரும் உண்டு.

## மீயச்சூர்

சுவாமி : மேகநாதர்
அம்பாள் : சௌந்தரநாயகி

இது திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். பேரளத்தின் அருகில் உள்ளது. இங்கே சூரியன் வழிபட்டு நற்பேறு பெற்ற வரலாறு உண்டு. சேக்கிழார், சப்தமாதர்கள் வழிபட்ட ஸ்தலம்.

## செதலபதி

சுவாமி : முத்தீசுவரர்
அம்பாள் : சுவர்ணவல்லி

திருஞானசம்பந்தர் சுவாமிகளால் பாடல் பெற்ற ஸ்தலம். கோயிலின் பெயர் மதிமுத்தம். இது இராமர், லட்சுமணர் வழிபட்டு பூஜித்த லிங்கம். கூத்தானூருக்கு அருகில் உள்ளது.

**திருப்பாம்புரம்**

சுவாமி : பாம்புரேசுவரர்
அம்பாள் : பிரம ராம்பிகை

இது திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். ஆதிசேஷன் வழிபட்ட ஸ்தலம். தோஷங்கள் நிவர்த்திக்காகவும், புத்திரப் பேற்றுக்காகவும் வழிபாடு செய்து வருகின்றனர். ஆதிசேஷ தீர்த்தம் உள்ளது. பேரளத்திலிருந்து மிக அருகில் இந்த ஊர் உள்ளது.

**திருச்சிறுகுடி**

சுவாமி : மங்கள நாதர்
அம்பாள் : மங்கள நாயகி

இது சுயம்பு மூர்த்தி. திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இங்குள்ள தீர்த்தம் மங்கள தீர்த்தமாகும். கொடைவள்ளல் வண்ணன் வாழ்ந்து புகழ்பெற்ற இடமாகும். கந்தருவர், அங்காரகன் வழிபட்ட ஸ்தலமாகும்.

**கீவளூர்**

சுவாமி : அட்சயலிங்கேசுவரர்
அம்பாள் : சுந்தரகுஜாம்பாள்

இதன் இயற்பெயர் திருக்கீழ்வேளூர் என்பதாகும். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். திருவாரூரிலிருந்து சுமார் 14 கி.மீ. தூரத்தில் உள்ளது. முருகப்பெருமான் வழிபட்ட ஸ்தலம். அகத்தியர், மார்க்கண்டேயர், ஆதிசேடன், வசிஷ்டர் போன்றவர்கள் வழிபட்டு பயன்பெற்ற ஸ்தலம்.

**விளமல்**

சுவாமி : பதஞ்சலி மனோகரர்
அம்பாள் : மதுரபாஷினி

திருவாரூருக்கு அருகில் உள்ளது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற திருவிளமர் ஸ்தலமாகும். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். கோயில் ஓடம் போக்கி ஆற்றின் கரை ஓரத்தில்



உள்ளது. இங்கு பதஞ்சலி முனிவர் வழிபட்ட வரலாறு இருக்கிறது.

**திருக்காரைவாசல்**

சுவாமி : கண்ணாயிரநாதர்
அம்பாள் : கைலாசநாயகி

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். சேஷதீர்த்தம், பிரம்மதீர்த்தம் என்று இரண்டு தீர்த்தம் உள்ளது. கபால முனிவருக்கு காட்சி அளித்த ஸ்தலம். பதஞ்சலி முனிவருக்கு 7 வகையான தாண்டவங்களைக் காட்டி காட்சியளித்த ஸ்தலம்.

**கீழ கண்ணப்பூர்**

சுவாமி : நடுதறி நாதர்
அம்பாள் : மாதுமையம்மை

திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். காணாமிர்தம், ஞானாமிர்தம் தீர்த்தமாகும். இடும்பன் வழிபட்டு நற்பேறு எய்திய இடம். இங்கு ஒரு சைவ சமயத்தை சேர்ந்த பெண் தனது வைணவக் கணவனால் சிவலிங்கத்தை வழிபட வந்த தடையை எல்லாம் தாண்டி வழிபட்டதால் அவளது பக்தியை மெச்சி காட்சி கொடுத்த ஸ்தலம்.

**திருவலிவலம்**

சுவாமி : மனத்துணை நாதர்
அம்பாள் : அங்கயற்கண்ணி

திருஞானசம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர் மூவராலும் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்பு மூர்த்தி. காரண மாமுனிவர் வழிபட்ட ஸ்தலம். இதற்கு வில்வனம், ஏகச்சக்கரபுரம் என்ற பெயர்கள் இருக்கின்றன. திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் உள்ளது.

### திருநெய்ப்போரூர்

சுவாமி : வன்மீகநாதர்
அம்பாள் : உமாபரமேஸ்வரி

நமிநந்தியடிகள் நாயனார் இறைத்தொண்டு செய்த ஸ்தலமாகும். இவர் வள்ளலார், சீரடிசாய்பாபா போன்று தண்ணீரில் விளக்கெரித்தவர். சுயம்பு மூர்த்தியாகும். திருவாரூக்கு தென்பகுதியில் சுமார் 7 கி.மீ. தூரத்தில் உள்ளது.

### மன்னார்குடி

சுவாமி : சொக்கநாதர், ஜெயங்கொண்டநாதர்
அம்பாள் : மீனாட்சியம்மன், பெரிய நாயகி

இங்கு ஏழு கோயில்கள் இருக்கின்றன. இங்கு வந்து வியாசமுனிவர் வழிபட்டதாக வரலாறு கூறுகிறது. வியாசபுரம், ராஜராஜேஸ்வரம் என்ற மற்ற பெயர்களும் உள்ளது. அண்ணாமலைநாதர், ஏகாம்பரேசுவரர், காசிவிஷ்வநாதர், நீலகண்டேசுவரர் திருக்கோயில்களும் உள்ளது.

### கோயில் வெண்ணி

சுவாமி : வெள்ளிக்கரும்பேசுவரர்
அம்பாள் : சௌந்தரநாயகி

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவராலும் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். நீடாமங்களத்திற்கு அருகில் உள்ளது. இங்குள்ள தீர்த்தம் சூரியதீர்த்தமாகும். சங்ககாலப் புலவர் வெண்ணிக்குயத்தியார் வாழ்ந்த ஊராகும்.

### பாமணி

சுவாமி : நாகநாதர்
அம்பாள் : அமிர்தநாயகி

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலமாகும். தீர்த்தம் நாகதீர்த்தமாகும். இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தி. ஆதிசேடன் தனஞ்சயர் உருவில் வந்து வழிபட்ட ஸ்தலம். இங்கு இறைவன்



காமதேனு பசுவுக்கு அருள்புரிந்துள்ளார். மன்னார்குடி அருகாமையில் இந்த ஸ்தலம் உள்ளது.

### திருப்பூவனூர்

சுவாமி : சதுரங்கவல்லபேசுவரர்
அம்பாள் : கற்பகவல்லி, ராஜராஜேஸ்வரி

திருநாவுக்கரசர் பாடல் பெற்ற ஸ்தலம். இங்குள்ள மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். மன்னார்குடியிலிருந்து நீடாமங்கலம் செல்லும் சாலையில் உள்ளது. அம்பாளை சதுரங்கம் விளையாடி ஜெயித்து திருமணம் செய்து கொண்டதனால்தான் சுவாமிக்கு சதுரங்கவல்லபேசுவரர் என்ற பெயர் வந்ததாக ஸ்தல வரலாறு கூறுகிறது.

### மேலகோட்டூர்

சுவாமி : கொழுந்தீசுவரர்
அம்பாள் : மதுரபாஷிணி

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். ஒன்பது தீர்த்தங்கள் இங்கு உள்ளது. ஐராவதம், அரம்பை வணங்கி பூஜித்த ஸ்தலம். மன்னார்குடிக்கு கிழக்குப் பக்கமாக சுமார் 14 கி.மீ. தூரத்தில் உள்ளது.

### கீழக்கோட்டூர்

சுவாமி : ஐராவதேஸ்வரர், மணியம்பலநாதர்
அமுதலிங்கேஸ்வரர்
அம்பாள் : அமுதாம்பிகை, மணியம்பல நாயகி

கருவூர்த்தேவர் பாடல் பெற்ற ஸ்தலம். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். சிவபெருமான் திருநடனம் காட்டிய ஸ்தலம். நாகர், ஐராவதம், இந்திரன் வழிபட்ட ஸ்தலம். இதற்கு நாக நாதேச்சரம் என்ற வேறு பெயர்களும் உண்டு.

### ஓகைப் பேரையூர்

சுவாமி : ஜகதீஸ்வரர்
அம்பாள் : ஜகந்நாயகி

திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற ஸ்தலம். இதில் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். பேரெயில் முறுவலார் என்னும் பெண் புலவர் இயற்றிய பாடல்கள் புறநானூறு குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளன. மன்னார்குடி திருவாரூர் செல்லும் வழியில் ஸ்தலம் உள்ளது.

### திருநெல்லிக்கா

சுவாமி : நெல்லிநாதேஸ்வரர்
அம்பாள் : மங்களநாயகி

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். இதில் மூலவர் சுயம்பு மூர்த்தி. துர்வாசமுனிவருக்கு கோபத்தை நீக்கி நல்லருள் செய்த ஸ்தலம். அம்பாள் உத்தம சோழனின் புதல்வியாக அவதரித்து சிவபெருமானை மணம்புரிந்த ஸ்தலம். திருமால், சூரியன், சந்திரன், சனி, பிரம்மன், கந்தவர்கள் வழிபட்டு நல்லருள் பெற்ற ஸ்தலமாகும்.

### நாட்டியத்தான்குடி

சுவாமி : ரத்தினபுரிசுவரர்
அம்பாள் : மங்களாம்பிகை

சுந்தரரால் பாடல் பெற்ற ஸ்தலம். கோட்புலி நாயனார் தோன்றிய ஊர். இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். கோட்புலி நாயனாரின் மக்களாகிய சிங்கடி, வனப்பகை இருவரையும் இறைவன் தன் புதல்வியராக ஏற்றுக்கொண்ட ஸ்தலமாகும். இங்கு யானை ஒன்று இறைவனைப் பூஜித்து நற்பேறு பெற்ற ஸ்தலமாகும். இங்கு சுந்தரருக்கு சிவபெருமான் உழவனாகவும் அம்பாள் நடவுநட்டுக் கொண்டிருந்தும் காட்சி கொடுத்த ஸ்தலமாகும்.

### பவண்டுதுறை

சுவாமி : வெண்டுதுறை நாதர்
அம்பாள் : பிரகதாம்பாள்

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலமாகும். இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். இங்கு சுவாமி கிழக்கு நோக்கி உள்ளது. பிரம்மன், திருமால், துருவன், வித்தியாதரர்



ஆகியோர் வழிபட்டு வணங்கிய ஸ்தலமாகும். பிருங்கி முனிவர் வண்டு உருவம் கொண்டு வந்து சிவபெருமானை வழிபட்ட ஸ்தலமாகும். மன்னார்குடியிலிருந்து பஸ் வசதி உண்டு.

### திருக்களர்

சுவாமி : பாரிஜாதவனேசுவரர்
அம்பாள் : அமுதவல்லியம்மை

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலமாகும். இங்கு மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். ஞானத்தீர்த்தம், சிந்தாமணி தீர்த்தம், பிரம்மதீர்த்தம் உள்ளது. துர்வாசமுனிவர் வழிபட்டு வணங்கிய ஸ்தலம். பராசரமுனிவர், காலவமுனிவர் வழிபட்டு வந்த லிங்கம் உள்ளது. மன்னார்குடியிலிருந்து சுமார் 20 கி.மீ. தூரத்தில் உள்ளது.

### தண்டலைச்சேரி

சுவாமி : நீள்நெறிநாதர்
அம்பாள் : ஞானாம்பிகை

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். இதன் மூலவர் சுயம்பு மூர்த்தியாகும். கோயிலின் பெயர் நீள்நெறி என்பதாகும். **அரிவாட்டாயனார்** தவம் இருந்து முக்தி பெற்ற ஸ்தலமாகும். படிக்காசுப் புலவர் பாடிய தண்டலை, நீள்நெறி என்ற பாடல் **சதகம்** இந்த ஸ்தலத்தில் உள்ள சிவபெருமானைப் பற்றியதாகும். திருத்துறைப்பூண்டி அருகில் உள்ளது.

### பன்னத்தெரு

சுவாமி : பன்னகாபரணர்
அம்பாள் : சாந்த நாயகியம்மை

இங்கு மூலவர் சுயம்பு லிங்கமாகும். கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பாப் பாடல் பெற்ற ஸ்தலமாகும். திருத்துறைப்பூண்டிக்கு அருகில் இந்த ஊர் உள்ளது.

'பவளமாய் மணியே பணிசெய்வோர்க்கு இரங்கும்
பசுபதீ பன்னகா பரணா' என்ற பாடல் இந்த ஊரில் உள்ள சிவபெருமானை உயர்த்திக் காட்டுகிறது.

**கச்சினம்**

சுவாமி : கைச்சினேஸ்வரர்

அம்பாள் : சுவேதவளை நாயகி

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். மூலவர் சுயம்பு லிங்கமாகும். அகத்தியர், இந்திரன், மித்ரசகன் போன்றோர் வழிபட்ட ஸ்தலமாகும். கௌதமமுனிவரால் இந்திரனுக்கு உண்டான சாபம் நீங்கிய ஸ்தலமாகும்.

**திருத்தெங்கூர்**

சுவாமி : ரஜதரீசுவரர்

அம்பாள் : பெரிய நாயகி

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு மூலவர் சுயம்புலிங்கம். திருமகள், அகலி, அரிந்தமன் மன்னன் வழிபட்ட ஸ்தலம். திருத்துறைப்பூண்டிக்கு வடபுறம் சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**கர்மயோகி யார்?**

கார் ஓட்டுனர் எப்படி பாட்டு கேட்டுக் கொண்டே கார் ஓட்டுகிறாரோ அதேபோன்று இறைவனை நினைத்துக் கொண்டே எல்லா வேலைகளையும் செய்பவரே கர்மயோகி.

**புண்ணியம் பெற வழிபடும் தினங்கள் :-**

சிவன் கோயில்களில் சோமவாரம், சிவராத்திரி, பிரதோஷம் போன்ற விரத தினங்களில் வழிபாடு செய்பவர்களும், அன்னதானம் செய்பவர்களும் பாவங்கள், நோய்கள் நீங்கப் பெற்று புண்ணிய நலன்களை எளிதில் பெறுவார்கள். அத்துடன் அருளும் பொருளும் கிடைக்கும்.



## இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்களின் கடமைகள்

1. உடலைப் பாதுகாப்பது.
2. உள்ளத்தில் மனக்கோயில் அமைப்பது.
3. மனக்கோயிலில் இருந்து தியானம் செய்வது.
4. அவ்வப்போது விரதமிருந்து தியானிப்பது.
5. மந்திரம் சொல்லி மனக்கோயிலில் இறைவனை பூஜிப்பது.

வழிபடும் முறை

இறைவழிபாடு மூச்சுப்போன்று தொடர்ந்து நமது எண்ணத்தில் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். ஆள் நடமாடும் நெருக்கடியான வீதியில் கார் ஓட்டும்போது மெதுவாகச் செல்வதுபோல் வேலை நேரங்களில் இறைவனை நினைத்துக்கொண்டே செயல்பட வேண்டும்.

அதே நேரத்தில் மெயின் ரோட்டில் கார் ஓட்டும்போது வேகமாகச் செல்வதுபோல் ஓய்வு நேரத்தில் கதை பேசாது தியானப் பயிற்சிகளை அதிகரிக்க வேண்டும். பயிற்சிகளை நமது சபையில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். புத்தகத்தில் கொடுத்தபடி மூலஸ்தானத்தை சுற்றும் பயிற்சியைத் தொடர்ந்து செய்யலாம்.

இறைவனைத் தவிர உங்கள் ஆன்மாவிற்கு உதவ யாரும் வர முடியாது. குரு உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவார். பணம் செலவு செய்து இறைவனைப் பிடிக்க முடியாது. இறைவன் உங்கள் வீட்டில் நீங்காது இருப்பார். சரணடையும் போது உங்கள் சொத்து சுகம் அனைத்தும் அவருடையது. ஏனென்றால் யாவும் அவர் கொடுத்தது என்பதை நீங்கள் உணர்ந்து விட்டீர்கள்.

‘‘தான் பெற்ற பேரின்பத்தை மற்றவர்கள்
பெற உழைப்பவர் மனிதரில் சிறந்தவர்’

**குருஜி R.I.D. சிவா**